வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்
ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram – மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 27.08.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 260 | பக்கங்கள் : 20



07
நிலவு தாண்டிடியும் தொடரும் பயணம்!



08
ராஜபக்ஷக்களின் மீள்வருகை பற்றிய கதைகள்



09
2024 ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் ஒருவரை நிறுத்துவது...!



10
புகுஷிமா அனுஉலை கழிவுநீர் பசுபிக் கடலில் திறப்பு!

# 10 பௌத்தர்களுக்கு ஒரு புத்த விகாரை!

## குச்சவெளியிலேயே இந்த நிலை



**திருகோணமலை, ஓகஸ்ட் 27**

**238 சிங்கள - பௌத்த மக்கள் மட்டுமே வாழும் திருகோணமலையின் - குச்சவெளி பிரதேச செயலர் பிரிவில் 23 விகாரைகள் அல்லது பௌத்த வழிபாட்டிடங்கள் நிர் மாணிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சில இன்னும் கட்டுமானப் பணியில் உள்ளன என்று அறிய வருகின்றது.**

தென்னமரவாடி கிராம அலுவலர் பிரிவில் பௌத்தர்கள் இருவரே வசிக்கின்றனர். இந்நிலையில், இங்கு சங்கமலை புராண ரஜமகா விகாரை நிறுவப்படுகின்றது. புல்மோட்டை - 4 கிராம அலுவலர் பிரிவில் 98 பௌத்தர்கள் வாழ்கின்றனர். இங்கு, சந்திரபுர புராண ரஜமகா விகாரை, சிறீ தர்மோதய தகம பன்சல என இரு பௌத்த வழிபாட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

புல்மோட்டை - 02 கிராம அலுவலர் பிரிவில் 9 பௌத்தர்கள் வாழ்கின்றனர். ஆசிரி ஹந்த புராண ரஜமகா விகாரை அமைபடுகிறது. புல்மோட்டை - 01 கிராம அலுவவலர் பிரிவில் 42 பௌத்தர்கள் வசிக்கின்றனர். இங்கு, சிறீ சத்தர்ம யுத்திக புராண ரஜமகா விகாரை, அத்தனகை கந்த புராண ரஜமகா விகாரை, யனோஜ புராண ரஜமகா விகாரை, மிகிந்துலேனபுராண ரஜமகா விகாரை என 4 விகாரைகள் 15

# கஜேந்திரகுமாரின் இல்லத்தின் முன்பாக நேற்றும் போராட்டம்!



*கொழும்பு, ஓக. 27*

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பு - பம்பலப்பிட்டியில் உள்ள இல்லம் முன்பாக நேற்றும் போராட்டம் இடம்பெற்றது.

பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பிலவின் தலைமையில் அந்தக் கட்சியின் உறுப்பினர்கள், பிக்குகளின் பங்கேற்புடன் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் இனவாத 15

# இந்திய எதிர்ப்பு மனநிலை வாக்குகளை அதிகரிக்கவே கம்மன்பில போராட்டம்!

*மறவன்புலவு சச்சிதானந்தம் சாடல்*

*யாழ்ப்பாணம், ஓக. 27*

"இந்தியாவுக்கு எதிரான தமிழர்களின் வாக்கு வங்கியை பெருக்க வேண்டும் என்பதே உதய கம்மன்பில தரப்பினரின் போராட்டத்தின் அடித்தளம்"- இவ்வாறு குற்றஞ் சுமத்தியுள்ளார் ஈழம் சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தன்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பியின் கொழும்பு இல்லத்தின் முன்பாக நேற்றும், நேற்றுமுன்தினமும் உதய கம்மன்பில எம். பியின் அழைப்பின் 15

# ஐ. நா. கூட்டத் தொடருக்காக ரணில் அமெரிக்கா பயணம்!



*கொழும்பு, ஓக. 27*

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் செப் ரெம்பர் மூன்றாவது வாரத்தில் அமெரிக்கா செல்லவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை 78ஆவது 15

# 4 வாரங்களுக்கே நீர் மின்சாரம்!

*கொழும்பு, ஓக. 2*

இன்னும் நான்கு வாரங்களுக்கு போதுமான மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு போதுமான தண்ணீரே உள்ளது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நீர் மின் உற்பத்தி 15 வீதமாக குறைந்துள்ளது. இருப்பினும் அனல் மின் உற்பத்தி காரணமாக மின் வெட்டு தடை இல்லாமல் மின்சாரத்தை வழங்க முடியும்.

தொடர் வறட்சியால் சமனல ஏரி நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு ஒரு வீதமாகவும், காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு 15

# அயலவரின் ஒற்றுமையால் கொள்ளை தடுக்கப்பட்டது!

*யாழ்ப்பாணம், ஓக. 27*

வீடு ஒன்றுக்குள் புகுந்த மூவர் கொண்ட முகமூடி கொள்ளையர்கள் அயலவர்கள் திரண்டதால் கொண்டு வந்த கத்தியையும் விட்டுவிட்டு தலைதெறிக்க தப்பி ஓடியது.

திருநெல்வேலி - பால்பண்ணை பகுதியில் நேற்று சனிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறியவருவதாவது, 15

# அரசியல் களத்தில் விரைவில் அதிரடி மாற்றங்கள் நிகழும்!

*மைத்திரிபால சிறிசேன*



*கொழும்பு, ஓக. 27*

"இலங்கை அரசியல் களத்தில் விரைவில் அதிரடி மாற்றங்கள் காத்திருக்கின்றன. நாம் மக்கள் பக்கம் நின்றே தீர்க் கமான முடிவுகளை எடுப்போம்."

- இவ்வாறு பரபரப்புத் தகவலை வெளியிட்டார் 15

# கடல்நீரை குடிநீராக்கும் திட்டம் யாழில் 3 இலட்சம் பேருக்கு பயன்!

*கொழும்பு, ஓக. 26*

கடல் நீரை சுத்திகரித்து நாளாந்த பயன்பாட்டுக்கான நீராக மாற்றும் திட்டம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது.

இதன் மூலம் 60 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த சுமார் 3 இலட்சம் பேருக்கு நீர் வழங்க முடியும் என்றும் அந்த சபை தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 15

# நலன்புரி கொடுப்பனவு நாளை முதல்!

*கொழும்பு, ஓக. 27*

ஆறுதல் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகள் நாளை ஆரம்பமாகும் என்று நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

அனைத்து தரநிலைகளையும் பூர்த்தி செய்த பயனாளிகள், முதல் கட்டமாக பலன்களை பெற வாய்ப்பு ஏற்படும்.

நலன்புரி நன்மைகள் சபை தலைவரான ஜி. விஜயரத்ன இராஜினாமா செய்ததால், பணத்தை விடுவிப்பதில் ஏற்பட்ட சிக்கல்கள் காரணமாக நிவாரணம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இப்படியும் நடக்கிறது

கவிஞர் கண்ணதாசன் ஏராளமான குட்டிக் கதைகளை எழுதியிருக்கிறார். அவர் எழுதிய கதை ஒன்று இப்போது ஞாபகத்துக்கு வருகின்றது.

எமதர்மன் சித்ரகுப்தனிடம், 'இனிமேல் சாகின்றவர்களின் நாக்கை மட்டும் தனியாக அறுத்துக் கொண்டு வந்துவிடு !' என்று சொன்னான்.

அதுபோல் சித்ரகுப்தனும் நாக்குகளை மட்டும் அறுத்துக்கொண்டு வந்தான்.

அறுத்த பின்னாலும், சில நாக்குகள் துடித்துக்கொண்டு கிடந்தன. சில மரத்துப் போயும், சில இரு கூறாகப் பிளந்து போயும் இருந்தன.

'இவையெல்லாம் யாருடையவை?' என்று எமன் கேட்டான்.

'பிரபு...! இரட்டையாகக் கிடக்கும் நாக்குகள் எல்லாம் சிங்கள அரசியல்வாதிகளுடையது. துடித்துக்கொண்டிருக்கும் நாக்குகள் எல்லாம் தமிழ் அரசியல்வாதிகளுடையது' என்றான் சித்ரகுப்தன்.

'ஓர் உணர்ச்சியும் இல்லாத மற்ற நாக்குகள் .....?' என்று எமன் கேட்க,

'அவர்களுக்கு வாக்குப் போட்ட மக்களுடையது!' என்று அமைதியாக சொன்னான் சித்ரகுப்தன்.

நமது வடக்கு மாகாண அவைத் தலைவர் பற்றி இந்தப் பத்தியில் பல தடவைகள் எழுதியிருக்கின்றேன். இன்றிருக்கும் அரசியல்வாதிகளில் நிர்வாக திறமையுள்ள ஒருசிலரில் அவரும் ஒருவர். மற்றைய ஒருவர் யார் என்று கேட்டுவிடாதீர்கள். அவர் மட்டுமே ஒருவர் என்று எழுதுவது அவரை மிகைப்படுத்திக் கூறுவதாக ஆகிவிடும் என்ற எண்ணத்தில் அப்படிக் கூறியிருக்கின்றேன்.

அப்படி அவரைப்பற்றி எழுதியதற்காக அவர் ஒரு சிறந்த அரசியல்வாதி என்று நான் கூறுவதாக யாரும் அர்த்தப்படுத்தினால் அதற்கு நான் பொறுப்பல்ல.

அண்மையில் அமெரிக்க தூதுவர் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது, அவரும் ரெலோ, புளொட் கட்சித் தலைவர்களுடன் சேர்ந்து தூதுவரைச் சந்தித்திருந்தார்.

இந்தச் சந்திப்பு தொடர்பாக சிவஞானம் ஐயா தெரிவித்திருந்த கருத்துகள் நேற்றுமுன்தினம் ஈழநாடுவில் வெளியாகியிருந்தது.

அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையின் தற்போதைய நிலையை ஐ. நாவுக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று கோரிக்கை விடுத்த அவர், 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் பாராளுமன்றத்துக்கு இந்த விடயங்களை பாரப்படுத்த வேண்டிய தேவையில்லை என்றும் அரசமைப்பில் இருக்கின்ற விடயங்களை ஜனாதிபதி அமுல்படுத்த முடியும் என்றும் தெரிவித்திருக்கிறார். அதனைத்தான் சம்பந்தரும் அடிக்கடி கூறிவருகிறார்.

அதுவல்ல நாம் சொல்ல வருவது, அந்தக் கூட்டத்தில் தான் வலியுறுத்தியது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள சிவஞானம் ஐயா, பின்வருமாறு கூறியிருக்கிறார்.

'13ஆம் திருத்தத்தை தான் நடைமுறைப்படுத்துவேன் என்று ஜனாதிபதி சொல்கிறார். அப்படி இல்லை என்று எதிர்ப்பவர்கள் மாகாண சபை முறைமையை இல்லாது செய்ய சொல்கின்றார்கள். இதை பார்க்கும்போது அவரே மறைமுகமாக இதனை சொல்லி இருக்கின்றார் எனத் தெரிகிறது.

வரி விதிப்பை பொறுத்தவரை கோட்டாபயவுக்கு தவறான ஆலோசனை வழங்கப்பட்டுதான் பொருளாதார பிரச்னை ஏற்பட்டது. தற்போது இந்த அரசாங்கமும் கல்விமான்களுக்கள், மருத்துவர்கள் போன்றோருக்கு புதிதாக வரி விதிப்பதன் மூலம் அவர்கள் வெளிநாடு போகின்றபோது மக்களையே பாதிக்கப் போகிறது. ஆனபடியால் அமெரிக்கா போன்ற நாடுகள் இந்த விடயங்களை இனி ஐக்கிய நாடுகள் சபை மட்டத்துக்கு கொண்டு செல்ல வேண்டும்'

இதுதான் அவர் அமெரிக்க தூதுவரிடம் கூறியது.

பதின்மூன்றிலுள்ள விடயங்களை நிறைவேற்றுவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்கின்றது. அவர் தனது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தியே அரசியலமைப்பு சட்டத்திலுள்ள விடயங்களை அமுல்படுத்தலாம் என்கிறார் சிவஞானம் ஐயா. ஆனால், அவரின் கட்சியிலுள்ள சுமந்திரனோ அவர் மக்கள் ஆணை பெற்ற ஜனாதிபதியல்ல என்கிறார்.

அரசியலமைப்பிலுள்ள விடயங்களை மக்கள் ஆணை பெறாத ஒரு ஜனாதிபதியாக தான் அமுல்படுத்த முயன்றால், அதனை யாரேனும் சட்ட வியாக்கியானத்துக்கு உட்படுத்தலாம் என்பதால், அதனை அமுல்படுத்த பாராளுமன்றின் அனுமதியை ஜனாதிபதி கோருவதில் தவறிருக்கும் என்று யாரும் நம்பப்போவதில்லை. அதிலும் குறிப்பாக அமெரிக்கா போன்ற ஒரு நாடு நம்பப்போவதில்லை.

அதைவிட முக்கியமானது, கல்விமான்கள், மருத்துவர்கள் போன்ற அதிஉச்ச சம்பளம் பெறுகின்றவர்களிடமிருந்து வரி அறவிடப்படுவதால் அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறுகின்றனர் எனவும், அது மக்களைப் பாதிக்கும் என்பதால் அதனை ஐ. நாவுக்கு கொண்டுபோக வேண்டும் என்கிறார் சிவஞானம் ஐயா. இதன்மூலம் அவ்வாறானவர்களின் வெளியேற்றத்தை நியாயப்படுத்த அவர் முயல்கிறார்.

ஆனால், அதனை அமெரிக்கா ஆதரிக்குமா என்பது பற்றி அவர் யோசித்திருப்பதாக தெரியவில்லை. அமெரிக்கா போன்ற நாடுகளில் மருத்துவர்கள் மட்டுமல்ல, உயர் வருமானம் பெறுகின்ற அத்தனை பேருமே தமது சம்பளத்தில் நாற்பது வீதத்துக்கும் அதிகமான தொகையை வரியாகச் செலுத்தி வருகின்றனர். அதிகம் ஏன் அந்த தூதுவர் அம்மாவும் தனது சம்பளத்தில் நாற்பது வீதத்துக்கும் அதிகமான தொகையை வரியாகச் செலுத்திக்கொண்டே இருப்பார். அப்படி இருக்கையில் அது தவறு என்று அவரிடமே ஐ. நாவுக்கு முறையிடச் சொல்வது புத்திசாலித்தனமானதா என்பது தெரியவில்லை.

ஒருவரிடம் கோரிக்கை முன்வைக்கின்றபோது அதுபற்றி ஒன்றுக்கு பல தடவை யோசிக்க வேண்டும் என்பதை அறியாதவரல்ல நமது அவைத் தலைவர்.

- ஊர்க்குருவி.

## நாட்டின் சட்டங்கள் தொடர்பில் ஒரு வாரம் விழிப்புணர்வு கூட்டம்

### இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்

கொழும்பு, ஓக. 27

நாட்டின் பிரதான சட்டங்கள் தொடர்பில் மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்த இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இதேபோன்று பொது மக்கள் மத்தியிலும் நடைமுறையில் உள்ள சட்டங்கள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்த சட்டத்தரணிகள் சங்கம் உத்தேசித்துள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் 25ஆம் திகதி முதல் ஒக்ரோபர் முதலாம் திகதி வரை இந்த செயல்பாட்டை நாடு முழுவதும் முன்னெடுக்கவுள்ளதாக சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நீதியின் வாரம் என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த விழிப்புணர்வு



செயல்பாட்டை சட்டத்தரணிகள் சங்கம் முன்னெடுக்கவுள்ளதுடன், இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரத்ன,

"நடைமுறையில் உள்ள சட்டங்கள் மற்றும் நாட்டின் பிரதான சட்டங்கள் தொடர்பில் பொது மக்களுக்கு போதிய விழிப்புணர்வுகள் இல்லை. பாடசாலைகள் மற்றும் சில அடையாளம் காணப்பட்டுள்ள பொது இடங்களை மையப்படுத்தி இத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம்.

இந்த விழிப்புணர்வு முற்றிலும் இலவசமாக நடத்தப்படுவதுடன், சட்டத்தரணிகள் சங்கத்தின் பல சட்டத்தரணிகள் இந்த செயல்பாட்டில் பங்குபற்றவுள்ளனர்.

சிறுவர்கள் முதல் பெரியவர்வரை எவராயினும் இந்த செயலமர்வுகளில் பங்குபற்றி சட்ட ரீதியாக தமக்கு உள்ள பிரச்னைகள் குறித்து போதிய அறிவை பெற்றுக்கொள்ள முடியும். பொதுமக்களுக்கு சட்டங்கள் தொடர்பில் முழுமையான அறிவை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் தொடர்ச்சியாக எவ்வாறான நிகழ்வுகளை ஏற்பாடு செய்ய உள்ளோம்" என்றார்.

## 'நினைவு நல்லது' நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஓக. 27

வானொலி, தொலைக்காட்சி தயாரிப்பாளராகவும் அறிவிப்பாளராகவும் விளங்கிய பி. விக்னேஸ்வரனின் 'நினைவு நல்லது' நூல் அறிமுக விழா, யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறுகிறது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும், 'ரூபவாஹினி' தொலைக்காட்சியிலும் நிகழ்ச்சி தயாரிப்பாளராகவும் செய்தி வாசிப்பாளராகவும் பணியாற்றிய பி. விக்னேஸ்வரனின் ஐம்பது ஆண்டு கள் கால அநுபவங்கள் இந்



நூல். ஒலிபரப்பு, ஒளிபரப்பு ஆகிய இரு துறைகளிலுமே தனக்கான ஒரு மதிப்பையும் நேசிப்பையும் பெற்றுத் திகழ்ந்தவர் விக்னேஸ்வரன்.

யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி சி. ரகுராம் தலைமையில் நடைபெறும் இந்த அறிமுக விழா பி. ப. 2 மணிக்கு ஆரம்பமாகிறது. முன்னாள் துணைவேந்தர், பேராசிரியர் என். சண்முகலிங்கன், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், 'ரூபவாஹினி' தமிழ் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் எஸ். விஸ்வநாதன் ஆகியோர் உரையாற்றும் இந்நிகழ்வில், ஊடகவியலாளர் கணபதி சர்வானந்தா அறிமுக உரை ஆற்றுகிறார். ஊடக கற்கைகள் துறையின் தலைவி பூங்குழலி சிறிசங்கீர்த்தனன் வரவேற்புரை நிகழ்த்துவார்.

நூலாசிரியர் பி. விக்னேஸ்வரன் ஏற்புரை வழங்குவார்.

வாஸ் குணவர்த்தன கொலை வழக்கு:

## ஷானி அபேசேகர உள்ளிட்ட நால்வர் விடுதலையாகினர்

கொழும்பு, ஓக. 27

முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தனவுக்கு எதிரான கொலை வழக்கில் பொய் சாட்சியங்களை உருவாக்கினர் என்று முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டில் இருந்து முன்னாள் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர உள்ளிட்ட நால்வர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கம்பஹா நீதிவான் இதற்கான உத்தரவை பிறப்பித்தார்.

இந்த குற்றச்சாட்டு தொடர்பில் வழக்குத் தாக்கல் செய்யுமளவுக்கு போதிய விடயங்கள் இல்லை என சட்டமா அதிபரால் நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டமையை அடிப்படையாகக் கொண்டு நால்வரும் விடுதலை செய்யப்பட்டனர்.

பொலிஸ் பரிசோதகர்களான சுகத் மெண்டிஸ், நிஷாந்த மெண்டிஸ், ஆர். பிரேமதிலக ஆகியோர் விடுவிக்கப்பட்டவர்களில் அடங்குகின்றனர்.

கொலைச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவினரால் 2020ஆம் ஆண்டு ஓகஸ்டில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

## கிரான்குளத்தில் பரவிய தீயால் பயன்தரு மரங்கள் எரிந்து நாசம்!

மட்டக்களப்பு, ஓக. 27

மட்டக்களப்பில் மண்முனைப்பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட கிரான்குளம் கிராமத்தில் கடற்கரையை அண்மித்துள்ள தோட்டங்களில் நேற்று முன்தினம் திடீரென தீ பரவியதால் பயன்தரு மரங்கள் பல எரிந்து நாசமாகின.

பற்றியெரிந்த தீயை அணைப்பதற்கு விவசாயிகள் பெரு முயற்சி எடுத்த போதும் அது பலனளிக்கவில்லை. எனினும், மட்டக்களப்பு மாநகர தீயணைப்பு பிரிவு தீ பரவலை கட்டுக்குள் கொண்டு வந்தது.

மனித நடவடிக்கையாலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று தெரிவித்த பொலிஸார் இது திட்டமிட்டு செய்யப்பட்டதா என்ற கோணத்திலும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# திருமலை விபத்தில் 10 வயது சிறுமி பலி!

## 9 வயது சிறுமியும் தாயும் படுகாயம் வானில் வந்த பெண்ணும் மரணம்!

திருகோணமலை, ஓக.16

**மோட்டார் சைக்கிளும் வானும் மோதிய விபத்தில் 10 வயது சிறுமி ஒருவர் உயிரிழந்தார். மற்றொரு சிறுமி அவரின் தாயாரும் படுகாயமடைந்துள்ளனர்.**

திருகோணமலை நகரத்தின் உட்துறைமுகவீதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

இதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த தாயும் அவரின் மகளான கவிசாலினி (வயது 9) படுகாயமடைந்தனர். அவரின் உறவினரான எட்றிக் செரலினா (வயது 10) என்ற மாணவி உயிரிழந்தார்.

தனியார் கல்வி நிலையத்திலிருந்து மகளையும் உறவினரான சிறுமியையும் மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்ற போதே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது. அந்தச் சமயம் நோயாளி ஒருவரை ஏற்றிச் சென்ற வானுடன் மோதி விபத்து இடம்பெற்றது.

இதில், காயமடைந்த தாயாரும் சிறுமிகளும் திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இவர்களில் எட்றிக் செரலினா என்ற சிறுமி உயிரிழந்தார். மற்றைய சிறுமி மேலதிக சிகிச்சைகளுக்காக அநுராதபுரம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

இதேவேளை, வானில் ஏற்றி வரப்பட்ட நோயாளியான பெண்ணும் உயிரிழந்தார்.

வானின் சாரதியை திருகோணமலை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# முன்னாள் பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா காலமானார்!



கொழும்பு, ஓக. 27

முன்னாள் உயர் கல்வி பிரதியமைச்சர் மயோன் முஸ்தபா காலமானார். நேற்று சனிக்கிழமை காலை அவர் உயிரிழந்தார் என்று குடும்பத்தினர் தெரிவித்தனர்.

ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்தவரான இவர் கல்முனை தொகுதியில் அந்தக் கட்சியை பலப்படுத்தும் நடவடிக்கையில் சமீப காலமாக ஈடுபட்டு வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# விற்பனை நிலையம் தீயில் எரிந்து நாசம்!



முல்லைத்தீவு, ஓக. 27

முல்லைத்தீவில் விற்பனை நிலையம் ஒன்று தீயில் எரிந்து முற்றாக நாசமானது.

முல்லைத்தீவு - மல்லாவி - பாலிநகர் பகுதியில் நேற்று சனிக்கிழமை அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

துரைராசா வசீகரன் என்பவருக்கு சொந்தமான பலசரக்கு விற்பனை நிலையம் இவ்வாறு தீயில் எரியுண்டு நாசமானது.

இது தொடர்பில் மல்லாவி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

# அடுத்த மூன்று மாதங்களுக்கு முட்டை இறக்குமதி தொடரும்!

கொழும்பு, ஓக. 27

எதிர்வரும் 3 மாதங்களுக்கு முட்டை இறக்குமதி தொடரும் என அரச வணிக கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலி சுந்தர தெரிவித்தார்.

அடுத்த மூன்று மாதங்களுக்கு முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு ஏற்கனவே அனுமதி கிடைத்துள்ள நிலையில், முட்டை இறக்குமதி தொடரும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

முட்டை இறக்குமதி மூலம் சந்தையில் முட்டைக்கான தட்டுப்பாட்டை கட்டுப்படுத்த முடியும் எனவும் நாளாந்த தேவைக்குரிய 10 இலட்சம் முட்டைகளை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# 780 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறவுள்ளனர்

## சுகாதார அதிகாரி தகவல்

கொழும்பு, ஓக. 27

780 மருத்துவர்கள் அடுத்த சில மாதங்களில் நாட்டிலிருந்து வெளியேற உள்ளனர் என்று தகவல்கள் வெளியாகின்றன.

822 மருத்துவர்கள் தற்போது வெளிநாடுகளில் பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்கள் அனைவரும் நாடு திரும்புவதற்கான வாய்ப்பு குறைவு என்று சிரேஷ்ட சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் தற்போதுள்ள மருத்துவர்கள், விசேட மருத்துவ நிபுணர்களை தக்கவைப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# பெண்ணின் ஆடைகளை திருடிய இராணுவ சார்ஜன்ட் கைதானார்!

கொழும்பு, ஓக. 26

பெண்ணின் உள்ளாடைகளை திருடிய இராணுவ சார்ஜன்ட் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை - ஹொரணை பகுதியில் உள்ள இராணுவ முகாம் அருகே உள்ள வீட்டில் வசிக்கும் இளம் பெண் ஒருவரின் உள்ளாடைகள் அடிக்கடி களவாடப்பட்டுள்ளது.

இதை அந்தப் பெண் அவதானித்துள்ளார். இந்த நிலையில் கடந்த புதன்கிழமை இரவு அவரின் உள்ளாடைகளை ஒருவர் திருடுவதைக் கண்டு உதவிக் குரல் எழுப்பியுள்ளார். இதையடுத்து, ஆடைகளை திருடிய நபர் இராணுவ முகாமுக்குள் தப்பிச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. திருடிய நபரை பிடிப்பதற்காக அந்தப் பெண் உள்ளாடைகளை கொடியில் காயவிட்டுள்ளார். அவற்றை திருடுவதற்காக வியாழக்கிழமை இரவு கைதான சார்ஜன்ட் நுழைந்து திருடிக் கொண்டிருந்தபோது பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

அவரை கைது செய்த போது, முதல்நாள் திருடிய பெண்ணின் உள்ளாடைகளை அவர் அணிந்திருந்தார்.

கைதானவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# ரயிலின் மிதிபலகையில் பயணித்தவர் படுகாயம்!

கொழும்பு, ஓக. 27

ரயிலின் மிதிபலகையில் நின்று பயணித்த நபர் சமிக்ஞை கம்பத்துடன் மோதி படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மருதானையில் இருந்து ஹிக்கடுவை நோக்கி பயணித்த அதிவேக ரயிலின் மிதிபலகையில் நின்று பயணித்தபோது களுத்துறை பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது. (ஐ)

# தண்ணீர் தொட்டியில் விழுந்து பெண் குழந்தை உயிரிழந்தது!

வவுனியா, ஓக. 27

வவுனியா - நெளுக்குளத்தில் தண்ணீர் தொட்டியில் வீழ்ந்து 2 வயது பெண்குழந்தை ஒன்று மரணமடைந்தது.

நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த லிங்கராஜா திவிக்கா என்ற குழந்தையே உயிரிழந்தது.

வீட்டு முற்றத்தில் குறித்த குழந்தை விளையாடிக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் குழந்தையை காணவில்லை என்று பெற்றோர் தேடியுள்ளனர்.

அப்போது, கிணற்றின் அருகேயுள்ள தண்ணீர் தொட்டிக்குள் குழந்தை கிடந்தது. குழந்தையை மீட்டு உடனடியாக மருத்துவமனையில் சேர்ப்பித்தனர்.

குழந்தையை பரிசோதித்த மருத்துவர்கள் முன்னரே உயிரிழந்து விட்டதாகத் தெரிவித்தனர்.

நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மனித உரிமை சார்ந்து இயங்குவோருக்கு ரி. ஐ. டியின் செயல்களால் அச்சுறுத்தல்

## குரலற்றவர்களின் குரல் அமைப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 27

குரலற்றவர்களின் குரல் அமைப்பின் தலைவரான தன்னை பணிமனைக்கு அழைக்கவில்லை என்று பயங்கரவாத விசாரணை பிரிவு மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு கூறியுள்ளது. அந்தப் பிரிவின், உண்மைக்கு புறம்பான இத்தகைய செயல்பாடுகள் குடிமக்கள் சார்ந்தது இயங்கும் மனித உரிமைகள் செயல்பாட்டாளர்களுக்கு பெரும் அச்சுறுத்தல் என்று கோமகன் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசியல் கைதிகளின் நலன் மற்றும் விடுதலை சார்ந்து செயல்படும் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் தலைவர் கோமகன் கடந்த 30.04.2022 அன்று பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் அவர்களின் பணிமனைக்கு அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

இது தொடர்பில் கோமகன் கடந்த 05.05.2022 அன்று மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடளித்தார். இந்த நிலையில், நேற்று முன்தினம் கோமகனை மனித உரிமைகள் ஆணைக்குழு அழைத்தது.

இதன்போது, சிங்களத்தில் பயங்கரவாத தடுப்பு பிரிவினர் மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு எழுதிய கடிதம் வாசித்துக் காட்டப்பட்டது. அதில், தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை விடயத்தில் குரலற்றவர்களின் குரல் அமைப்பு மற்றும் கோமகனது செயற்பாடுகள் தொடர்பில் பிரதேச கிராம உத்தியோகத்தரிடம் கேட்டறிந்துகொண்டனர் என்றும் எவ்வேளையிலும் அவரை தமது பணிமனைக்கு அழைத்திருக்கவில்லை" என்று தெரிவிக்கப்பட்டிருந்ததாக கோமகன் குறிப்பிட்டார்.

அத்துடன், பயங்கரவாத விசாரணைப் பிரிவின் உண்மைக்குப் புறம்பான இத்தகு செயற்பாடுகள், குடிமக்கள் சார்ந்து செயற்படுகின்ற சிவில் மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்றும் கூறினார். (ஐ)

# வடக்கு, கிழக்கு சட்டத்தரணிகளின் எழுச்சி கண்டு நான் அஞ்சமாட்டேன்

## சரத் வீரசேகர எம். பி.



கொழும்பு, ஓக. 27

**“முல்லைத்தீவு நீதிபதியை காப்பாற்ற முயலும் வடக்கு - கிழக்கு சட்டத்தரணிகளின் எழுச்சியைக் கண்டு நான் அஞ்சமாட்டேன். சட்டத்தரணிகள் எனக்கு விடுத்துள்ள சவாலுக்கு நான் நாடாளுமன்றத்தில் வைத்துத்தான் பதில் வழங்குவேன்.”**

இவ்வாறு தெரிவித்தார் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர.

முல்லைத்தீவு நீதிபதி தொடர்பாக சரத் வீரசேகர எம். பி. பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்குக் கண்டனம் தெரிவித்து வடக்கு, கிழக்கு சட்டத்தரணிகள் நேற்றுமுன்தினம் நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணித்து தத்தமது நீதிமன்றங்கள் முன்பாக அடையாளக் கண்டனப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது அவர்கள், “சரத் வீரசேகர எம். பி. பாராளுமன்றச் சிறப்புரிமையைப் பயன்படுத்தி பாராளுமன்றத்துக்குள் இருந்து கொண்டு கதைக்காமல் தைரியம் இருந்தால் வெளியில் வந்து கதைக்க வேண்டும்” - என்று சவால் விடுத்திருந்தனர்.

இந்த சவால் தொடர்பாகச் சரத் வீரசேகர எம்.பியிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“பாராளுமன்றத்தில் நான் தெரிவித்திருந்த கருத்துக்குத்தான் வடக்கு - கிழக்கு சட்டத்தரணிகள் சவால் விடுத்துள்ளனர். எனவே, அவர்களின் சவாலுக்கு நான் பாராளுமன்றத்தில் வைத்துத்தான் பதில் வழங்குவேன்” - என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# புதிய அரசியல் கூட்டணியை உருவாக்க பேச்சு நடக்கிறது!

## அநுர பிரியதர்ஷன யாப்பா

கொழும்பு, ஓக. 27

புதிய அரசியல் கூட்டணியை உருவாக்குவது தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன என்று சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிக்கு விடை காண்பது முன்னெப்போதையும் விட இன்று இன்றியமையாததாக மாறியுள்ளதாகவும் குழுவாக கலந்துரையாடி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும், புதிய அரசியல் இயக்கத்தை கூட்டணியாக கருதுவது ஏற்புடையது அல்ல. இந்த புதிய அரசியல் இயக்கத்திற்காக ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என இரு கட்சிகளும் இணைந்து செயல்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

பல்வேறு வெளியாட்களுடனும் இந்த கலந்துரையாடல் இடம்பெறுவதாகத் தெரிவித்த அவர், எதிர்கால அரசியல் பயணம் குறித்து அங்கு கலந்துரையாடி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பெரும் நெருக்கடிக்கு பொதுஜன பெரமுனவின் அனைத்து உறுப்பினர்களும் பொறுப்புக் கூறுகின்றனர். அந்த பொறுப்பை ஏற்று அனைத்து பொதுஜன பெரமுன உறுப்பினர்களும் செயல்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். (ஐ)



# சிவகுமாரன் பிறந்தநாளில் உருவச்சிலைக்கு அஞ்சலி!

யாழ்ப்பாணம், ஓக. 27

தியாகி பொன். சிவகுமாரனின் 73ஆவது பிறந்த நாளான நேற்று, உரும்பிராயிலுள்ள அவரின் உருவச்சிலைக்கு மாலையிட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

பொன். சிவகுமாரன் நினைவேந்தல் ஏற்பாட்டு குழு உறுப்பினர் எஸ். செந்தூரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் சிவகுமாரனின் சகோதரி சிவகுமாரி மற்றும் நல்லூர் பிரதேசசபை முன்னாள் உப தவிசாளர் இ. ஜெயகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்காக முதன்முதலில் தன்னுரையிரை ஈகை செய்தவர் பொன். சிவகுமாரன் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரூ.25,000 இலஞ்சம் பெற்றவருக்கு 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறை!

கொழும்பு, ஓக. 27

சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் இணக்க சான்றிதழை வழங்குவதற்கு 25 ஆயிரம் ரூபாய் இலஞ்சம் பெற்ற பேருவளை உப அலுவலகத்தின் முன்னாள் தொழில்நுட்ப அதிகாரிக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 20 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளது.

நான்கு குற்றச்சாட்டுகளில் குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டது. ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் 5 ஆண்டுகள் வீதம், 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. மேலும் ஐந்து ஆண்டுகளில் தண்டனையை ஒரே நேரத்தில் அனுபவிக்கவும் உத்தரவிடப்பட்டது.

குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 5 ஆயிரம் ரூபாய் வீதம் 20 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டதுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட இலஞ்ச தொகையையும் அபராதமாக செலுத்துமாறும் கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா நேற்று முன்தினம் இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

பேருவளை - பயாகலை உப பிராந்திய அலுவலகத்தில் பணிபுரியும் முன்னாள் தொழிநுட்ப உத்தியோகத்தர் கடந்த 2016 டிசெம்பர் 15ஆம் திகதி பணிமனையில் கடமையாற்றும் போது 25 ஆயிரம் ரூபாயை இலஞ்சம் பெற்றிருந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு அது நிரூபணமானது. (ஐ)

# மீண்டும் தாய்வீடு திரும்புங்கள் சஜித் தரப்புக்கு ஐ. தே. க. அழைப்பு

கொழும்பு, ஓக. 27

ஐக்கிய தேசிய கட்சியை விட்டுசென்றவர்கள் மீண்டும் தாய்வீடு திரும்ப வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரான முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க சஜித் தரப்பினருக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஹரின் பெர்ணான்டோ, மனுச நாணயக்கார, ஹரிசன் ஆகியோர் மீண்டும் கட்சிக்குள் வந்துள்ளனர். இது மகிழ்ச்சியளிக்கின்றது. கட்சியை விட்டு சென்றவர்கள் மீண்டும் தாய் வீட்டுக்கு வாருங்கள். எவரையும் ஐக்கிய தேசியக் கட்சி வெளியேற்றவில்லை. அவர்களாகவே சென்றார்கள். எனவே, மீண்டும் வருவதில் பிரச்னை இருக்காது.



சிலர் கறுப்பை, வெள்ளையாக்கி பிரசாரம் செய்தனர். இதனால்தான் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தாக்கம் ஏற்பட்டது. வாக்காளர்கள் நடுநிலை வகித்தனர். ஆனால், இன்று யதார்த்தம் புரிந்துள்ளது. அது வெள்ளை அல்ல கறுப்புதான் என்பதை மக்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

கட்சியை பலப்படுத்த வேண்டும். பிளவுபட்டுள்ளவர்களை இணைக்க வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும் - என்றும் கூறினார்.

# முல்லைத்தீவு மாவட்டத்தில் 3,389 பேருக்கு காணி இல்லை!

## ரவிகரன் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு, ஓக. 27

முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 ஆயிரத்து 389 குடும்பங்களுக்கு காணி இல்லை. 89 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாடுகளுக்கு மேய்ச்சல் தரை இல்லாத நிலைமையே உள்ளது என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் து. ரவிகரன் தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் வாழும் 3,389 குடும்பங்களுக்கு குடியிருப்பதற்கு நிலம் இல்லை. தொழில் முயற்சிக்கென இளைஞர், யுவதிகள் ஓர் ஏக்கர் வீதம் தமக்கு காணிகள் தரும்படி 28 ஆயிரத்து 626 பயனாளிகள் மாவட்ட நிர்வாகத்திடம் கேட்டும் இன்று வரை அதற்கு சாதகமான பதில் இல்லை.

இந்த வாழ்வாதாரத்துக்கு உரிய கோரிக்கையை பிரதேச ரீதியாக அதிகாரிகளே தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரியும் இன்றுவரை பயனில்லை. மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பானது 2022 ஆம் ஆண்டு புள்ளிவிபரப்படி 2ஆயிரத்த 415 சதுரகிலோ மீற்றர் தரையாகவும் 202 சதுர கிலோ மீற்றர் உள்ளக நீர்ப்பிரதேசமாகவும் காணப்படுகின்றது.

இதில் 2009 ஆம் ஆண்டுக்கு முன்பு வனஇலாகாவின் கட்டுப்பாட்டில் அல்லது ஆளுகைக்குள் மொத்த நிலப்பரப்பின் 36.72 வீதம் அதாவது 2 இலட்சத்து 22 ஆயிரத்து 6 ஏக்கர் நிலம் இருந்தது. யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்பு 2009ஆம் ஆண்டுக்கு பின்பு வனஇலாகா மேலும் 30.37 வீதம் ஒரு இலட்சத்து 67 ஆயிரத்து 484 ஏக்கர் நிலப்பரப்பை இணைத்துக் கொண்டது.

தற்போது காடு பேணல் சட்டத்தின்கீழ் ஒதுக்க காடுகளாக மீண்டும் 7.15 வீதமான நிலப்பரப்பை (42 ஆயிரத்து 631 ஏக்கர்) கோரியுள்ளது. இதுவும் உள்வாங்கப்பட்டால் மொத்தமாக உள்ள மாவட்டத்தின் நிலப்பரப்பில் 74.24 வீதமான நிலங்கள் வன இலாகாவின் ஆளுகைக்குள் உள்வாங்கப்படும்.

இதைவிட மகாவலி அபிவிருத்தி அதிகார சபை, தொல்லியல் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், கனிய மணல் திணைக்களம், படையினர் என மிகுதி காணிகளில் பெரும்பங்கு இந்தத் திணைக்களங்களின் ஆளுகைக்குள் இருக்கின்றன.

வன இலாகாவின் பொறுப்பில் உள்ள நிலங்களில் மாவட்டத்தின் அபிவிருத்தி தேவைக்காக சுமார் 50ஆயிரம் ஏக்கர் காணி தேவையெனவும், விடுவித்து தரும்படியும் உரியவகையில் மாவட்ட நிர்வாகம் கோரிக்கை விடுத்தும் இதுவரை சாதகமான பதில்கள் எதுவும் கிடைக்கவில்லை.

ஆனால், வேறு திணைக்களங்கள் கோரிக்கை, மற்றும் குடியேற்றங்களுக்கென கோரிக்கைவிடும்போது விட்டுக் கொடுக்கும் நிலை காணப்படுகிறது. இந்த நிலையில் இன்று வரை காணி இல்லாத குடும்பங்களாக 3 ஆயிரத்து 389 குடும்பங்கள் உள்ளன.

இது தவிர மாவட்டத்தில் 89 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாடுகள் இருந்தும் அதற்குரிய மேய்ச்சல் தரைகள் தேவை என இடங்களை சுட்டிக்காட்டி கோரிக்கை விடுத்த போதும் பல ஆண்டுகளாக விடுத்தும் இன்றுவரை கிடைக்கவில்லை முல்லைத்தீவில் தற்போது மாடுகளுக்கும் காணி இல்லை, தமிழர்களான மனிதர்களுக்கும் காணி இல்லை - என்றுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
27.08.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 10

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் கட்சிகளின் கவனத்துக்கு...!

சிங்கள அடிப்படைவாத சக்திகள் நிலைமைகளை சீர்குலைத்து, அதன் மூலம் கிடைக்கும் அரசியல் சூழலில் தங்களை மீண்டும் பலப்படுத்த முயற்சிப்பதான தோற்றம் ஒன்று தெரிகின்றது. 13ஆவது திருத்தச் சட்டத்தை கையிலெடுத்த கடும்போக்குவாதிகள் தற்போது, குருந்தூர்மலை மற்றும் தையிட்டி விகாரை விவகாரத்தை கையிலெடுத்திருக்கின்றனர். இந்த விடயத்தில் தென்பகுதியிலுள்ள சிங்கள மக்களின் கவனத்தை ஈர்க்கும் நோக்கில் தற்போது, கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கொழும்பு இல்லத்தின் முன்னால் திரண்டு தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை சிங்கள அடிப்படைவாதிகள் தெரிவு செய்திருப்பதற்கு ஓர் அடிப்படையான காரணம் உண்டு. கஜேந்திரகுமாரின் கட்சி தையிட்டி விகாரை விவகாரத்தில் எதிர்ப்பைக் காண்பித்ததற்காக அவர்கள் கஜேந்திரகுமாரை தெரிவு செய்திருப்பதாகக் கருதினால் அது தவறானது. ஏனெனில், கஜேந்திரகுமாரின் எதிர்ப்பு சாதாரணமானது. பெருமளவான மக்களை அணிதிரட்டிய ஒன்றல்ல. மேலும், அந்த எதிர்ப்பால் பௌத்த பிக்குகள் தங்களின் முயற்சியிலிருந்து பின்வாங்கவும் இல்லை. திட்டங்கள் கைவிடப்படவும் இல்லை.

இந்த பின்புலத்தில் நோக்கினால் கஜேந்திரகுமாரின் கொழும்பு இல்லத்தின் முன்னால் திரண்டு தங்களின் எதிர்ப்பை காண்பிப்பதற்கு பின்னால் பிறிதொரு காரணமுண்டு. அதாவது, யாழ்ப்பாணத்தை தளமாகக் கொண்டிருக்கும் கட்சிகளில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான கட்சியொன்றுதான் தங்களை விடுதலைப் புலிகளின் நீட்சியாகக் காண்பிக்க முற்படும் ஒரேயொரு கட்சியாகும். இதனை கருத்தில் கொண்டுதான் அடிப்படைவாதிகள் கஜேந்திரகுமாரை இலக்கு வைத்து தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றனர்.

விடுதலை புலிகளை யுத்தத்தில் தோற்கடித்ததை கொண்டாடிய தரப்புகளே தற்போது கஜேந்திரகுமாரின் இல்லத்துக்கு முன்னால் திரண்டிருக்கின்றன. இதன்மூலம் ஏனைய சிங்கள அடிப்படைவாதிகளையும் தங்களின் எதிர்ப்புக்குள் இணைத்துக் கொண்டு தங்களைப் பலப்படுத்திக் கொள்ளவே அவர்கள் முயற்சிக்கின்றனர். இந்த விடயத்தில் தமிழ் கட்சிகளின் தலைவர்கள் நிதானத்துடன் நடந்துகொள்ள வேண்டும். அடிப்படைவாதிகளின் எதிர்பார்ப்புக்கு இடமளிக்கக்கூடாது. முன்னர் புலி எதிர்ப்பை முன்வைத்து தென் பகுதியில் அரசியல் செய்தது போன்று தற்போது செயல்பட முடியாது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் புலிகளின் நீட்சியாகத் தங்களை காண்பிக்க முற்படும் கஜேந்திரகுமாரை சிங்கள அடிப்படைவாதிகள் தெரிவு செய்திருக்கின்றனர்.

அடிப்படைவாதிகளின் இலக்கு ஒன்றுதான். அதாவது, நிலைமையை சீர்குலைத்து மீண்டும் தமிழர் விரோதத்தை அரசியல் மயப்படுத்துவது. இதன் மூலம், தங்களை அரசியலில் பலப்படுத்திக் கொள்வது. சிங்கள அடிப்படைவாதிகளின் நகர்வுகள் வெற்றியளிப்பதற்கு தமிழ் கட்சிகள் இடமளிக்கக்கூடாது.

# புதுப்பிக்கத்தக்க வலுசக்தி திட்ட முன்னேற்றம் குறித்து மதிப்பாய்வு

கொழும்பு, ஓக. 27

எதிர்வரும் 2030ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத் தக்க வலுசக்தி மூலம் நாட்டின் மொத்த மின்சார தேவையில் 70 சதவீதத்தைப் பூர்த்தி செய்யும் நோக்கில் முன்னெடுக்கப்படும் 6 புதுப்பிக்கத் தக்க வலுசக்தி திட்டங்களின் முன்னேற்றம் குறித்து மதிப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

மின்சக்தி மற்றும் வலு சக்தி அமைச்சில் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இந்த மதிப்பாய்வு இடம்பெற்றுள்ளது.

குறித்த புதுப்பிக்கத்தக்க திட்டங்களுக்காக அரசாங்கத்தின் அனுமதி பெறுதல், காணி கையகப்படுத்துதல், மின் இணைப்புகள் அமைத்தல், மின் கொள்முதல் ஒப்பந்தங்கள் மற்றும் நிதித் தேவைகள் குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பாதீடு திட்டமுன்மொழிவு மீளாய்வு நாளை ஆரம்பம்!

கொழும்பு, ஓக. 27

அடுத்த வருடத்துக்கான வரவு - செலவு திட்ட முன்மொழிவுகளை மீளாய்வு செய்யும் பணிகள் நாளை ஆரம்பிக்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

கேகாலை - யட்டியந்தோட்டையில் வைத்து செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள நிலைமைகளை கருத்தில்கொண்டு அடுத்த வருடமும் சவாலான வரவு - செலவு திட்டத்தை முன்வைக்க வேண்டியேற்படும்.

அடுத்த வருட வரவு - செலவு திட்டத்துக்கு அரசாங்கம் தயாராகி வருகிறது. முதல் கட்டமாக ஒவ்வோர் அமைச்சுகளினதும் செலவுகள் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. கடந்த 22ஆம் திகதி வரை இந்த தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன. நாளை முதல் கிடைக்கப்பெற்ற தகவல்கள் மற்றும் முன்மொழிவுகள் என்பன திறைசேரி செயலாளரின் தலைமையில் மீளாய்வு செய்யப்படும் - என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# நீர்ப்பாசன அமைச்சுக்கு சொந்தமான 347 வாகனங்கள் அதன் வசம் இல்லை!

கொழும்பு, ஓக. 27

நீர்ப்பாசன அமைச்சுக்கு சொந்தமான 347 வாகனங்கள் அமைச்சின் கட்டுப்பாட்டில் இல்லை என தேசிய கணக்காய்வு பணிமனை வெளியிட்டுள்ள சமீபத்திய கணக்காய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீர்ப்பாசன அமைச்சின் பெயரில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் குறித்து மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் தரவு அமைப்பில் இருந்து பெறப்பட்ட தகவல்களின்படி, 650 வாகனங்கள் நீர்ப்பாசன அமைச்சு, நீர்ப்பாசன செயலாளர் அல்லது அமைச்சின் முகவரியின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

எனினும், நீர்ப்பாசன அமைச்சின் ஆவணத்தின்படி அமைச்சினால் பயன்படுத்தப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 306 என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 347 வாகனங்கள் அமைச்சின் கட்டுப்பாட்டில் இல்லை என கணக்காய்வு மூலம் தெரியவந்துள்ளது. (ஐ)

# 25 பவுண் நகை, ரூ. 40,000 வசாவிளானில் திருட்டு!

யாழ்ப்பாணம், ஓக. 27

வசாவிளான் பகுதியில் வீடொன்றில் 25 பவுண் நகைகள், 40 ஆயிரம் ரூபாய் பணம் என்பன களவாடப்பட்டுள்ளதாக பலாலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப் பட்டுள்ளது.


இந்த சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

வீட்டின் உரிமையாளர்கள் முற்பகல் 10 - 11 மணி வரை வெளியில் சென்றிருந்த சமயம் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகின்றது. கதவை உடைத்து நுழைந்த திருடர்கள் 25 பவுண் நகைகள், 40 ஆயிரம் ரூபாய் பணத்தை திருடிச் சென்றுள்ளனர்.

அத்துடன், வீட்டில் பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்பு (சி. சி. ரீ. வி) கமெராக்களும் திருட்டுப் போயுள்ளன.

தடயவியல் பொலிஸார், மோப்ப நாயின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -92

# நாளாந்தம் நாம் உண்ணும் உணவு பற்றியது...

கணபதி சர்வானந்தா

முன்புபோலல்ல, மக்கள் பசிக்கு உணவு உண்ணுவதென்ற நிலைபோய் ருசிக்காக உண்ண வேண்டும் என்றவாறு நிலைமை மாறிவிட்டது. “ருசியுள்ளது வரும்வரை பசியைத்தாங்கி இருப்பனாம் மனிதன்” என்றவாறு ருசி உள்ள உணவு மனிதனை ஆக்கிரமித்துள்ள உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

நல்லூர்த் திருவிழாவில் பல அன்னதான மடங்கள் உண்டு. அவை ஆரோக்கியமான உணவை மக்களுக்குக் கொடுப்பதற்காக திறந்திருக்கின்றன. இருந்தும் உற்சவ காலத்தில் திறந்திருக்கும் நிரந்தர மற்றும் தற்காலிகச் சிற்றுண்டிக் கடைகளை நோக்கியே மக்கள் படை எடுப்பதைக் காணமுடிகிறது. அவை அனைத்தும் ருசிமிக்க உணவுவகைகள். ஆனால் பெரும்பாலும் உடலுக்குக் கேடு விளைவிப்பனவாக இருப்பதாக வைத்தியர் ஒருவர் சொன்னார்.

உதாரணத்துக்கு பஞ்சுமிட்டாய்க் கடை ஒன்றைத் திறந்திருக்கிறார்கள். அவர்கள் வெறும் வியாபார நோக்கத்தை முன்னிலையாகக் கொண்டவர்கள். எரிவாயுவில் இயங்கும் இயந்திரத்தின் மூலம் உருவாக்கப்படும் மிட்டாய்களை அவர்கள் அந்த இயந்திரத்தின் மூலம் உடன் உற்பத்தி செய்து விற்கிறார்கள்.ஒரு தேக்கரண்டி நிறமூட்டிய சீனியை அந்த இயந்திரத்துக்குள் போடுகிறார்கள். பஞ்சுபோல மேல் எழுந்து எரிவாயு மணத்தோடு வருகிறது மிட்டாய். ஒரு மிட்டாயின் விலை ரூபா. 150. எதுவித கேள்வியும் இன்றி பெரியவர், சிறுவர் என வயது வித்தியாசமில்லாது அதனை வாங்கி ருசித்தபடி செல்வதைப் பார்க்க மனம் நோகிறது. சீனி, இரசாயனம், எரிவாயுவின் நேரடித் தாகம் என்று பல கேடுள்ள பொருளை வாங்க அவர்கள் முண்ணயடிப்பதுதான் விந்தை.

உணவு தொடர்பாக “வளர்ப்புப் பிராணிகளை நேசிப்பவர்கள்” என்ற முகநூல் பக்கத்திலிருந்து ஒரு சிறிய பதிவைக் கண்டேன், இந்திய உணவு தொடர்பானது. பகிர்கிறேன்.

தமிழகத்தில் உணவு பெரும் வணிகம் ஆகிவிட்டது. எல்லோரும் எதையாவது தின்று கொண்டே இருக்க வேண்டும் என்று ஒட்டுமொத்த தமிழகமும் வடிவமைக்கப் பட்டிருக்கிறது. அதில் எதுவுமே வழக்கமான உணவு வகை கிடையாது. உதாரணமாகச் சோறு, இட்லி, தோசை, பொங்கல், உப்புமா போன்றவை ஏளன உணவு பொருளாகப் பார்க்கப்படுகிறது. பல உணவகங்களில் இவை இல்லை. ரொட்டி வகைகளும், கறி வகைகளும் மட்டுமே இரவு உணவில் பெரிதும் பரிமாறப்படுகிறது. மதிய வேலைகள் கூடச் சோற்றை விடப் பிரியாணி வகைகள், பரோட்டா வகைகள் அதிகம் காணப்படுகிறது. அந்த வரிசையில் காலை உணவு மட்டும் பெரிதும் பாதிக்கப்படவில்லையென நம்புகிறேன். விரைவில் அவையும் ஓட்ஸ், பேர்கர், சாண்ட்விச், நூடுல்ஸ், பிஸ்தா போன்ற உணவு வகைகளால் நிரப்பப்படலாம். தொடர் தொலைக்காட்சி விளம்பரங்கள் அதனைத் தான் மனதுள் புகுத்திக் கொண்டிருக்கிறது. ஒரே ஒரு வகை உணவு பரிமாறப்பட்ட என் சொந்தங்கள் வீட்டில் அனைத்திலும் இரண்டு மூன்று வகை சேர்த்து பரிமாறப்படுகிறது. இந்த மாற்றத்திற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. ஆனால் இவையெல்லாம் கடந்த ஐந்து வருடங்களில் நடந்தேறியிருக்கிறது. அதனை அவர்கள் உணரவே இல்லை. யூடியூப் போன்ற வலையொலிகளின் உணவு நிகழ்ச்சிகளே இதற்குக் காரணம் என்று சொல்லலாம்.

ஒரு கடையில் 99 வகை பரோட்டாக்கள் கிடைக்குமென்ற பலகையைப் பார்த்து இதுவரை குழம்பிக் கொண்டே இருக்கிறேன். ஐஸ்கிரீமை கூடப் பொரித்து தின்கிறார்கள். சிஸ்லர் என்னும் நெருப்பு கல்லில் ஐஸ்கிரீம் பரிமாறப்படுகிறது. உலகில் உள்ள அனைத்து வகை உணவுகளும் தமிழகத்தில் கிட்டத்தட்ட அனைத்து இடங்களிலும் கிடைக்கிறது..

பிசா(சு), சவ(ம்)ரிமா போன்ற கடைகள் எல்லா ஊரிலும் தென்படுகிறது.திக்கு எங்கிலும் பேக்கரி, அதிலும் விற்கப்படும் பொருட்கள் அங்கு செய்வதில்லை, யாரோ ஒருவர் செய்து அனைத்திற்கும் வழங்குகிறார். சுவை என்பது கூடப் பழைய சுவை இல்லை, அதிகப்படியாக டால்டா கலப்பு போன்றவை இருக்கிறது. நாக்கில் வைத்தவுடன் கரைய வேண்டும். ஊரில் எவனுக்கும் பல் இல்லை. அதனால் கடிக்கவேண்டிய அவசியமில்லை என்கிறது அடுமனை. கடினமாகக் கடிக்கும் பொருள்கள் விற்பனையில் இல்லை. இனிப்பு வகைகள் கேக்கு வகைகள் பெருகிவிட்டது. இனிப்பு பெருகிவிட்டு நிலத்தில் பல் மருத்துவமனையும் பெருகி இருக்கிறது. அண்ணாச்சி கடைகளிலும் பாய் கடைகளிலும் தமிழ் பொருள்கள் கிடைப்பதில்லை. பெரும்பாலும் வட இந்திய பொருள்கள்தான் விற்பனைக்கு இருக்கிறது. ஏன் தின்பண்டங்கள் கூடக் கல்திராம்ஸ் பாக்கெட்டுகள் தான் இருக்கிறது. ஒரு காலத்தில் “தூ” என்று துப்பிய சுவையை எந்தவித எதிர்ப்புகளும் இல்லாது இன்று பழக்கப்படுத்தி விட்டனர்.

மக்களைத் தங்கள் கடைக்கு அழைக்க அண்ணாச்சிகளும் நவீனமயப்படுத்தப்பட்ட இரசாயன உணவுப் பொருட்களை விற்பனை செய்யத் தொடங்கிவிட்டார்கள். இதனால். ஆரோக்கியமான உணவுப் பொருட்களை உற்பத்தி செய்த பல தமிழ் குடும்பங்கள் அழிந்து இருக்கும் என எண்ணலாம். எங்கள் ஊரில் கூட “மெட்ரோ” என்ற பெரும் கடை மற்ற அனைத்தையும் விழுங்கி வளர்கிறது, பரிதாபம்.

உணவை மக்கள் முதலில் விழி வழியேதான் உண்கிறார்கள், கண்களால் தின்கிறார்கள். பிறகு கண்டதையெல்லாம் வாங்கிப் பிடித்ததைத் தின்றுவிட்டுப் பிடிக்காததை தூக்கி எறிகிறார்கள். முன்பெல்லாம் வெளியே செல்லும் நேரத்தில் வீட்டுக்கு வந்து சமைக்க நேரம் இல்லாத காரணத்தினால் வெளியே உணவருந்தும் பழக்கம் இருந்தது. ஆனால் இப்போது எந்த நேரத்திலும் அதனை ஆர்டர் செய்தால் வீட்டுக்கே வந்து விடுமென்று பட்டிதொட்டிகளில் எல்லாம் பிக்மீ போன்ற தூதுணவு வந்துவிட்டது. இங்குப் பசி பேசப்படுவதில்லை, ருசி மட்டுமே பேசப்படுகிறது. முன்பு ஒவ்வொரு நிலப்பகுதியின் உணவும் அந்தந்த நிலச் சூழலுக்கு ஏற்ற மாதிரி உருவாக்கப்பட்டது. அதனால் நோய்கள் குறைவு. ஆனால் மேற்படி தீங்கு விளைவிக்கும் உணவை அனைத்து இடங்களுக்கும் கொண்டு சேர்ப்பதென்பது மனிதர்களின் மரபணுவைச் சிதைப்பதற்கு வழிவகுக்கும்.

அறுசுவை உணவு கூட அடுத்த நாள் மலம் ஆகிவிடும் என்று கமலஹாசன் ஒரு பேட்டியில் கூறியது எனக்கு ஏனோ இப்போது நினைவுக்கு வருகிறது. தமிழர்கள் காலம் கடந்துதான் தமிழ் மொழியில் கலந்திருக்கும் பிற மொழி சொற்களை அகற்றப் போராடினார்கள், அது இன்றளவும் வெற்றி பெறவில்லை, என்பதனை ஊரெங்கும் இருக்கும் எழுத்து பலகையும், மக்கள் பேச்சும் தெளிவுபடுத்துகிறது. தமிழ்மொழி அழிகிறது என்பதுதான் உண்மை..அதேபோல் அந்நிய உணவால் தமிழ் இனம் அழிந்து கொண்டிருக்கிறது...

சுவை எனும் நஞ்சிலிருந்து வெளியேறிப் பசி எனும் இயல்புக்கு மருந்திடும் தமிழர் உணவு வகைகளுக்குத் திரும்ப வேண்டும். அந்நிய உணவுகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும். •

# இந்தவார ராசிபலன் 27.08.2023 - 02.09.2023

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - ஆவணி 10
நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : ஏகாதசி

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மறைமுக எதிர்ப்புகளை சந்திக்க வேண்டியதிருக்கும். புதிய பொருட்கள் வாங்குவதையும், பயணங்களையும் தவிர்க்கலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு செல்வாக்குடன் கூடிய புதிய பொறுப்புகள் கிடைக்கும். சொந்தத் தொழில் செய்பவர்கள், வாடிக்கையாளர் மூலம் தொழில் ரீதியான பொருளாதார முன்னேற்றத்தைப் பெற தீவிரமாக முயற்சிப்பார்கள். கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு, வியாபாரத்தில் வழக்கமான லாபம் குறையாது.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

பொருளாதார ரீதியாக பெரிய லாபத்தை எதிர்பார்க்க முடியாது. அதிகச் செலவு ஏற்படும் என்பதால், திருப்தியான சூழ்நிலை இல்லாமல் போகலாம். உத்தியோகஸ்தர்களில் சிலர் அதிக வருமானமுள்ள புதிய வேலைக்குச் செல்ல முயற்சி மேற்கொள்வர். எதிர்பார்த்த கடன் உதவிகள் தள்ளிப் போகும். சொந்தத்தொழில் செய்பவர்களில் சிலருக்கு, புதிய வேலைகள் கிடைத்து பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவர். இதனால் ஓரளவு பணப் பற்றாக்குறை அகலும். கூட்டுத்தொழில் முயற்சியில் முன்னேற்றமான பலன்கள் ஏற்படலாம்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

உறவினர் மற்றும் நண்பர்களிடம் இருந்து உதவி கிடைப்பதால், பிரச்சினைகள் ஓரளவு தீரும். இருப்பினும் எதிர்பார்த்த தொகைக்காக பெரும் அலைச்சலை சந்திக்க நேரிடும். செலவுகள் அதிகமாகி மன உளைச்சலை உண்டாக்கும். எதிர்கால வாழ்விற்கு ஏற்ற திட்டங்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். உத்தியோகத்தில் உயர திகாரிகளின் ஆதரவால் நலம் பல சேரும். சொந்தத்தொழில் செய்பவர்கள், புதிய நபரின் அவசர வேலையை செய்து கொடுக்க ஓய்வின்றி பணியாற்றுவீர்கள்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

உத்தியோகத்தில் உள்ளவர்கள், தங்கள் பொறுப்புகளில் அதிக கவனமாக இருப்பது அவசியம். நீங்கள் செய்யும் சிறிய தவறும், உயர் அதிகாரிகளுக்கு மிகப் பெரியதாகத் தோன்றும். சொந்தத் தொழில் செய்பவர்கள், பழைய வாடிக்கையாளர்களின் மூலம் புதிய நபரின் அறிமுகத்தைப் பெற்று, போதுமான வருவாய் ஈட்டுவர். கூட்டு வியாபாரத்தில், தொழில் போட்டிகளால் பின்னடைவை சந்திக்கும்படி ஆகலாம். பிரச்சினைகள் சுமுகமாத் தீரும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

எடுத்த காரியங்களை முயற்சியுடன் செய்து வெற்றிபெறுவீர்கள். சொத்து சம்பந்தமான பிரச்சினை முடிவுக்கு வரும். கொடுக்கல் - வாங்கல் திருப்திகரமாக இருக்கும். பழைய பகை மறையும். சிலர் புதிய வீட்டில் குடியேறி மகிழ்வர். உத்தி யோகத்தில் சிலருக்கு எதிர்பாராத பதவி உயர்வும், சம்பள உயர்வும் கிடைக்கலாம். அலுவலகக் கடன் கைக்கு வரும். நிலுவைத் தொகை கிடைப்பதால் மனத்திருப்தி உண்டாகும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

எதிர்பார்த்த காரியங்களில் நல்ல பலன்களைப் பெறுவீர்கள். சில காரியங்கள் வெற்றியடைய அதிக முயற்சி தேவைப்படலாம். முக்கியப் பணிகளை அதிக கவனத்துடன் செய்வது நன்மை தரும். நண்பர்களிடையே ஏற்பட்ட கருத்துவேறுபாட்டை பேச்சுவார்த்தை மூலம் சரிசெய்து கொள்வீர்கள். உத்தியோகத்தில் முயற்சியின் பேரில் சிலருக்கு பதவி உயர்வு, இட மாற்றம் ஏற்படலாம். சொந்தத் தொழிலில் பரபரப்பான சூழ்நிலை காணப்படும். அவசர வேலைகளைச் செய்ய ஓய்வின்றி உழைப்பீர்கள்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

அதிர்ஷ்ட வாய்ப்பு தேடி வரும் வாரம் இது. எண்ணங்கள் ஈடேற வழிபிறக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்கள், தள்ளி வைத்த காரியத்தை உயரதிகாரிகளின் விருப்பப்படி உடனடியாக செய்ய வேண்டியதிருக்கும். சொந்தத் தொழில் செய்பவர்கள், வேலைப்பளுவால் அல்லல்படுவார்கள். கூட்டுத் தொழிலில், போட்டி காரணமாக வியாபாரம் சுமாராக நடைபெற்று லாபம் குறையலாம். நிலுவைத் தொகை வசூலில் அதிருப்தி காணப்படும். குடும்பத்தில் சிறுசிறு கடன் தொல்லைகள் ஏற்படும். பிள்ளைகளை மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

வடதிசையில் இருந்து நல்ல தகவல் வரக்கூடும். எடுத்த காரியங்களில் வெற்றியும், எதிர்பார்க்கும் பணவரவுகளும் கிடைக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, இடமாற்றம், பதவி உயர்வு போன்றவற்றில் நினைத்தது ஒன்றும், நடந்தது ஒன்றுமாக இருக்கலாம். சொந்தத் தொழில் செய்பவர்கள், வாடிக்கையாளர்களின் அவசரம் காரணமாக ஓய்வின்றி பணியாற்றுவார்கள். செய்யும் வேலைக்குத வருமானம் கிடைத்து, பொருளாதாரம் உயரும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

உங்கள் எண்ணங்கள் அனைத்தும் நிறைவேற, நெருங்கிய உறவினர்கள் கைகொடுப்பார்கள். என்றாலும், சில செயல்களில் மட்டுமே எதிர்பார்க்கும் திருப்தியை அடைய முடியும். வரவேண்டிய பணவரவுகளைப் பெற சிறிது அலைச்சல் இருக்கலாம். வேலைப்பளு அதிகரிக்கும். அலுவலகத்தில் எதிர்பார்க்கும் பணவரவு தள்ளிப்போகும். சொந்தத் தொழிலில், பழைய வாடிக்கையாளர்களால் புதிய நபர் அறிமுகமும், அதன் மூலம் வருவாயும் கிடைக்கும்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

பயணங்களை தவிர்ப்பது நல்லது. முயற்சிகள் பலவற்றில் வெற்றிகரமான பலன்களைப் பெறுவீர்கள். நண்பர்களும், உறவினர்களும், உங்கள் பணிகளில் ஆதரவாக இருப்பார்கள். எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு, செல்வாக்கு அதிகரிக்கும். அலுவலகத்தில் உயரதிகாரிகளின் ஆதரவுடன் பல சலுகைகளைப் பெறுவீர்கள். சக ஊழியர்கள் அனுசரணையாக இருப்பார்கள்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

எதிலும் கவனம் தேவை. பெரிய முயற்சியால் எண்ணிய எண்ணங்கள் ஈடேறும். தடைபட்ட காரியங்களின் வெற்றி பெற தகுந்த நபர்களின் உதவியை நாடுவீர்கள். வரவேண்டிய இனங்கள் தக்க நேரத்தில் வந்துசேரும். குடும்ப உறுப்பினர்களிடம் வாக்குவாதம் செய்ய நேரிடலாம். உத்தியோகத்தில் அதிகப் பொறுப்புகள் வந்து சேரும். எதிர்பார்த்த கடன் தள்ளிப் போகலாம். சொந்தத்தொழிலில் புதிய வாடிக்கையாளர் அறிமுகம் கிடைக்கும். கூட்டுத் தொழிலில் வழக்கமான லாபம் குறையாது.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

பணப் பரிவர்த்தனையில் கவனம் அவசியம். ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் போது சிந்தித்து செயல்படுங்கள். பழைய பகை மறையும். நீதிமன்ற வழக்கு சாதகமாக மாறக்கூடும். உத்தியோகத்தில் சிலருக்கு பொறுப்புள்ள பதவிகள் வந்துசேரும். சொந்தத் தொழில் சிறப்படையும் வண்ணம் வாடிக்கையாளர்கள் பெருகுவர். கூட்டுத் தொழில் வியாபாரம் லாபம் ஈட்டித்தரும். தொழிலை விரிவுபடுத்த முயற்சிகளை மேற்கொள்வீர்கள். குடும்பத்தில் சீரானப் போக்கு காணப்படும். பெண்களுக்கு, பிள்ளைகளின் வாயிலாக அக்கம் பக்கத்தினருடன் மனத்தாங்கல் உருவாகும்.

# ‘வானமும் எல்லை இல்லை’


## நிலவு தாண்டியும் தொடரும் பயணம்!



சென்னை மடல்
-பகவான் சிங்-

இந்தியா தனது சந்திரயான்-3 விண்கலத்தை வெற்றிகரமாக நிலவுக்குச் செலுத்தியது குறித்துப் படித்திருப்பீர்கள். இதன் பல காணொளிகளையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள். சென்னைக்கு வடக்கே 100 கிமீ தொலைவில், அண்டை மாநிலமான ஆந்திராவில் உள்ள சிறிஹரிகோட்டா சதீஷ் தவன் விண்வெளி மையத்திலிருந்து ஏவப்பட்ட இந்தக் கலம், தனது 45 நாள் பயணத்துக்குப் பிறகு, ஒகஸ்ட் 23, புதன்கிழமை, மிகத் துல்லியமாக மாலை 6.04 மணிக்கு நிலவில் மென்தரையிறக்கம் செய்தது. இந்த வரலாற்றுச் சாதனையை நிகழ்த்திய இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (ISRO) விஞ்ஞானிகளுக்கு உலகெங்கிலுமிருந்து பாராட்டுகள் குவிந்து வருகின்றன. இதுவரை யாரும் கால் வைத்திராத - கண்டறியாத, நிலவின் இருண்ட பகுதியான அதன் தென் துருவத்தில் சந்திரயான்-3 தரையிறங்கியிருப்பது, சர்வதேச அறிவியல் சமூகத்தைக் குதூகலப்படுத்தியுள்ளது. மேடு பள்ளங்களும் உறைபனியும் கனிம வளங்களும் நிறைந்த இந்தப் பகுதிக்கு விண்கலத்தை அனுப்பிய முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெறுகிறது. இதுவரை நிலவில் மென்மையாகத் தரையிறக்கம் செய்த விண்கலங்களைச் செலுத்திய அமெரிக்கா, சோவியத் யூனியன் மற்றும் சீனா ஆகிய நாடுகள்கூட, அதன் தென் துருவத்தில் தரையிறக்க முயற்சிக்கவில்லை.

சர்வதேச விண்வெளி ஆய்வறிவியல் சமூகத்திற்கு நிலவின் தென் துருவம் குறித்த அதிக ஆர்வம் உண்டு. இப்பகுதியில் இருக்கும் பள்ளங்கள் எப்போதுமே நிழல் விழுந்து இருண்டிருப்பதுடன் (சூரியனை நோக்கிய நிலவின் பக்கத்திற்கு எதிர்ப்பக்கத்தில் இருப்பதால்) நீரும் உறை நிலையில் இருக்கும். இந்த உறை நீர், எதிர்கால மனித ஆய்வுக்கான முக்கியமான வளமாக இருக்கக் கூடும் - நிலவுக்கு விண்வெளி வீரர்களை அனுப்பும் நாசாவின் ஆர்டெமிஸ் திட்டமும் இந்தப் பகுதியைத் தான் குறிவைத்துள்ளது. சூரிய குடும்ப ஆய்வில் மனிதன் செவ்வாய் மற்றும் அதையும் தாண்டியும் பயணிக்க உந்தும் ஒரு காரணியாக இந்த நீர் வளம் இருக்கலாம் - நீரின் கூறுகளை ஹைட்ரஜன், ஒக்சிஜன் என்று பிரித்து, ஹைட்ரஜனை எரிபொருளாகவும் ஒக்சிஜனை விண்வெளி வீரர்களின் சுவாசக் கருவிகளிலும் பயன்படுத்தலாம். மேலும், நிலவில் கிடைக்கும் உறை நீரைக் குடிநீராக மேம்படுத்தி, எதிர்கால விண்வெளி வீரர்கள் பயன்படுத்த முடிந்தால், அவர்களுக்காக பூமியிலிருந்து தண்ணீரை யும் சுமந்து செல்லும் ராக்கெட்டின் பாரம் குறையும். இஸ்ரோ விஞ்ஞானிகள், இந்த விண்கலத்தின் பயணத் தையும் நிலவில் அதன் மென்மையான தரையிறக்கத்தையும் கண்காணித்து வந்தபோது, தென்னாபிரிக்காவின் ஜோகனஸ்பேர்கில் ப்ரிக்ஸ் (BRICS) உச்சி மாநாட் டில் பங்கேற்கச் சென்றிருந்த பாரதப் பிரதமர், இஸ்ரோ கட்டுப்பாட்டு அறையுடன் காணொலி மூலம் தொடர் பில் இணைந்தார். “தற்போது இந்தியா நிலவில் இருக்கி றது” என்று பெருமை பொங்கக் கூறிய அவர், “வானமும் எல்லை இல்லை” என்று பூரித்துப் போனார். தென்னா பிரிக்காவிலிருந்து இந்தத் தரையிறக்கத்தைக் கூர்ந்து கவனித்து வந்தார் அவர். பாரதம் திரும்பிய






Portion of the Chandrayaan-3's landing site taken after landing

பிரதமர், உடனடியாக, சனிக்கிழமை காலையிலேயே, இஸ்ரோ வுக்கு சென்று நேரில் அந்த விஞ்ஞானிகளைப் பாராட்ட பெங்களூருவுக்குப் பறந்தார்.

இந்தத் தரையிறக்கத்திற்கு அடுத்த நாளே, சந்திரயான்-3 கலத்தின் அனைத்து அமைப்புகளும் சீராகச் செயல்படுவதாகவும், நிலவின் பரப்பைச் சுற்றி விஞ்ஞானத் தகவல் திரட்ட அமைக்கப்பட்டுள்ள ரோவர் திட்டமிட்டபடி தனது பணியைத் துவக்கியதாகவும் இஸ்ரோ உறுதிப்படுத்தியுள்ளது.

சந்திரயான்-3 தரையிறக்கத்தைத் தொடர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்த இஸ்ரோ தலைவர் எஸ். சோமநாத், எதிர்கால விண்வெளித் திட்டங்கள் முன்னேற்றப் பாதையில் செல்வதாகக் கூறியபோது, பாரதம் நிலவில் கால் பதித்ததுடன் நில்லாமல், அதையும் தாண்டித் தனது பயணத்தைத் தொடரப் போவதான தகவல் பெருமளவு கவனத்தை ஈர்த்தது. “செப்ரெம்பரில் சூரியனை நோக்கிய திட்டமான ஆதித்யா தயாராகிவிடும். ககன்யான் திட்டமும் முன்னேறி வருகிறது. 2025இல் முதல் முதலில் விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் இந்தத் திட்டத்துக்கு முன்னரே, செப்ரெம்பர் இறுதி அல்லது ஒக்ரோபரில் குழுக் கலனை அனுப்பவும் மீட்கவுமான திறனை நிரூபிக்கும் ஒரு செயல்முறை விளக்கமும், அதைத் தொடர்ந்து பல சோதனைகளும் நடத்தப்படும்” என்று சோமநாத் கூறினார்.

சர்வதேச பாராட்டைப் பெறும் இன்னோர் அம்சம்,

## வாய்ப்பு அனைவருக்கும் உள்ளது

இந்த இந்திய விண்வெளித் திட்டத்திற்கான செலவு. விண்கலத்தின் எடையையும் சேதாரங்களின் அளவையும் குறைத்து விண்வெளியில் விந்தை புரியும் இந்தியாவைக் கண்டு உலகமே வியக்கிறது. “இன்டர்ஸ்டெல்லார் படத்துக்கான செலவை (165 மில்லியன் டொலர்) விட, சந்திரயான்- 3க்கான செலவு (75 மில்லியன் டாலர்) குறைவு என்பது மிகவும் வியப்பாக இருக்கிறது” என்று ட்விட்டரில் பாராட்டுகள் குவிந்தன. இதைத் தொடர்ந்து அமெரிக்க கோடீஸ்வரர் எலான் மஸ்க், “இந்தியாவிற்கு இது மிக நல்லது” என்று குறிப்பிட்டிருக்கிறார்.

முதலீட்டு மேலாண்மை நிறுவனமான ப்ரிட்ஜ் வாட்டர் அசோசியேட்ஸின் ரேடேலியோ, சமூக ஊடகம் வாயிலாக இந்தியாவிற்கு வாழ்த்து தெரிவித்தார். அதில் அவர், வறுமையால் வாடிய சீனா இன்று ஒரு வல்லரசாக உருவெடுக்க, 1984இல் டெங்க் ஷியோபிங் கொண்டு வந்த சீர்திருத்தங்கள் மற்றும் கொள்கை மாற்றங்கள் போல், இந்தியா முன்னணிக்கு வரத் தேவையான சரியான கலவை இப்போது இருக்கிறது” என்று குறிப்பிட்டுள்ளார்.

“இந்தியா முன்னேறி வருகிறது என்பதைக் காட்டும் பல அறிகுறிகளில் வெற்றிகரமான இந்த நிலவுப்பயணமும் ஒன்று. நாடுகளுக்கான ஆரோக்கியக் குறியீடுகளைக் கொண்டு, அடுத்த பத்தாண்டுகளுக்கான வளர்ச்சி விகிதங்களை நான் கணித்ததில், இந்தியா 7 சதவிகித வளர்ச்சியுடன் முதல் நிலையில் இருக்கிறது” என்று டேலியோ தெரிவித்துள்ளார்.

இதையெல்லாம் உங்களிடம் இத்தனை விவரமாக நான் விளக்க என்ன காரணம்? அறிவார்ந்த, உணர்திறன் மிக்க உங்கள் மனங்களில் ஒரு கேள்வியை எழச் செய்வதுதான் என் ஒரே நோக்கம் - “என் இந்திய சகோதர சகோதரிகளால் சாதிக்க முடிந்ததை எங்களால் ஏன் செய்ய முடியாது? நம்மால் முடியும் - நமக்கிடையே உள்ள வேற்றுமைகளைக் களைந்து, நமது சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் தங்கள் மேடைப் பேச்சுகளைத் தமிழ்ச் சமூகத்தின் பிரிவுகளைக் கடை விரிக்கும் சந்தையாக்க அனுமதிக்காமல், ஒன்றாகக் கை கோர்த்து நமது வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் உழைத்தால் மட்டுமே முடியும். அதைச் செய்வோம்”

அரசியலுக்கு வருவோம். சந்திரயான்-3 வெற்றியை வைத்து எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் பிரச்சாரத்தில் மோடியும் பாஜகவும் பயனடைவார்கள் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை. பாஜகவும் அதன் கூட்டணிக் கட்சிகளும் மூன்றாவது முறையாக மோடி பிரதமராவதை உறுதி செய்ய நினைக்கின்றன. எதிர்க் கட்சிகள் சாமர்த்தியமாகப் பெயர் வைத்துள்ள புதிய I.N.D.I.A. கூட்டணி, அவர் மீண்டும் பிரதமராவதைத் தடுக்க ஆவன செய்ய முனைந்துள்ளது.

அனேக எதிர்க் கட்சிகள், குறிப்பாக காங்கிரஸ், சந்திரயான்-3 வெற்றி குறித்த தங்கள் எதிர்வினையில், மிகவும் சில்லறைத் தனமாக நடந்துகொண்டுள்ளன. இஸ்ரோ குழுவினரை அவர்கள் வாழ்த்தியிருக்கிறார்கள், எனினும், கூடவே, இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேரு மற்றும் இந்திய விண்வெளி ஆய்வின் தந்தை எனப் போற்றப்படும் விக்ரம் சாரா பாய் ஆகியோரின் பங்களிப்பையும், அதன் மூலமாகவே இந்த வெற்றி சாத்தியமானது என்றும் கூறியதுடன் பாராட்டை நிறுத்திக் கொண்டார்கள். இதுதான் இன்றைய அரசியல். ஆனால், திமுக தலைவரும் தமிழக முதலமைச்சருமான மு. க. ஸ்டாலின், இந்த விஷயத்தில் ஒரு பரந்த மனபான்மை உள்ள தலைவராக நடந்து கொண்டார். இஸ்ரோவைப் பாராட்டும்போது, பல திட்டங்களில் முக்கிய பங்கு வகித்த தமிழர்களைப் பற்றியும் சுட்டிக்காட்டினார். சந்திரயான்-3 திட்ட இயக்குநர் வீரமுத்துவேலுக்குத் தொலைபேசி மூலம் தனிப்பட்ட முறையிலும் அந்தக் குழுவுக்கு வாழ்த்து தெரிவித்தார். ஒரு மாநில முதல்வரே தனக்குத் தொலைபேசி அழைப்பு செய்து வாழ்த்து சொன்ன மகிழ்ச்சியையும் பெருமையையும் மறைக்க முடியாமல் வீரமுத்துவேல், “ரொம்ப சந்தோஷம் சார், நீங்க போன் பண்ணினதுக்கு” என்று உணர்ச்சி பொங்கக் கூறினார். “உங்கள் தந்தை விழுப்புரத்தில் ஒரு தொலைக்காட்சி பேட்டியில் தனது மகிழ்ச்சியையும் பெருமையையும் வெளிப்படுத்தியதைக் கண்டேன். மிகுந்த மகிழ்ச்சி. நீங்கள் தமிழகம் வரும்போது எனக்குத் தெரியப்படுத்த வேண்டும். நான் உங்களைச் சந்திக்க விரும்புகிறேன்.” என்று ஸ்டாலின் வீரமுத்துவேலிடம் கூறினார்.

வீரமுத்துவேல் உணர்ச்சிப்பூர்வமாகத் தானே பதிவு செய்து வெளியிட்ட ஒரு காணொளி சமூக ஊடகங்களில் பெரிதும் பரவி வருகிறது. அது, இளைய சமூகத்தினருக்கு உற்சாகமூட்டக்கூடியது, ஆகையால் உங்களிடமும் பகிர்ந்து கொள்கிறேன். விழுப்புரத்தைச் சேர்ந்த அந்த விண்வெளி விஞ்ஞானி, தான் ஒரு சாதாரண அரசுப் பள்ளியில் படித்ததாகக் கூறினார். “பள்ளியில் நான் ஒரு சராசரி மாணவன்தான். அடுத்து எங்கு படிக்க வேண்டும், என்ன படிக்க வேண்டும் என்று ஒரு தெளிவில்லை. பெற்றோருக்கும் போதுமான கல்விப் பின்னணி இல்லை. நண்பர்களுடன் சேர்ந்துதான் மெக்கானிக்கல் இஞ்சினியரிங் டிப்ளோமா சேர்ந்தேன். எந்நேரமும் படித்துக்கொண்டிருக்காமல், படிக்கும் நேரத்தில் முழு கவனத்துடன் புரிந்து படித்ததால், நல்ல மதிப்பெண்கள் பெற்றேன். முதுகலைப் படிப்பிலும் முதல் இரண்டு மதிப்பெண்களைப் பெற்று வந்தேன். ஐ ஐ டி-யில் எனது பி.எச்.டி முடித்தேன். தனியார் நிறுவனத்தில் பணியமர்ந்தபோது வானியல் ஆய்வில் ஏற்பட்ட ஆர்வத்தால் ஹிந்துஸ்தான் ஏரோநாடிக்ஸ் நிறுவனத்தில் சேர்ந்தேன். பின்னர், இஸ்ரோவில் பணியாற்றும் எனது கனவு நனவாகும் வாய்ப்பு கிடைத்தது. ஒரு சாமான்யனான என்னால் இது முடிந்தது என்றால், எல்லோராலும் முடியும். வாய்ப்பு அனைவருக்கும் உள்ளது. அதைப் பயன்படுத்திக்கொள்வது நம் கையில் தான் இருக்கிறது. சுய ஒழுக்கம், முழு ஈடுபாடு, கடின உழைப்பு, தனித்தன்மை ஆகியவை இருந்தால் வெற்றி நிச்சயம்.” என்று அவர் கூறியுள்ளார்.

இனிய குடும்பத்துடன் நீங்கள் காலை உணவு அருந்தச் செல்லுமுன் ஒரு நகைச்சுவை - சோக நிகழ்வு பற்றிப் பகிர விரும்புகிறேன். இதுவும் சந்திரயான்-3 திட்டம் பற்றியதுதான். இங்கிலாந்தில் ஒரு தொலைக்காட்சி அறிவிப்பாளர் பேட்ரிக் கிறிஸ்டிஸின் மிக அலட்சியமாக இந்தியாவின் வெற்றிகரமான நிலவுப் பயணம் குறித்த ‘பாராட்டு’ம், அதைத் தொடர்ந்து அவர் விடுத்த அருவருக்கத்தக்க கோரிக்கையும் அவருக்கே வினையாக முடிந்தது - நாட்டில் பெருமளவு வறுமை நிலவும் நிலையில்,

(14ஆம் பக்கம் பார்க்க)

# ராஜபக்ஷக்களின் மீள்வருகை பற்றிய கதைகள்



வீரகத்தி தனபாலசிங்கம்



கடந்த வியாழக்கிழமை ஈழநாடு முதல் பக்கத்தில் "ராஜபக்ஷக்களின் மீள்வருகை சாத்தியம்" என்ற தலைப்பில் ஒரு செய்தி.

இந்திய ஊடகமொன்றுக்கு இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொஹறகொட தெரிவித்த கருத்தை மேற்கோள் காட்டி வெளியிடப்பட்ட அந்த செய்தி தற்போது அலசுவதற்கு வேறு பிரச்சினைகள் இருக்கின்றபோதிலும் கூட, ராஜபக்ஷக்களின் அரசியல் பற்றி மீண்டும் எழுதுவதற்கு இந்த கட்டுரையாளரை தவிர்க்கமுடியாமல் தூண்டியது.

இலங்கை அரசியலில் இதுகால வரையில் ஆதிக்கம் செலுத்தியிருக்கக் கூடிய ஏனைய சகல உயர்வர்க்க குடும்பங்களையும் விஞ்சி பெருமளவுக்கு எதிர்மறையான படிமத்தில் 'பிரபல்யம்' பெற்றிருக்கும் ராஜபக்ஷக்களின் மீள்வருகைச் சாத்தியம் குறித்து ஏற்கெனவே வெளியான கதைகள் பற்றி முன்னரும் இந்த பத்தியில் ஆராய்ந்திருக்கிறோம்.

"ராஜபக்ஷக்களின் மீள்வருகையை நிராகரிக்கமுடியாது. கடந்த வருடத்தைய பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து மூண்ட மக்கள் கிளர்ச்சி காரணமாக பதவியில் இருந்து அகற்றப்பட்ட கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் மீது மக்களுக்கு கடுமையான அதிருப்தி இருக்கின்றபோதிலும், 2024 ஜனாதிபதி தேர்தலில் ராஜபக்ஷக்கள் போட்டியிடுவதற்கு அனுமதிக்கப்படும். தற்போதைய அரசாங்கத்தில் ராஜபக்ஷக்களின் பிரதிநிதித்துவம் இருக்கிறது அந்த குடுப்பத்தின் உறுப்பினர்கள் பலர் அரசாங்கத்தில் இருக்கிறார்கள்" என்று மொரகொட தெரிவித்திருக்கிறார்.

ராஜபக்ஷக்கள் முக்கிய பதவிகளில் இல்லாவிட்டாலும் கூட, அவர்களின் குடும்ப அரசியல் ஆதிக்கத்தை பேணிப் பாதுகாப்பதற்கென்றே உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்றப் பெரும்பான்மை ஆதரவில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான அரசாங்கம் இயங்கிக்கொண்டிருக்கிறது. தொடக்கத்தில் புதிய அரசாங்கத்தின் போக்கை தீர்மானிக்கக் கூடியதாக அவர்களால் ஓரளவுக்கு செல்வாக்கைச் செலுத்த முடிந்தபோதிலும், தற்போது அத்தகைய நிலை இருப்பதாக கூறுவதற்கில்லை.

மக்கள் கிளர்ச்சியின் விளைவாக ஆட்சியதிகாரத்தில் இருந்து இறங்கியதற்கு பிறகு ராஜபக்ஷக்கள் "மீண்டெழுவது" குறித்து தொடர்ச்சியாகப் பேசிவருகிறார்கள்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக தனது இரண்டாவது பதவிக்காலத்தின் முடிவுக்குப் பிறகு அரசியலில் இருந்து ஓய்வுபெற்றிருக்க வேண்டும் என்று குடும்பத்தின் மூத்தவரான சமால் ராஜபக்ஷ கடந்த வருடம் ஒரு தடவை பாராளுமன்றத்தில் கூறியதை எவரும் மறந்திருக்கமாட்டார்கள். ஆனால் மகிந்தவுக்கு அரசியலில் இருந்து ஓய்வு பெறும் எண்ணம் இன்னமும் வரவில்லை. மக்கள் கிளர்ச்சிக்கு பின்னர் சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த நேர்காணலில் அரசியலில் தொடரப் போவதாகவும் பொருத்தமான தருணம் வரும்போது ஓய்வுபெறுவது குறித்து சிந்திக்கப்போவதாகவும் அவர் கூறியிருந்தார்.

மகிந்தவை பொறுத்தவரை அந்த பொருத்தமான தருணம் என்பது எது என்பது எல்லோருக்கும் தெரிந்த இரகசியம். தனது மூத்த மகன் நாமல் ராஜபக்ஷவின் அரசியல் எதிர்காலத்தை உறுதிப்படுத்தும் வரை அவர் ஓய்வுபெற விரும்பமாட்டார். ஆனால் அரசியல் கோலங்கள் அத்தகைய ஒரு வாய்ப்பான நிலையை மீண்டும் ராஜபக்ஷ குடும்பத்துக்கு கொடுக்குமா என்பது ஒரு முக்கியமான கேள்வி.

தங்களுக்கு எதிரான எந்த போராட்டத்தையும் உள்நாட்டு, வெளிநாட்டுச் சதி என்று கூறுவது ராஜபக்ஷக்களின் சுபாவம். தங்களது தவறான ஆட்சிமுறையின் விளைவாகவே பொருளாதார, அரசியல் நெருக்கடிகள் தோன்றின என்பதை அவர்கள் ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை.

நாட்டு மக்கள் தங்களுக்கு கடமைப்பட்டவர்கள் என்ற விசித்திரமான எண்ணத்தை ராஜபக்ஷ குடும்பம் வளர்த்திருக்கிறது. விடுதலை புலிகளை தோற்கடித்து உள்நாட்டுப் போரை முடிவுக்கு கொண்டு வந்ததற்காக சிங்கள மக்கள் தாங்கள் எதைச் செய்தாலும் என்றென்றைக்கும் தங்களை ஆதரிப்பார்கள் என்ற தவறான எண்ணம் அவர்களிடம் வேரூன்றியிருந்தது. அதனால் அதே சிங்கள மக்கள் தங்களது தவறான ஆட்சிமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுந்ததை அவர்களால் மனதால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. உண்மை நிலைவரத்தை புரிந்துகொள்ளாதவர்களாக அவர்கள் தங்களை மக்கள் மீண்டும் ஆதரிப்பார்கள் என்று பேசுகிறார்கள்.

2015 ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த பிறகு நான்கு வருடங்களில் மீண்டும் முன்னரை விடவும் கூடுதல் மக்கள் ஆதரவுடன் ராஜபக்ஷக்கள் வரக்கூடியதாக இருந்த நிலைவரத்துக்கும் நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்த அவர்கள் சகலரும் கூண்டோடு அரசியலில் இருந்து வெளியேற வேண்டும் என்று கோரிநின்ற மக்கள் கிளர்ச்சிக்கு பின்னரான நிலைவரமும் வேறுபட்டவை என்பதை அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

மக்கள் கிளர்ச்சி படைபலத்தின் மூலம் ஒடுக்கப்பட்டிருக்கலாம். அதற்கு பிறகு முன்னெடுக்கப்படும் அரசாங்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் கூட ஒடுக்கப்பட்டுவருகின்றன. ஆனால் அந்த மக்கள் கிளர்ச்சி தென்னிலங்கை சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கக் கூடிய அரசியல் சிந்தனைகள் வெளிக்காட்டப்படுவதற்கு ஒரு தேர்தல் மூலம் இதுவரை வாய்ப்பு வழங்கப்படவில்லை.

ஆட்சிமுறையின் கெடுதியான போக்குகள் சகலவற்றையும் (ஊழல் மோசடி, பொதுச்சொத்துக்களை சூறையாடல், அதிகார துஷ்பிரயோகம், சட்டம், ஒழுங்கு சீர்குலைவு, பேரினவாத அரசியலை முன்னெடுத்து சிறுபான்மை இனங்களின் இருப்பை ஆபத்துக்குள்ளாக்குவது) உருவகிப்பவர்களாக ராஜபக்ஷக்கள் விளங்கினார்கள்.

சகல முனைகளிலும் நாட்டை படுமோசமான நிலைக்கு கொண்டு வந்துவிட்டு தங்களுக்கு இருக்கும் பொறுப்புக்கூறல் கடப்பாட்டையும் அலட்சியம் செய்துவரும் ராஜபக்ஷக்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வந்து எதைத்தான் சாதிக்கப்போகிறார்களோ தெரியவில்லை.

ஆட்சியதிகாரம் என்பது ஏதோ தங்களுக்கு மாத்திரமே நிலையான உரித்து என்ற நினைப்பில் அவர்கள் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்கும் பொறுப்பை கையாளுவதற்காக ரணில் விக்கிரமசிங்கவை இடைக்காலத்தில் ஜனாதிபதியாக்கி விட்டு நிலைவரங்களை அவதானித்துக்கொண்டிருப்பது போன்ற தோறணையில் ராஜபக்ஷக்கள் பேசிவருகிறார்கள்.

**"சகல முனைகளிலும் நாட்டை படுமோசமான நிலைக்கு கொண்டு வந்துவிட்டு தங்களுக்கு இருக்கும் பொறுப்புக்கூறல் கடப்பாட்டையும் அலட்சியம் செய்துவரும் ராஜபக்ஷக்கள் மீண்டும் அதிகாரத்துக்கு வந்து எதைத்தான் சாதிக்கப்போகிறார்களோ தெரியவில்லை.**

ராஜபக்ஷக்களுக்கு ஆட்சியதிகாரம் தேவைப்படலாம். ஆனால் நாட்டு மக்களுக்கு மீண்டும் ராஜபக்ஷக்கள் தேவையா? அவர்களின் மீள்வருகை சாத்தியம் என்று எந்த அடிப்படையில் மிலிந்த மொரகொட போன்றவர்கள் கூறுகிறார்கள் என்று புரியவில்லை.

ராஜபக்ஷக்கள் ஆட்சியதிகாரத்தில் இருந்த காலப்பகுதியில் அவர்களின் முழுமையான அனுசரணையுடன் முறைகேடான வழிகளில் பெருமளவு சொத்துக்களை குவித்த அரசியல்வாதிகளும் பெருமுதலாளித்துவ கும்பலும் மீண்டும் அவர்கள் ஆட்சிக்கு வரவேண்டும் என்று விரும்புகிறார்கள். தாங்களும் தங்களைச் சார்ந்தவர்களும் பொதுச்சொத்துக்களை வாரிச்சுருட்டுவதற்கு வசதியாக ராஜபக்ஷக்கள் கடைப்பிடித்த "புரவுக் கலாசாரம்" (Patronage culture) இத்தகைய மிகவும் விசுவாசமான கும்பல்களை உருவாக்கியிருக்கிறது.

அதேவேளை ராஜபகஷக்களை பொறுத்தவரை ஒன்றில் தாங்கள் ஆட்சிக்கு மீண்டும் வரவேண்டும் அல்லது கடந்த காலத் தவறுகளுக்கு தங்களை பொறுப்புக்கூற வைப்பதில் அக்கறை காட்டாத எவராவது ஆட்சிக்கு வருவதை உறுதிசெய்யவேண்டும் என்ற நிலை.

தற்போது அரசியல் கட்சிகள் எதிர்காலத் தேர்தல்களை குறிவைத்து கூட்டணிகளை அமைப்பதற்கு முன்னெடுக்கும் முயற்சிகளில் ஒரு விசித்திரமான அம்சத்தை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

ராஜபக்ஷக்கள் ஆட்சியதிகாரத்தில் இருந்தபோது எதிரணி கட்சிகளின் குறிப்பாக பிரதான எதிரக்கட்சியாக இருந்த ஐக்கிய தேசிய கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகளைக் காட்டி அவர்களை தங்கள் பக்கம் இழுத்தார்கள். அவர்களின் ஆட்சிக்காலத்தில் எதிரணி பலவீனமாக இருந்ததைப் போன்று முன்னர் ஒருபோதும் இருந்ததில்லை எனலாம்.

ஆனால், தற்போது அவர்களின் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களை தங்கள் பக்கம் இழுக்கும் முயற்சிகளில் ஏனைய கட்சிகள் இறங்கியிருக்கின்றன.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதில் தங்களுக்கு இருக்கும் விருப்பத்தை பொதுஜன பெரமுனவின் சில அரசியல்வாதிகள் குறிப்பாக அமைச்சர்கள் ஏற்கெனவே வெளியிட்டிருக்கும் நிலையில் அந்த கட்சியின் முக்கிய சில உறுப்பினர்கள் ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டணி அமைப்பதற்காக முயற்சிகளை ஆரம்பித்திருக்கிறார்கள்.

கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நிமால் லான்சா "முதன்மையான கூட்டணி" (Alliance Number One) என்ற பெயரில் தனியாக இயங்கத் தொடங்கியிருக்கியிருக்கிறார். பொதுஜன பெரமுனவின் நாற்பதுக்கும் அதிகமான பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தனக்கு இருப்பதாக கூறும் அவரின் நோக்கம் தங்களுடன் ஒத்துப் போகக்கூடிய வேறு கட்சிகளையும் இணைத்துக்கொண்டு ஐக்கிய தேசிய கட்சியுடன் பரந்த கூட்டணியொன்றை அமைப்பதேயாகும்.

அவரின் இந்த முயற்சிக்கு உடந்தையாக செயற்படவேண்டாம் என்று பொதுஜன பெரமுனவின் 'மெய்யானஜ' தலைவரான பசில் ராஜபக்ஷ ஜனாதிபதி விக்கிரமசிங்கவை சந்தித்து கேட்டுக் கொண்டதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

அதேவேளை, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவும் தனது ஐக்கிய மக்கள் சக்திக்கும் பொதுஜன பெரமுனவில் இருந்து வெளியேறி பாராளுமன்றத்தில் சுயாதீனமான அணியாக இயங்கும் டலஸ் அழகப்பெரும, பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தலைமையிலான குழுவுக்கும் இடையில் கூட்டணியை அமைக்கும் முயற்சியாக பேச்சுவார்த்தைகளை நடத்திவருகிறார்.

இந்த முயற்சிகள் பொதுஜன பெரமுனவை மேலும் பலவீனப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. இதை எவ்வாறு ராஜபகஷக்கள் கையாளப் போகிறார்கள் என்பது இன்னொரு கேள்வி.

பேரினவாத அணிதிரட்டல் என்பது அவர்களுக்கு கைவந்த கலை. மீண்டெழுவதற்கு அவர்களுக்கு இருக்கக்கூடிய ஒரே வழிமுறை திரும்பவும் பேரினவாத அணிதிரட்டலே. தற்போது அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை மையமாகக் கொண்டு தென்னிலங்கையில் மூண்டிருக்கும் சர்ச்சையையும்

(14ஆம் பக்கம் பார்க்க)

# 2024 ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் ஒருவரை நிறுத்துவது...!

**பனங்காட்டான்**

அரசியலமைப்பின் பிரகாரம் ஜன நாயக ரீதியாக இலங்கை நான்கு தேர்தல் களை உட்படுத்தியது. உள்ளூ ராட்சிச் சபைகள், மாகாண சபைகள், நாடாளு மன்ற உறுப்பினர் தெரிவு, ஜனாதிபதி தெரிவு என இவை வகைப் படும்.

உள்ளூராட்சிச் சபைகளும் மாகாண சபைகளும் தேர்தலை எதிர்நோக்கி காய்ந்து கொண்டிருக்கின்றன. உள்ளூ ராட்சிச் சபைகளுக்கான தேர்தல்களுக்கு வேட்பு மனுக்கள் கோரப்பட்டு தாக்கல் செய்யப்பட்டதாயினும், தேர்தல் நடைபெறவில்லை. வேட்பாளர்கள் கட்டுப்பணம் இதுவரை மீளளிக்கப்பட வுமில்லை.

காய்களை நகர்த்தி வருகிறார்.

இந்தாண்டு நவம்பர் மாதத்துக்குப் பின்னர் - அநேகமாக அடுத்தாண்டு முற் பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத் தும் விருப்பத்துடன் தம்மை பலப் படுத்தி வருகிறார் ரணில். இவரது மொழியில் பலப்படுத்துவது என்பது, மற்றைய சகல கட்சிகளையும் பலவீன மாக்கி பிளவுபடுத்துவது என்பதாகும். இதுவரை ஓரளவுக்கு இவர் இவ்விடயத் தில் வெற்றி கண்டுள்ளாரென்று கூற லாம்.

"நான் எவரையும் பிளவுபடுத்தி ஆள் சேர்க்கவில்லை. நீங்கள் உங்கள் கட்சி களையும் உறுப்பினர்களையும் கவனமா கப் பார்த்துக் கொள்ளுங்கள். என்னிடம்









உள்ளூராட்சித் தேர்தல்களை முன் னறிவித்தவாறு நடத்துமாறு நீதிபரிபால னம் தீர்ப்பளித்தும், அதியுத்தம ஜனாதி பதியே நிதியமைச்சர் என்ற ரீதியில் பல காரணங்களை முன்னிறுத்தி காணாமல் செய்துள்ளார் ரணில் விக்கிரமசிங்க. தேர்தலை நடத்த நிதியுமில்லை, நீதியு மில்லை என்று கைவிரித்தாகி விட்டது.

மாகாண சபைகளுக்கான தேர்தலை உடனடியாக நடத்துமாறு ஆர்வமுள்ள கட்சிகள் கோரி வருகின்றன. தேர்தல் முறைமை மாற்றம், நாடாளுமன்ற அங்கீ காரம், நாடாளுமன்ற உறுப்பினர்களை யும் மாகாண சபைகளுக்குள் புகுத்துவது என்று பல மாற்றங்கள் பற்றிக் கூறி வரும் ரணில் விக்கிரமசிங்க தமது நப்பர் ஸ்ராம்புகளாக ஆளுனர்களை நியமித்து மாகாண நிர்வாகத்தை தொடருகின்றார்.

நாடாளுமன்றத்துக்கான தேர்தல் ஐந்தாண்டுகளுக்கு ஒரு தடவை இடம் பெற வேண்டியது. கடைசித் தேர்தல் 2020 ஆகஸ்ட் ஐந்தாம் திகதி நடை பெற்றது. இந்த மாதம் தான் மூன்றாண்டு கள் முடிவுற்றது.

வழக்கமாக ஜனாதிபதித் தேர்தலை நடத்தி மகாஜனங்களின் நாடி பிடித்துப் பார்த்து அதன் பின்னர் பொதுத்தேர்தல் நடத்துவதே இலங்கையிலுள்ள நடை முறை. இவ்வாறு செய்வதால் புதிதாக ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுப வரின் கட்சி நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெறும் வாய்ப்பு அதிகமுண்டு.

இந்தப் பின்னணியில் பார்க்கும் போது ஜனாதிபதித் தேர்தல் விரைவில் நடைபெறும் சாத்தியமுண்டு. 2019 நவம் பரில் இடம்பெற்ற தேர்தலில் சிங்கள பௌத்தர்களின் ஏகோபித்த வாக்குக ளால் கோதபாய ராஜபக்ச வெற்றிபெற் றார். முழுமையாக மூன்று ஆண்டு களைக்கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையில் அவருக்கு வாக்களித்த மக்களே அவரை விரட்டித் துரத்தி பதவி துறக்க வைத்தனர்.

அவரது எஞ்சிய பதவிக்காலமான 2024 நவம்பர் வரைக்கும் ரணில் விக்கி ரமசிங்கவை ஜனாதிபதியாக நாடாளு மன்றம் தெரிவு செய்தது. குருட்டு நல் வாய்ப்பினால் ஜனாதிபதியான இவர், அடுத்த ஜனாதிபதியாக மக்களால் தெரிவு செய்யப்படக்கூடிய சூழ் நிலையை உருவாக்கும் இலக்கு நோக்கி

சேர விரும்பி வருபவர்களை நான் சேர்த் துக் கொள்வதில் என்ன தவறு?" என்று தனக்கேயுரிய பாணியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிடம் நேரில் தெரிவித்ததனூடாக இவரது பாணி என்னவென்பதை புரிந்து கொள்வது இலகுவானது.

2024 நவம்பர் மாதத்துக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தல் நடந்தாக வேண் டும். இதில் ரணில் போட்டியிடுகிறார் என்பது உறுதி. அதற்கு ஏதுவாக தமது மைத்துனரான (தாய்மாமன் மகன்) றுவான் விஜேவர்த்தனவை ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவராக்கி தொகுதிகள் ரீதியாக பணிகளைப் பலப்

> 1982ல் இடம்பெற்ற முதலாவது ஜனாதிபதித் தேர்தலில் முதலாவது ஜே. ஆர்.ஜெயவர்த்தனை எதிர்த்துப் போட்டியிட்ட குமார் பொன்னம்பலம் யாழ்ப்பாண மாவட்டத்தில் 87,263 வாக்குகளைப் பெற்று முதலிடத்துக்கு வந்து ஜெயவர்த்தனவை மூன்றாம் இடத்துக்குத் தள்ளிவிட்டார். 2005 ஜனாதிபதித் தேர்தலை தாயகத் தமிழர் புறக்கணித்த போதிலும் வடக்கு கிழக்கின் ஐந்து மாவட்டங்களிலும் சுமார் 44,000 வாக்குகளை ரணில் விக்கிரமசிங்க பெற்றார். இத்தேர்தலில் மகிந்த ராஜபக்ச வென்றாராயினும் சுமார் 24,000 வாக்குகளே தமிழர் தாயகத்தில் இவருக்குக் கிடைத்தன. இந்தப் புள்ளிவிபரத்தின் அடிப்படையிலான கணிப்பீடும் மதிப்பீடும் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் வியூகத்துக்கு முக்கியமானவை.

படுத்தும் பொறுப்பையும் ஒப்படைத் துள்ளார்.

பொதுஜன பெரமுனவில் நாமல் ராஜ பக்சவுக்கு சரியான போட்டியாளராக றுவான் விஜேவர்த்தனவை ரணில் வளர்த்து வருவது பகிரங்க விடயம். கடந்த பொதுத்தேர்தலில் தோல்வி கண்ட ரணிலின் பழைய கூட்டாளிகள் பலரும் இப்போது அவரது ஆதரவுக் குழாமில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். மற்றைய சிங்களக் கட்சிகள் சார்பில் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடுப வர்கள் பற்றி இதுவரை எதுவும் உத்தி யோகபூர்வமாக அறிவிக்கவில்லை.

தமிழர் தரப்பில் ஒருவர் ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்பட வேண்டுமென்ற குரல் இப்போது அங்குமிங்குமாக கேட் கத் தொடங்கியுள்ளது. முன்னைய காலங்களிலும் இவ்வாறு பேசப்பட்டது. தமிழர் அரசியல் தரப்பில் அனைவரா லும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒருவரை கண்டுபிடிக்க வேண்டுமென்றும் கூறப் படுகிறது. (இதற்கும் கொழும்பிலிருந்து தான் புதுமுகம் ஒன்று இறக்கப்பட வேண்டுமோ தெரியாது).

தமிழர்களின் மூத்த அரசியல் கட்சி களான தமிழ்க் காங்கிரசும், தமிழரசும் பொதுவாக ஐக்கிய தேசிய கட்சியில் நம்பிக்கை கொண்டவர்களாகவே டி.எஸ்.சேனநாயக்க காலத்திலிருந்து நல்லாட்சி ரணில் விக்கிரமசிங்கவரை செயற்பட்டு வந்துள்ளன. 'ஐக்கிய தேசிய' என்ற பெயரில் அக்கட்சி இருப்பதாலோ, அல்லது அவர்கள் ஆட்சியின்போது ஏதாவது பெறலாம் என்ற நம்பிக்கையாலோ இது ஏற்பட்டி ருக்கலாம். சொல்லப்போனால் இரண்டு சிங்களக் கட்சிகளும் தமிழரின் தலை யைச் சுற்றி ஏமாற்றியதே வரலாறு.

இந்த நிலைப்பாட்டில், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் ஒருவரை - தமிழரின் பலத்தையும் பேரம் பேசும் சக்தியையும் நிலைநாட்டுவதற்காகவா வது நிறுத்த வேண்டுமென்ற எண்ணப் பாடு இப்போது காணப்படுகிறது.

ராஜபக்ஷக்களையும் தோற்கடிக்க வேண்டுமென்பதற்காகவே அடுத்தடுத்து வந்த இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் யுத்த கால ராணுவத் தளபதி சரத் பொன் சேகாவையும், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மைத்திரிபால சிறிசேனவையும் தமிழர்கள் ஆதரித்தனர் என்பதே நிகழ்

கால சரித்திரம். இவர்கள் இருவரும் ரணி லின் ஐக்கிய தேசிய கட்சியின் தலை மைத்துவத்திலேயே போட்டியிட்ட வர்கள்.

ஆனால், இவர்கள் இருவருக்கும் முன் னர் - 2005ம் ஆண்டு ஜனாதிபதித் தேர் தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டி யிட்டபோது, தமிழர்கள் தேர்தலை புறக் கணிக்கும் சூழ்நிலை ஏற்பட்டது. ரணில் அத்தேர்தலில் சுமார் 190,000 வாக்குக ளால் மகிந்த ராஜபக்ஷவிடம் தோல்வி கண்டார். வடக்கு கிழக்குத் தமிழர்கள் தேர்தலைப் புறக்கணித்ததால்தான் மகிந்த வெற்றி பெற்றார் என்ற வாதம் இன்றுமுண்டு. தமிழர்கள் தேர்தலைப் புறக்கணிக்காது வாக்களித்திருந்தால் ரணில் வென்றிருப்பாரென்றும் சிலர் கணக்கிட்டிருந்தனர்.

இத்தேர்தலில் தமிழர் தாயகத்தின் யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, திருமலை, அம்பாறை ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் மொத்தம் 44,230 வாக்குகள் ரணிலுக்குக் கிடைத்தன. ஆனால், தேர்தலில் வெற்றி பெற்ற மகிந்தவுக்கு இந்த ஐந்து மாவட்டங்களி லும் 23,000 வாக்குகளே கிடைத்தன. யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் மகிந்தவிலும் பார்க்க ரணில் 4,000 வரை யான மேலதிக வாக்குகளையும், மட்டக் களப்பு மாவட்டத்தில் 90,000 மேலதிக வாக்குகளையும் பெற்றிருந்தாரென்பது கவனிக்கப்பட வேண்டியது.

1977ம் ஆண்டின் புதிய அரசியல மைப்பின் கீழான முதலாவது ஜனாதி பதித் தேர்தல் 1982 அக்டோபர் 20ம் திகதி இடம்பெற்றது. இத்தேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் கட்சி சார்பில் குமார் பொன்னம்பலம் (கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தந்தை) போட்டி யிட்டார். ஐக்கிய தேசிய கட்சி சார்பில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும், சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் ஹெக்டர் கொபேகடுவவும் போட்டியிட்டனர். ஜே.ஆர்.ஜெயவர்த்தன யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்த மற்றைய அனைத்து மாவட்டங்களிலும் அதிகூடிய வாக்கு களைப் பெற்று முதலிடத்தில் வந்தார்.

ஆனால், யாழ்ப்பாண மாவட்டத்தில் ஜெயவர்த்தன மூன்றாவது இடத்துக்குத் தள்ளப்பட்டார். இங்கு முதலாவது இடத்துக்கு வந்த குமார் பொன்னம்பலத் துக்கு 87,263 வாக்குகள் கிடைத்தன. 77,300 வாக்குகளை இரண்டாம் இடத் துக்கு வந்த கொபேகடுவ பெற்றார். ஜெயவர்த்தனவுக்கு யாழ்ப்பாண மாவட் டத்தில் 44,780 வாக்குகள் மட்டுமே கிடைத்தன.

யாழ்ப்பாணத்தார் தம்மை அவமா னப்படுத்தி விட்டதாக ஜெயவர்த்தன பல தடவை கூறினாரென்று அவருக்கு நெருக்கமாக இருந்த அப்போதைய அமைச்சரான காமினி திசநாயக்க தமது கட்டுரைகளில் சுட்டிக்காட்டியிருந்தார். யாழ்ப்பாணத் தமிழர் பற்றி தமக்கு அக்கறையில்லை என்று 1983 யூலை 11ஆம் திகதி (ஜனாதிபதித் தேர்தலின் எட்டு மாதங்களின் பின்னர்) லண்டன் ரெலிகிராப் பத்திரிகைக்கு ஜெயவர்த்தன தெரிவித்தமைக்கு, யாழ்ப்பாணத்தில் கிடைத்த அவமானமே காரணமாக இருந்திருக்கலாம்.

இத்தேர்தல் பற்றிய இன்னொரு முக்கிய அம்சம் என்னவெனில், மட்டக் களப்பு மாவட்டத்தில் ஜெயவர்த்தன வுக்கு 48,094 வாக்குகளும், குமார் பொன்னம்பலத்துக்கு 47,095 வாக்கு களும் கிடைத்தன. இதன்படி ஜெயவர்த் தன 99 மேலதிக வாக்குகளால் மட்டும் குமார் பொன்னம்பலத்தைவிட மேலதிக மாகப் பெற்று முதலிடத்துக்கு வந்தா ரென்ப தும் வரலாற்றுப் பதிவுக்குரியது.

2024 முற்பகுதியில் நடைபெற லாமென எதிர்பார்க்கப்படும் ஜனாதி பதித் தேர்தலில் தமிழர் ஒருவரை நிறுத்து வது பற்றி ஆலோசிக்கப்படும் வேளை யில், முன்னைய தேர்தல்களின் முடிவுகள் பற்றிய கணிப்பீடும் மதிப்பீடும் அவசியமாகிறது.



# புகுஷிமா அணுஉலை கழிவுநீர் பசுபிக் கடலில் திறப்பு!

ஜப்பானின் புகுஷிமா அணுஉலை கழிவு நீரை சுத்திகரித்த பின்னர் பசிபிக் பெருங்கடலில் ஜப்பான் திறந்து விட்டுள்ளது. இதனை ஐ.நா. அணுசக்தி பாதுகாப்பு அமைப்பு ஏற்றுக் கொண்டாலும், அந்த நீரில் இன்னும் கதிரியக்கம் எஞ்சியிருக்குமோ என்ற அச்சம் அகலவில்லை. இதையடுத்து, ஜப்பானில் இருந்து மீன்களை இறக்குமதி செய்ய சீனாவும், தென் கொரியாவும் தடை விதித்துள்ளன. ஹாங்காங்கும் விரைவில் தடை விதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுபோன்ற தடைகளை எதிர்கொள்ள ஜப்பானும் தயாராகி வருகிறது.

ஜப்பானை 2011ஆம் ஆண்டு தாக்கிய நிலநடுக்கம் மற்றும் சுனாமியால் புகுஷிமா அணுமின் நிலையத்திற்குள் கடல் நீர் புகுந்தது. இதனால் சேதமடைந்த அணு உலைகளில் இருந்த கதிரியக்க எரிபொருளை குளிர்விக்க ஏராளமான கடல் நீர் உள்ளே “பம்ப்” செய்யப்பட்டது. கதிரியக்கம் கலந்த அந்த அணுகழிவு நீரைத் தான் ஜப்பான் தற்போது பசிபிக் பெருங்கடலில் திறந்துவிட்டுள்ளது.

**ஜப்பான் என்ன சொல்கிறது?**

சேதடைந்த புகுஷிமா அணுஉலையை குளிர்க்க பல கோடி லிட்டர் கடல் நீர் பயன்படுத்தப்பட்டது. அந்த கழிவு நீர் தற்போது ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொட்டிகளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் பல சுற்றுகள் சுத்திகரிக்கப்பட்ட அந்த நீரை இனியும் அப்படியே வைத்திருப்பது சரியான தீர்வாகாது என்று வாதிடும் ஜப்பான், அதனை பாதுகாப்பான முறையில் சிறிதுசிறிதாக பசிபிக் பெருங்கடலில் கலந்து நீர்த்துப் போகச் செய்து விடலாம், அதனால் எந்த பாதிப்பும் வராது என்று கூறுகிறது. பசிபிக் பெருங்கடலில் உள்ள கதிரியக்கத்தின் அளவை தொடர்ந்து கண்காணிக்கவும், வெளிப்படைத்தன்மையை பராமரிக்கவும் ஜப்பான் அரசு உறுதியளித்துள்ளது.

ஜப்பானின் வாதத்தை பல அறிவியலாளர்களும் ஏற்றுக் கொள்கின்றனர். ஐ.நா. அணுசக்தி பாதுகாப்பு அமைப்பும் கூட ஜப்பானின் திட்டத்தை அங்கீகரித்துள்ளது. இது சர்வதேச தரத்திற்கு உட்பட்டது, அது சுற்றுச்சூழலில் ஏற்படுத்தும் தாக்கம் நாம் கவலை கொள்ளத் தேவையில்லாத அளவுக்கு மிகச்சிறியதாகவே அமையும் என்று அந்த அமைப்பு கூறியுள்ளது.

**சீனாவும், சில விஞ்ஞானிகளும் எதிர்ப்பது ஏன்?**

ஜப்பானின் புகுஷிமா திட்டத்திற்கு எதிர்ப்பும் இருக்கவே செய்கிறது. புகுஷிமா அணுஉலை கழிவு நீரை என்னதான் சுத்திரித்தாலும் அதில் ட்ரிட்டியம் மற்றும் கார்பன்-14 ஆகிய கதிரியக்கத் தனிமங்கள்



## மீன்கள் கதிர்வீச்சால் பாதிக்கப்படுமா?





இன்னும் ஆபத்தான அளவுக்கு இருப்பதாகவும், அவற்றை நீக்குவது மிகவும் கடினம் என்று சில விஞ்ஞானிகள் வாதிடுகின்றனர்.

பசிபிக் பெருங்கடலில் கலப்பதன் மூலம் அதனை நீர்த்துப் போகச் செய்துவிடலாம் என்ற ஜப்பானின் வாதத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றனர். ஜப்பான் கலன்களில் தேக்கி வைத்துள்ள அணுஉலை கழிவுநீரை இன்னும் சில பரிசோதனைகளுக்கு உட்படுத்த வேண்டும் என்று அவர்கள் கூறுகின்றனர். பெருங்கடலின் சுற்றுச்சூழல், கடல்வாழ் உயிரினங்களின் வாழ்க்கை ஆகியவற்றில் இது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை ஆய்வு செய்ய வேண்டும் என்பது அவர்களின் நிலைப்பாடு.

**புகுஷிமா நீரைத் திறக்க ஜப்பான் மீனவர்கள் எதிர்ப்பு**

புகுஷிமா அணுஉலை கழிவுநீரை பசிபிக் பெருங்கட லில் திறந்து விடும் ஜப்பான் அரசின் திட்டத்தை அந்நாட்டு மக்களே ஒருமனதாக ஆதரிக்கவில்லை. சமீபத்தில் நடத்தப்பட்ட ஆய்வில், ஜப்பானில் சரிபாதி மக்களே அரசின் திட்டத்தை ஆதரிக்கின்றனர். ஜப்பான் மீனவர்கள் மற்றும் கடலோர பகுதிகளில் வாழும் மக்களிடையே அரசின் திட்டத்திற்கு எதிர்ப்பு அதிகமாக இருக்கிறது.

2011ஆம் ஆண்டு புகுஷிமா பேரழிவுக்குப் பின்னர் ஏற்பட்ட பொருளாதார சீர்குலைவில் இருந்து இன்னும் முழுமையாக மீளாத அவர்கள், ஜப்பான் அரசின் திட்டத்தால் இன்னும் கூடுதலாக மக்கள் கடல் உணவை புறக்கணிக்கக் கூடும் என்று அஞ்சுகின்றனர். இதனால், தங்களது வாழ்வாதாரம் முற்றிலும் சீர்லைந்துவிடும் என்று அவர்கள் கவலைப்படுகின்றனர்.

“அணு கழிவுநீரை பசிபிக் கடலில் கலப்பதை விட சிறந்த வேறு பல தீர்வுகள் இருக்கக் கூடும். ஆனால், அவர்கள் இந்த நீரை கடலில் திறந்துவிட முடிவு செய்துள்ளனர். இதனால் உலகிற்கும் பிரச்னைதான். இதனை ஏற்றுக் கொள்ளவே முடியாது.” என்று ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் பேசிய ஜப்பான் மீனவர்கள் தெரிவித்தனர்.



**சீனாவின் எதிர்வினை என்ன?**

2011ஆம் ஆண்டு புகுஷிமா அணுஉலை விபத்து நேரிட்டதுமே, அந்த பிராந்தியத்தில் பிடிக்கப்படும் மீன்களை இறக்குமதி செய்ய ஐரோப்பிய ஒன்றியம், சீனா, தென் கொரியா ஆகியவை தடை விதித்து விட்டன. தற்போது, புகுஷிமா அணுஉலை கழிவு நீரை திறந்துவிடும் ஜப்பானின் நடவடிக்கைக்கு எதிராக சீனா மட்டுமே கடுமையாக எதிர்வினை புரிகிறது. தடையைத் தொடர்ந்தாலும், ஜப்பானின் தற்போதைய நடவடிக்கைக்கு எதிராக தென்கொரியா வெளிப்படையாக இதுவரை எதுவும் தெரிவிக்கவில்லை. சியோலில் ஜப்பான் தூதரகத்தை முற்றுகையிட முயன்ற போராட்டக்காரர்கள் அங்கே கைது செய்யப்பட்டுள்ளனர்.

மறுபுறம், சீனாவோ புகுஷிமா பிராந்தியத்திற்கு மட்டுமே இருந்த தடையை, ஜப்பான் முழுமைக்குமாக விரிவாக்கியுள்ளது. ஜப்பானில் இருந்து கடல் உணவு இறக்குமதியை சீனா முற்றிலுமாக தடை விதித்துள்ளது. சீனாவைப் பின்தொடர்ந்து ஹாங்காங்கும் விரைவில் தடை விதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஜப்பான் ஏற்றுமதி செய்யும் மீன்களில் பாதிக்கும் மேல் இந்த இரு நாடுகளுக்கும்தான் செல்கிறது.

**ஜப்பான் எப்படி சமாளிக்கப் போகிறது?**

2021-ம் ஆண்டு இந்த திட்டத்தை முன்மொழியும் போதே எதிர்ப்பு கிளம்பியதால், இதுபோன்ற எதிர்வினைகள் வரலாம் என்பதை எதிர்பார்த்தே, ஜப்பான் அரசு மீனவர்களை காக்க மாற்றுத்திட்டத்தை ஏற்கனவே வகுத்துள்ளது. புகுஷிமா அணுஉலை கழிவுநீரை பசிபிக் பெருங்கடலில் திறந்துவிட்ட பிறகு, ஜப்பான் மீனவர்கள் பிடிக்கும் மீன்களை விற்பதில் சிரமம் ஏற்பட்டால் அரசே அவற்றை வாங்கிக் கொள்ளும் என்று அந்நாடு தெரிவித்துள்ளதாக ஜபபான் டைம்ஸ் இதழ் கூறியுள்ளது.

புகுஷிமா மற்றும் ஜப்பான் பிற பகுதிகளில் பிடிக்கப்படும் மீன்களை வாங்க புதிய நிதி ஒன்று உருவாக்கப்படும் என்று அதிகாரிகள் கூறியதாகவும் அந்த செய்தி கூறுகிறது.

**‘சூஷி’ உணவை விரும்பும் சீனர்கள் என்ன சொல்கிறார்கள்?**

சீனா மற்றும் ஹாங்காங்கில் ஜப்பானிய கடல் உணவான “சூஷி” மக்களிடையே வெகுவாக பிரபலம். ஜப்பான் நடவடிக்கைக்கு எதிர்வினையாக இது போன்ற தடைகள் வரக்கூடும் என்று கணித்த உள்ளூர் மக்கள், இப்போதே ஜப்பானிய உணவகங்களுக்கு படையெடுத்த வண்ணம் உள்ளனர். இதனால், கடந்த சில வாரங்களால் ஜப்பானிய உணவகங்களில் வழக்கத்தை விட விற்பனை அதிகமாக இருக்கிறது.

“ஜப்பானிய கடல் உணவுகளை தொடர்ந்து ருசிப்பேன். அந்த அளவுக்கு அதன் ருசிக்கு நான் அடிமையாகி விட்டேன்” என்கிறார் ஹாங்காங்கில் உள்ள ஜப்பானிய உணவகத்திற்கு வெளியே காத்திருக்கும் ஹூ என்ற வாடிக்கையாளர்.

**புகுஷிமாவில் என்ன நடக்கிறது?**

வியாழனன்று உள்ளூர் நேரப்படி பிற்பகல் ஒரு மணி முதல் புகுஷிமா அணுஉலை கழிவுநீரை பசிபிக் பெருங்கடலுக்குள் திறந்து விடப்படுவதாக ஜபபானிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதற்கென கட்டப்பட்டுள்ள சுரங்கப்பாதை வழியே இந்த கழிவுநீர் பசிபிக் பெருங்கடலில் கலப்பதாக அவர்கள் கூறியுள்ளனர்.

புகுஷிமா அணுஉலையில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொட்டிகளில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் பல கோடி லிட்டர் கதிரியக்க நீர் சிறிதுசிறிதாக அடுத்த 30 ஆண்டுகளில் முழுவதுமாக பசிபிக் பெருங்கடலுக்குள் கலக்கப்படும் என்பதே ஜப்பான் அரசின் திட்டம்.

# வாட்டி வதைக்கும் நீண்ட கோடை...!

அறிக்கையிடல்
REPORTING
என். குகராஜ்



நாட்டில் வறட்சி காலநிலை நீடித்து வருகிறது. இந்த ஆண்டின் கோடை காலம் நீண்டதாக மாறியுள்ளதால் குடிதண்ணீருக்கு மக்களும் கால்நடைகளும் அலைய வேண்டியுள்ளது. வாட்டும் இந்தக் கோடையை சமாளிப்பதற்கு மக்கள் பெரும் எத்தனங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. நீளும் – வாட்டி வதைக்கும் – இந்தக் கோடை குறித்து மக்கள் தங்கள் கருத்துகளை வெளியிடுகின்றனர்.

## பழங்களை வாங்குவதில் மக்களுக்கு ஆர்வம் இல்லை



**ஆ. ராஜ்,**
பழ வியாபாரி,
யாழ்ப்பாணம் நகரம்.

வெயில் காலத்தில் மக்கள் பழங்களை வாங்க வருவார்கள். ஆனால், தற்போது பழங்களை வாங்குவதில் மக்கள் நாட்டம் காட்டவில்லை. மூன்று ஒரேஞ் பழங்கள் 100 ரூபாய்க்கு விற்பனையாகின. தற்போது 500 ரூபாய்கு விற்பனையாகிறது. இதனால், மக்களால் அவற்றை வாங்க முடியவில்லை.

விலை அதிகரித்துள்ளதாலேயே பொதுமக்கள் பழங்களை வாங்குவதில் நாட்டம் காட்டவில்லை. பழங்களை வாங்குவதற்காக கடைகளுக்கு வந்து பழங்களின் விலைளை விசாரித்துவிட்டு திரும்பி செல்கின்றார்கள்.

வாழைப்பழம், மாம்பழம் போன்ற பழங்களையே மக்கள் வாங்கக்கூடியதாக உள்ளது.

இந்த வெக்கை காலத்தில் பொதுமக்கள் பழங்களை வாங்குவதில் அதிக நாட்டம் காட்டவில்லை. இதனால் எமது வியாபாரம் சரிவடைந்துள்ளது.

## அசாதாரண நிலையை தோற்றுவித்துள்ளது



**க. மைக்கல்**
யாழ். நீரிழிவு கழக தலைவர்

தற்போதைய காலநிலையானது பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகக் காணப்படுகின்றது. அசாதாரணமான சூழ்நிலையில் ஓகஸ்ட் மாதத்தில் இவ்வாறான ஒரு நிலைமை என்றுமே ஏற்படுவதில்லை. காலநிலை மாற்றத்தின் காரணமாக வடபகுதி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். குடிதண்ணீர் அற்ற நிலையிலே பல கிராமங்கள் இருக்கின்றன.

பாடசாலை மாணவர்கள், வயல்களில் வேலை செய்பவர்கள், கட்டட நிர்மாண பணியில் ஈடுபடுபவர்கள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் தமது அன்றாட வேலைகளை செய்ய முடியாத நிலையில் உள்ளனர். இவர்கள் யாவரும் வழமையிலும் பார்க்க அதிகளவு நீரை அருந்த வேண்டும். நீர் ஆகாரம் உள்ள உணவுகளை உண்ண வேண்டும். இவ்வாறு நீராகாரம் உள்ள உணவுகளை உட்கொள்வதன் மூலம் வெப்ப அதிகரிப்பால் ஏற்படும் நோயில் இருந்து எங்களை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

வெப்ப காலத்தில் ஏற்படும் நோய்கள் மிகவும் பாதிப்பை ஏற்படுத்தும். அதாவது தொடர்ச்சியான காய்ச்சல் காணப்பட்டால் மருத்துவமனையை நாட வேண்டும். இந்த வெப்ப அதிகரிப்பால் நீரிழப்பு ஏற்படக்கூடிய சாத்திய கூறுகள் உள்ளன. அதாவது உடல் வெப்பநிலை அதிகரிப்பதன் மூலமும் வேறு பாதிப்புகள் ஏற்படும்.

## முன்பையும் விட வெக்கை அதிகம்!



**ஆ. சுரேஸ்,**
அவுஸ்திரேலிய பிரஜை

நான் அவுஸ்திரேலியா நாட்டிலிருந்து இங்கு வருகை தந்துள்ளேன். இந்த வெக்கை காலத்தில் மாம்பழம் சாப்பிட்டால் சுவையாகவும் உடம்புக்கு நல்லதாவும் இருக்கும் குறிப்பாக கறுத்த கொழும்பன் மாம்பழம் வாங்குவற்காக சந்தைக்கு வந்துள்ளேன்.

முன்னர் நான் குறைந்த விலையில் மாம்பழத்தை வாங்கினேன். நான் இந்த முறை வருகை தரும் போது சற்று விலை கூடவாகத்தான் உள்ளது.

நான் முன்னர் இலங்கைக்கு வரும்போது இவ்வாறு வெப்பநிலை இருந்ததில்லை தற்போது அதிக வெப்பம் வாட்டுகின்றது. வீதிகளில் வெக்கையால் மக்கள் கஷ்டப்படுவதை அவதானிக்க முடிகின்றது. வெக்கை காலத்தில் சுவையான பழங்களை வாங்கி சாப்பிடுவதன் மூலம் உடல் வெப்பநிலையை குறைக்க முடியும்.

## உற்சாகத்தை இழக்க வைக்கிறது



**ச. டிலக்சி**
தொலைக்காட்சி
நிகழ்ச்சி தொகுப்பாளர்!

தற்போது வெப்பம் அதிகரித்துள்ளது. வழமைக்கு மாறான ஒரு காலநிலை காணப்படுகின்றது. வழமையாக எட்டாம் மாதம் என்றால் குளுமையான காலமாகக் காணப்படும். ஆனால், தற்போது வழமைக்கு மாறாக வெக்கை (வெப்ப) காலமாக உள்ளது.

எந்நேரமும் தண்ணீர் அருந்த வேண்டும் போன்ற நிலை உள்ளது. இந்த வெப்பத்தை சமாளிக்கக்கூடிய வாறான ஆடைகளை அணிவது அவசியம். உணவு முறையிலும் மாற்றம் தேவை. நீர் பற்றுள்ள உணவுகளை நாம் உண்ண வேண்டும்.

நான் பேருந்திலேயே பணிக்கு வந்து செல்கிறேன். எப்போதும் உற்சாகமாகவே நான் காணப்படுவேன். ஆனால் பேருந்தில் நிலவும் வெக்கையால் நான் பாதிக்கப்படுகிறேன் - உற்சாகமிழக்கிறேன்.

## மக்களிடம் பணம் இல்லை வியாபாரமும் எமக்கு இல்லை

**ச. சர்வேஸ்,**
இளநீர் வியாபாரி,
யாழ்ப்பாணம் நகரம்.

கடந்த 18 வருடங்களாக நான் இளநீர் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றேன். முன்னைய காலத்தில் இளநீர் மலிவாக விற்றதால் வெக்கை காலத்தில் எமக்கு இளநீர் வியாபாரம் அமோகமாக நடந்தது.

தற்போது, இளநீரின் விலை சற்று அதிகரித்துள்ளதால் பொதுமக்கள் வெக்கை காலத்தில் கூட இளநீர் வாங்கி பருகுவதற்கு தயாராக இல்லை. அத்துடன், இளநீர் குடிப்பதன் மூலம் உடம்புக்கு நல்ல தெம்பு ஏற்படும். ஆனால், தற் போது பொதுமக்களிடம் பணம் இல்லாத காரணத்தால் விலை யேற்றத்தாலும் வெப்ப அதிகரிப்பின் போதும் பொதுமக்கள் இளநீர் வாங்கி குடிப்பதற்கு நாட்டம் காட்டவில்லை. ஏனென்றால் மக்களிடம் பணம் இல்லை என்பதே உண்மை.



# சென்ற வாரம் உலகை திரும்பிப் பார்க்க வைத்த மூன்று முக்கிய நிகழ்வுகள்








**குரு அரவிந்தன்**

சென்ற வாரம் பொது ஊடகங்களில் வெளிவந்த விளையாட்டுத்துறை சார்ந்த இரண்டு நிகழ்வுகளும், விண்வெளி சார்ந்ததொரு நிகழ்வும் பலரின் கவனத்தையும் பெற்றிருந்தது. ஒன்று இங்கிலாந்திற்கும் ஸ்பெயினுக்கும் நடந்த உலகக் கிண்ணத்திற்கான பெண்கள் உதைபந்தாட்ட இறுதிப் போட்டி, மற்றது பதினெட்டே வயதான பிரக்ஞானந்தாவின் உலகக் கிண்ணத்திற்கான சதுரங்க ஆட்டப் போட்டி, மூன்றாவது சந்திரனின் தென்துருவத்தில் தரையிறங்கும் போட்டி. இந்த மூன்று நிகழ்வுகளும் விளையாட்டுத்துறை மற்றும் விண்வெளித்துறையில் ஆர்வம் உள்ளவர்களை மட்டுமல்ல, ஏனைய பொதுமக்களின் கவனத்தையும் பெரிதாக ஈர்த்திருந்தன.

பெண்கள் உலகக் கிண்ணப் போட்டியில் ஸ்பெயின் அணியினர் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றாலும், அவர்களின் இந்த வெற்றிக்குப் பின்னால் ஒரு சோகக்கதை இருந்தது. சிட்னியில் நடந்த இறுதிப் போட்டியில் இங்கிலாந்தும் ஸ்பெயினும் மோதிக் கொண்டன. ஸ்பெயின் அணியின் தலைவியான 23 வயதான ஒல்கா காரமோனா ஒரு கோலைப் போட்டு ஸ்பெயினுக்கு வெற்றியைத் தேடித்தந்திருந்தார். ஸ்பெயின் வெற்றியைக் கொண்டாடிய போது, இந்த வெற்றிக்குக் காரணமாக யார் அந்தக் கோலை அடித்து வெற்றியை ஸ்பெயின் நாட்டுக்குப் பெற்றுக் கொடுத்தாரோ, அவரிடம் ஒரு சோகச் செய்தி பகிரப்பட்டது, அது என்னவென்றால் அவரது தந்தையார் திடீர் மரணத்தைத் தழுவிக் கொண்டார் என்பதேயாகும்.

போட்டி ஆரம்பிப்பதற்குச் சற்று நேரத்திற்கு முன்னதாகவே ஒல்காவின் தந்தை மரணமாகியிருந்தார். இந்தச் செய்தி ஒல்காவைப் பாதிக்கும் என்பதால், தந்தை மரணமடைந்த செய்தியை உடனடியாக அவருக்கு அறிவிக்கவில்லை. ஸ்பெயினின் அணித்தலைவி என்ற வகையில் வெற்றிக் கிண்ணத்தை அவர் பெற்ற பின்புதான் அந்தத் துயரசம்பவம் அவரிடம் தெரிவிக்கப்பட்டது. நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டிய ஒரு நிலைப்பாடு இருந்ததாலும், விளையாட்டு அணியினரின் நான்கு வருடக் கடின உழைப்பின் பிரதிபலனை எதிர்பார்த்து அவர்கள் இருந்ததாலும் இந்த விடயம் வேண்டுமென்றே தாமதித்துத் தெரிவிக்கப்பட்டது. துயரச் செய்தியை வேண்டுமென்றே தாமதித்ததால்தான் ஒரு நன்மை கிடைத்தது, அதாவது அதனால்தான் இன்று ஸ்பெயின் அந்த உதைபந்தாட்ட வெற்றிக் கிண்ணத்தை பெருமையுடன் ஏந்தி நிற்கிறது.

மற்ற விளையாட்டுத்துறைச் செய்தி சதுரங்கம் பற்றியது. இந்தியாவைச் சேர்ந்த 18 வயதான பிரக்ஞானந்தாவின் தனிப்பட்ட திறமை சார்ந்தது. அசர்பைஜானில் நடைபெற்ற உலகக் கிண்ணச் சதுரங்கப் போட்டியில் அரையிறுதிச் சுற்றுக்கான போட்டியில் அமெரிக்கரான பாபியானோ கருணாவை எதிர் கொண்ட போது, இருவரும் சமநிலையில் இருந்தனர். அதனால் சமநிலை தவிர்ப்புக்கான போட்டி இருவருக்குமிடையே நடைபெற்றது. இதில் பிரக்ஞானந்தா வெற்றி பெற்று இறுதிச் சுற்றுக்குத் தெரிவானார். வயதில் குறைந்த ஒருவர் சதுரங்க இறுதிச் சுற்றுக்குத் தெரிவானது இதுவே முதற்தடவையாகும்.

இறுதிச் சுற்றில் நோர்வே நாட்டைச் சேர்ந்த மேக்னஸ் காரல்சென் என்பவருடன் போட்டியிட்டார். மேக்னஸ் காரல்சென் ஐந்து முறை உலக சாம்பியனாக வந்தவர். முதலாவது ஆட்டம் வெற்றி தோல்வி இன்றிச் சமநிலையில் முடிவுற்றது. இரண்டாவது ஆட்டமும் வெற்றி தோல்வியின்றி சமநிலையில் முடிவுற்றதால், வெற்றி தோல்வியைக் கணிப்பதற்காக நேரக்கட்டுப்பாட்டோடு அதிரடியாகச் சமநிலை தவிர்ப்பு விளையாட்டாக மாற்றப்பட்டது. இதில் அனுபவம் மிக்க மேக்னஸ் காரல்சென் இறுதியாட்டத்தில் வெற்றி பெற்றார். 18 வயதான பிரக்ஞானந்தாவின் வெற்றிக்கு எதிர்காலம் நிச்சயம் காத்திருக்கும்.

இந்த இரண்டு நிகழ்வுகளும் விளையாட்டுத் துறை சார்ந்ததாக இருக்க மூன்றாவது போட்டி விண்வெளித் துறை சார்ந்ததாக இருந்தது. நிலவின் தென்துருவத்தில் முதலில் யார் பாதுகாப்பாகத் தமது தரையிறங்கியை இறக்குவது என்ற போட்டி ரஸ்யாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே நடந்தது. இந்தியாவுக்கு முன்பாகத் தான் தென்துருவத்தில் இறங்க வேண்டும் என்ற போட்டி மனப்பான்மையோடு அவசரமாக ரஷ்யா அனுப்பிய லூனா - 25 சந்திரனின் தென்துருவத்தில் இறங்கும்போது, தரையில் மோதி உடைந்து விட்டது. ஆனால் இந்தியா திட்டமிட்டபடி நிதானமாக தனது சந்திராயன்- 3 தரையிறங்கியான விக்ரத்தை 23-8-2023 அன்று வெற்றிகரமாகத் தரையிறக்கி இருந்தது. இது இந்தியாவின் மிகப்பெரியதொரு சாதனையாகும். சந்திரனின் தொன்துருவத்தில் தரையிறக்கும் போட்டி யில் இஸ்ரேல், யப்பான், இந்தியாவின் சந்திராயன்-2, ரஸ்யாவின் லூனா-25 ஆகியன சமீப காலங்களில் முயற்சி செய்தாலும் பலன் கிடைக்காமல் தோல்வியில் முடிந்தன. தோல்விகள்தான் வெற்றியின் ஏணிப்படிகள் என்பதால், அந்த அனுபவத்தால், முதன்முதலாக இந்தியாவின் சந்திராயன் - 3 சந்திரனின் தென்துருவத் தில் வெற்றிகரமாகத் தரையிறங்கிச் சாதனை படைத்திருக்கின்றது.

---



**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

# வியுக்தியார் பதில்கள்

**ஆர். புஸ்பகாந்த், 2ஆவது ஒழுங்கை,**
**தெகிவளை.**

**கேள்வி:** குருந்தூர் மலை விவகாரம், மட்டக்களப்பு காணி பிரச்னைகளை அடிப்படையாகக்கொண்டு இனங்களிடையே மோதல் தூண்டப்படுகின்றது. இது, தற்போதுள்ள அரசாங்கத்தைத் தொடர்ந்தும் ஆட்சியில் தக்க வைத்திருக்க மேற்கொள்ளப்படும் சதித்திட்டமா என்று சந்தேகம் எழுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்திருக்கிறாரே?.

**வியுக்தியார்:** அவருக்கு வந்திருக்கும் இந்தச் சந்தேகம் வியுக்தியாருக்கும் ஏற்கனவே வந்ததுதான். ஆனால் அந்தச் சந்தேகம் இப்போது அதிகரித்திருக்கின்றது. காரணம் அவரைப்போன்ற அனுபவசாலிகள் சொல்கின்றபோது நம்பத்தானே வேண்டியிருக்கின்றது. அதிகாரத்திற்கு வருவதற்காக இனங்களுக்கிடையே மோதல்களை ஏற்படுத்துகின்ற அந்த தந்திரத்தை தொடக்கி வைத்தவர்களே, அவரது கட்சியான ஐக்கிய தேசியக்கட்சிதானே. அவர் இப்போது ஐதேகவில் இல்லையென்றாலும் அதுதானே அவர்களின் தாய்க்கட்சி.

---

**கே. ராம்குமார், பிள்ளையார் கோவிலடி,**
**தெல்லிப்பழை.**

**கேள்வி:** சீனப் பிரஜைகள் இலங்கைக்கு வரும்போது அவர்களுக்கு வருகை தரும் வீசா வசதியை (onarrival visa facility) வழங்குவதற்கான சாத்தியக் கூறுகள் மற்றும் மண்டரின் மொழியில் ஒன்லைன் மூலம் வீசா விண்ணப்பங்களை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் கலந்துரையாடப்பட்டுள்ளதாமே? நாட்டின் உத்தியோகபூர்வ மொழிகளில் கூட அந்த வசதி இல்லாதபோது, சீனர்களுக்கு மாத்திரம் ஏன் இந்த வசதி?

**வியுக்தியார்:** வெளிநாட்டு அமைச்சின் துறைசார் மேற்பார்வைக்குழுவின் தலைவராக இருப்பவர் நாமல் ராஜபக்ச அவர்கள்தான். அவருக்குத்தான் சீனர்களுக்கு ஆங்கிலம் தெரியாது என்ற விசயம் தெரிந்திருக்கின்றது போலும். மண்டரின் மொழியிலேயே விண்ணப்பங்களை நிரப்ப ஏற்பாடு செய்தால் அதிகம்பேர் சுற்றுலா வருவார்கள் என்று எதிர்பார்க்கிறாரா அல்லது, அவர்களுக்கு ஆங்கில அறிவு குறைவு என்று கிண்டல் செய்கிறாரா என்பதுதான் புரியவில்லை.

---

**சிவபாலன் செந்துஜன், கதிரேசு வீதி,**
**வவுனியா.**

**கேள்வி:** நாட்டில் தீவிரவாத தாக்குதல் இடம்பெற வாய்ப்புள்ளதாக உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களில் வெளியாகும் செய்திகளின் உண்மைத்தன் மையை அரசாங்கம் வெளியிட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கிறாரே. முன்னரும் ஒருதடவை இப்படி செய்திகள் வெளிவந்தபோது நமது அரசாங்கம் கவனயீனமாக இருந்ததால் பல உயிர்களை இழக்கவேண்டிவந்தது. அதற்குப்பின்னரும் இதுபோன்ற செய்திகள் குறித்து கவனயீனமாக இருப்பது தவறானதுதானே?

**வியுக்தியார்:** உண்மைதான். அப்படி கவனயீனமாக இருந்த அரசாங்கத்தில் அவரும் முக்கிய பங்குவகித் தவர் அல்லவா. இப்போதாவது அதுகுறித்து விழிப்பாக இருப்பது நல்லதுதான். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடந்தபோது இந்தியாவிலும் தேர்தல் நடந்தது. இலங்கையிலும் தேர்தல் நடக்கவிருந்தது. இந்த நிலைமையில் அடுத்த ஆண்டு இந்தியாவிலும் தேர்தல் நடக்கவிருக்கின்றது. நமது நாட்டிலும் நடக்கவிருக் கின்றது. இதனால் இரண்டுக்கும் உள்ள ஒற்றுமையை வைத்துக்கொண்டு பல்வேறு தரப்பினரும் தத்தமது ஊகங்களில் செய்திகளை வெளியிட்டு வருகின்றனர். அதற்காக அவற்றை பொருட்படுத்தாமல் இருப்பதும் நல்லதல்லத்தான்.

---

**ப. அபிஷேக்குமார், எல்லை வீதி,**
**மட்டக்களப்பு.**

**கேள்வி:** சந்திரனை ஆய்வுசெய்ய இந்தியா அனுப்பிய சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் தரையூர்தி வெற்றிகரமாக சந்திர தரையில் தரையிறங்கியுள்ளது. இதுவரை அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் மட்டுமே சந்திரனில் விண்கலத்தை தரையிறக்கிய நாடுகள். இந்த வரிசையில் இந்தியாவும் இணைந்துள்ளது.

அத்துடன், சந்திரனின் தென் துருவத்தில் விண்கலத்தை தரையிறக்கிய முதல் நாடு என்ற சாதனையையும் அது படைத்துள்ளது. நமது அயல்நாடான இந்தியா இந்தச் சாதனையை படைத்திருப்பது நமக்கும் பெருமையானதுதானே.

**வியுக்தியார்:** என்ன இப்படி சாதாரணமாக சொல்லிவிட்டீர்கள். இலங்கை அணியும் இந்திய அணியும் கிரிக்கட் விளையாடினால் கூட இந்திய அணி வெல்ல வேண்டும் என்று நினைக்கின்ற அளவிற்கு இந்தியா மீது நமக்கு 'பிடிப்பு" இருக்கும்போது இந்தியாவின் அந்த சாதனையை சாதாரணமாக நாம் கடந்து செல்லமுடியுமா? அதுகும் இந்தச் சாதனையில் இந்தியாவின் இஸ்ரோ நிறுவனத்தில் பணியாற்றும் தமிழ் விஞ்ஞானிகள்தான் சாதித்திருக்கிறார்கள் என்பது நமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி தரக்கூடியதுதான்.

# அஜர்பைஜான் - ஆர்மேனியா எல்லைச் சண்டை: மத்திய ஆசியாவில் நீண்ட வரலாற்றுப் பகை !

ஐங்கரன் விக்கினேஸ்வரா

ஆர்மேனியா - அஜர்பைஜான் எல்லையில் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த இரு நாட்டு வீரர்களிடையே கடந்த வாரம் மோதல் ஏற்பட்டதாகத் தெரிகிறது. பாரிய மோதலுக்கு மத்திய ஆசியாவில் அஜர்பைஜான் - ஆர்மேனியா தயாராகி வருகின்றன எனும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

மத்திய ஆசிய காவ்கஸ் மலைப்பகுதியில் ஆர்மேனியாவிற்கும் அஜர்பைஜானுக்கும் இடையில் சர்ச்சைக்குரிய நாகோர்னோ - கராபாக்கில் பெரிய அளவிலான இராணுவ மோதல்கள் வெடிப்பதற்கான சாத்தியக் கூறுகள் தற்போது தென்படுகின்றன.



ஆர்மேனிய தலைநகர் யெரெவனும், அஜர்பைஜான் தலைநகர் பாக்குவும் ஒன்றுக்கொன்று படைகளுக்கு எதிரான தாக்குதல்களின் வீடியோக்களையும் நாகோர்னோ - கராபாக்கில் (Nagorno-Karabakh) வீடியோக்களையும், படங்களையும் வெளியிட்டுள்ளன.

### சர்ச்சைக்குரிய பிராந்தியம்

ஆர்மேனியா, அஜர்பைஜான் நாடுகள் இடையே 30 ஆண்டுகளுக்கு மேலாகச் சர்ச்சை மிகுந்த “நாகோர்னா -காராபாக்” பிராந்தியத்தில் மீள போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

1991 இல் சோவியத் யூனியன் உடைந்தபோது தனிக் குடியரசு நாடுகளான ஆர்மேனியாவும், அஜர்பைஜானும் தற்போது தீவிரமாக மோதிக்கொண்டிருக்கின்றன.

ஆர்மேனியா-அஜர்பைஜான் எல்லையில் 4400 சதுர கிமீ பரப்பளவு கொண்ட நார்கோனா காராபாக் மலை பகுதி தான் இரு நாடுகளுக்குமான எல்லையாக உள்ளது. இந்த பகுதி யாருக்கு சொந்தம் என மோதல் நிலவுகிறது. 1988ம் ஆண்டு முதல் நடந்த எல்லை போரில் 30 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். 1994ம் ஆண்டு போர் முடிவுக்கு வந்தபோது, நார்கோனா காராபாக் மலை பகுதி அஜர்பைஜான் நாட்டின் பகுதியாக



அங்கீகரிக்கப்பட்டது.

### நாகோர்னோ - கராபாக் சாலை துண்டிப்பு:

சர்ச்சைக்குரிய நாகோர்னோ-கராபாக் பகுதியுடனான சாலைப் போக்குவரத்தை அஜர்பைஜான் துருப்புக்கள் துண்டித்ததை அடுத்து, அண்டை நாடான ஆர்மேனியாவிற்கும் இடையிலான பதட்டத்தைத் தணிப்பது குறித்து ஐ.நா விவாதித்து வருகிறது. பாதுகாப்பு கவுன்சிலின் அவசர கூட்டமும் நடந்தது.

நாகோர்னோ - கராபாக் பகுதி, ஆர்மேனிய பெரும்பான்மை இனத்தவர், அஜர்பைஜானின் ஒரு பகுதியாக சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டது. எவ்வாறாயினும், 1994 போருக்குப் பின்னர் ஆர்மேனியா ஆதரவு பிரிவினைவாதிகளின் கட்டுப்பாட்டில் இப்பகுதி உள்ளது.

ஆர்மேனியாவும் அஜர்பைஜானும் சர்ச்சைக்குரிய பகுதியில் தங்கள் படைகளை குவித்துள்ளன. இதனால் இரு தரப்பினரும் அவ்வப்போது மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். 2020ஆம் ஆண்டு நாகோர்னோ - கரபாக் பகுதியில் இரு நாடுகளுக்கும் இடையே 6 வாரங்களாக நடைபெற்ற போரில் 6,600 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.




### நீண்ட வரலாற்றுப் பகை

நாகோர்னோ-கராபக் பெரும்பாலும் மலை மற்றும் காடுகள் நிறைந்ததாகும். ஆனால் அப்பகுதியில் ஆர்மேனியா நாட்டு மக்களே அதிகம் உள்ளனர். தற்போது அவர்கள் கட்டுப்பாட்டில் தான் இப்பகுதி மாறி உள்ளது.

2016ம் ஆண்டு முதல் மீண்டும் இரு நாடுகளுக்கும் இடையே எல்லை விவகாரம் தொடர்பாக சண்டை மூண்டது. 2020ம் ஆண்டு அது பெரும் போராக மாறியது. அப்போது ரஷ்யா தலையிட்டு அமைதிக்கு வழிவகுத்தது. அந்த போரில் 6600 பேர் வரை பலியாகினர்.



### சோவியத் கால முரண்பாடு

சோவியத் யூனியன் நாடுகளாக இருந்தபோதே அஜர்பைஜானும், ஆர்மேனியாவும் மோதிக்கொண்டு தான் இருந்தன. நார்கோனா - காராபாக்மலைப் பகுதி யாருக்குச் சொந்தம் என்பதுதான் மோதலுக்கு முக்கிய காரணம். இஸ்லாமியர்கள் அதிகம் வாழும் அஜர்பைஜானும், கிறிஸ்தவர்கள் அதிகம் வாழும் ஆர்மேனியாவும் மதத்தை வைத்துக்கூடச் சிறு சிறு சண்டைகள் போட்டிருக்கின்றன. ஆனால், எல்லைப் பிரச்னை தான் இரு நாடுகளுக்குமிடையேயான பிரதான பிரச்னை.

வரலாற்று ரீதியாக நாகோர்னோ - கராபக் நவீன தொல்பொருள் ஆய்வாளர்களால் “குரா-அராக்ஸ் கலாசாரம்” என்று அழைக்கப்படுகிறது. அங்கே மக்கள் குரா மற்றும் அராக்ஸ் ஆகிய இரு நதிகளுக்கு இடையில் வாழ்ந்தனர். இப்பகுதியின் பண்டைய மக்கள்தொகை பல்வேறு தன்னியக்க உள்ளூர் மற்றும் புலம்பெயர்ந்த பழங்குடியினரைக் கொண்டிருந்தது, அவர்கள் பெரும்பாலும் இந்தோ-ஐரோப்பியர்கள் அல்லாத இனமாவர்.

### ஜோசப் ஸ்டாலின் கால மோதல்

நாகோர்னோ - கராபாக் மீதான தொடரும் மோதல் ஜோசப் ஸ்டாலின் காலத்திலேயே எழுந்தது. 1917 ஆம் ஆண்டு ரஷ்யப் புரட்சிக்குப் பின்னர், கராபாக் டிரான்ஸ்காகேசிய ஜனநாயக குடியரசாக மாறியது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் (1918-1920), கராபாக் உட்பட பல பிராந்தியங்களில் ஆர்மேனி யாவிற்கும் அஜர்பைஜானுக்கும் இடையே தொடர்ச்சியான குறுகிய போர்கள் நடந்தன.

இதன் பின் ஜூலை 1918 இல், நாகோர்னோ - கரா பக்கின் முதல் ஆர்மேனிய சட்டமன்றம் இப்பகுதியை சுயராஜ்யமாக அறிவித்து ஒரு தேசிய கவுன்சிலையும் அரசாங்கத்தையும் உருவாக்கியது. பின்னர் ஒட்டோமான் துருப்புக்கள் ஆதரவுடன் அசர்பைஜான் படைகள் கராபக்கிற்குள் நுழைந்தன. ஆர்மேனியர்களின் ஆயுத எதிர்ப்பை நீண்ட காலம் சந்தித்தன.

### போர் பரவும் அச்சம்

இரு நாடுகளுக்கு இடையேயான போர் பல நாடுகளுக்கும் பரவும் என அச்சமும் கவலையும் நிலவுகிறது. குறிப்பாக அண்டை நாடுகளான துருக்கி, ரஷ்யா மற்றும் ஈரான் ஆகிய நாடுகள் இந்த சிக்கலில் தலையிடலாம் என்ற கவலை நிலவுகிறது. குறிப்பாக எண்ணெய் குழாய்கள் இந்த பகுதியின் வழியே செல்கின்றன. பல நாடுகள் தலையிட்டதால் 1994ஆம் ஆண்டு இரு நாடுகளுக்கு இடையேயான சண்டை முடிவுக்கு வந்திருந்தாலும், 2016ஆம் ஆண்டு முதல் இருநாடுகளுக்கு இடையே மீண்டும் போர் எழுந்தது.

அஜர்பைஜானுடன் துருக்கி நெருக்கமான உறவைப் பேணி வருகிறது. அதே போல் அர்மீனியாவுடன் ரஷ்யா நெருக்கமாக இருந்தாலும் அஜர்பைஜானுடனும் நல்லுறவை பேணி வருகிறது. ரஷ்யா இருநாடுகள் இடையே போர் நிரந்தர நிறுத்தத்தைக் கோரி வருகிறது.

துருக்கி அதிபர் எர்துவான் அர்மீனியா தனது ஆக்கிரமிப்பை உடனடியாக நிறுத்த வேண்டும் எனக் கோரி உள்ளார். இதன் மூலமாக மட்டுமே நீண்டகால போர் நிறுத்தத்தைக் கொண்டு வர முடியும் என அவர் கூறி உள்ளார்.

### ரஷ்யா கூட்டு பாதுகாப்பு

ரஷ்யா தலைமையிலான கூட்டு பாதுகாப்பு ஒப்பந்த அமைப்பை இந்த விவகாரத்தில் தலையிடுமாறு ஆர்மேனியா கேட்டுக் கொண்டுள்ளது.

ரஷ்யா ஆர்மேனியாவின் ராணுவ கூட்டாளி ஆகும். ஆயினும் ரஷ்யா அஜர்பைஜானுடன் நட்புறவாக செயல்பட்டு கொண்டிருக்கிறது. உக்ரைன் போருக்கு மத்தியில் ரஷ்ய அதிபர் புட்டினுக்கு இன்னோர் தலையிடியாக ஆர்மேனியா - அஜர்பைஜானில் அமைதி



முயற்சியை மேற்கொண்டு வருகின்றார்.

ஆர்மேனியாவிற்கும் அஜர்பைஜானுக்கும் இடையேயான முதலில் சமாதானம் ஏற்படுத்த ரஷ்யா போதுமான அழுத்தங்களை கொண்டிருப்பதாக அவர் கூறியுள்ளார். எண்ணெய் வளம்மிக்க அஜர்பைஜானுடன் துருக்கி நீண்டகால நெருக்கமான உறவை கொண்டிருக்கிறது. ஆனால் ஆர்மேனியாவில் ரஷ்யாவின் ராணுவம் தளம் ஒன்று இருக்கிறது. அதனால், அந்த நாட்டுடன் ரஷ்யா நல்லுறவைப் பேணிவருகிறது. ஒவ்வொரு முறையும் ரஷ்யா தலையிட்டுத்தான் இரு நாடுகளுக்கிடையேயான மோதலையும் நிறுத்திவைக்கும் நிலை ஏற்படுகிறது.

இந்த நிலையில், அஜர்பைஜான் - ஆர்மேனியா நாடுகளிடையே போர் மூண்டால், அது மேலும் பல சிக்கல்களை உண்டாக்கும். எனவே, ஐ.நா-வும், உலக நாடுகளும் தலையிட்டு இந்த மோதலை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பதே சர்வதேச அரசியல் ஆய்வாளர்களின் பார்வையாக இருக்கிறது.

# சிறுவர் உரிமைகளை காக்குமாறு முள்ளியவளையில் நடைபவனி

முல்லைத்தீவு, ஓக. 27

**சிறுவர் உரிமைகளை பாதுகாக்க வலியுறுத்தும் விழிப்புணர்வு நடைபவனி முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி முன்பாக நேற்று நடைபெற்றது.**




சிறுவர் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு ஆரம்பமான இந்த நடைபவனியாக வித்தியானந்த கல்லூரி முன்பாக ஆரம்பமான இந்த நடைவனி தண்ணிரூற்று பொதுச்சந்தைக்கு முன்பாக நிறைவடைந்தது.

"சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்யாதீர்", "சிறுவர் துஷ்பிரயோகத்தை கண்டால் 1929 க்கு அழைப்போம்", "மேதையை அழிக்கும் போதை", "சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு மரண தண்டனை கொடு", "சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதை நிறுத்துவோம்", "வளமான எதிர்காலத்தை உருவாக்குவோம்", "சிறுவர்களுக்கான சிறுவர் நேயமுள்ள பாதுகாப்பு மிக்க சூழல் ஒன்றை உருவாக்குவோம்" வாசகங்கள் தாங்கிய பதாதைகளை நடைபவனி வந்தவர்கள் ஏந்தி வந்தனர். (ஐ)

# டெங்கு நோயாளர் 61 ஆயிரம் கடந்தது

கொழும்பு, ஓக. 27



இலங்கையில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 61 ஆயிரத்தைத் தாண்டியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி, இலங்கையில் நேற்று காலை வரை பதிவான மொத்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 61 ஆயிரத்து 225 என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள அதிக ஆபத்துள்ள பிரதேசங்களின் எண்ணிக்கை 34 ஆகக் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜனவரி முதல் ஜூலை வரையிலான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், ஆகஸ்ட் மாதத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக பதிவாகியுள்ளது.

ஜூலை மாதத்தில் 7,369 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ள நிலையில், ஓகஸ்ட் மாதத்தில் 4,536 டெங்கு நோயாளர்கள் மட்டுமே பதிவாகியுள்ளனர்.

இதேநேரம், இந்த வருடத்தில் இதுவரை 38 டெங்கு மரணங்கள் பதிவாகின என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பிரேத அறையில் பணியாற்றியவர் கிருமித் தொற்றால் உயிரிழந்தார்!

கொழும்பு, ஓக. 27

கொழும்பு - ஹோமகம ஆதார மருத்துவமனையின் பிரேத அறையில் பணியாற்றிய ஊழியர் ஒருவர் கிருமித்தொற்றால் உயிரிழந்தார்.

சுமார் 26 வருடங்கள் தொழில் நுட்ப உதவியாளராக பிரேத அறையில் கடமையாற்றி வந்த நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

சடலங்களில் இருந்து வெளியேறும் கிருமித் தொற்றால் பாதிக்கப்பட்ட நிலையிலேயே குறித்த ஊழியர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

மீகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதான ஜயலால் லியனாராச்சி என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். (ஐ)

# பொலிஸ் உத்தியோகத்தர் கிளிநொச்சி விபத்தில் காயம்!

கிளிநொச்சி, ஓக. 27

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

முறிகண்டி - இரணைமடு சந்திக்கு இடையில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வீதியை கடந்து கொண்டிருந்த மாட்டுக்கு இடம்விட்டு மோட்டார் சைக்கிளில் விலகிச் செல்ல முயன்ற மோட்டார் சைக்கிளை எதிர்த் திசையில் வந்த லொறி மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள். (ஐ)

# தொடங்கொடை படுகொலை; சந்தேகநபர்கள் இருவர் கைது!

கொழும்பு, ஓக. 27

தொடங்கொடையில் ஒருவரை படுகொலை செய்த சம்பவத்தோடு தொடர்புடைய பிரதான சந்தேக நபர்களை இருவரை களுத்துறை குற்றத்தடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

களுத்துறை, தொடங்கொடை டொலேலந்த பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து 37 வயதான திமுத் சாமிக என்பவர் கடந்த 14ஆம் திகதி வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்டார்.

படுகாயங்களுடன் சேர்க்கப்பட்ட இவர் நாகொடை போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

மத்துகமவில் உள்ள பிரபல போதைப்பொருள் வியாபாரி ஒருவருடனான முரண்பாடே கொலைக்கான காரணம் என பின்னர் கண்டறியப்பட்டது.

இதையடுத்து, களுத்துறை குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரிக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்து இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் தொடங்கொடை பிரதேசத்தை சேர்ந்த 38 வயதான புத்திக விஜயசிறி என்றழைக்கப்படும் "மால்திய" மற்றும் 29 வயதுடைய விமுக்தி மதுசங்க எனும் "களுகயான்" என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கைதான இருவர் மீது இதற்கு முன்னர் கொலை, கொள்ளை, போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் சட்டவிரோத ஆயுதங்களை வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுகள் உள்ளன என்றும் தெரிய வருகின்றது.

பொலிஸார் மேலதிக விசாரணைகளை தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# அதிகரிக்கும் வறட்சியால் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம்!

## சுகாதார பரிசோதகர் சங்கம்

கொழும்பு, ஓக. 27

எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வறட்சியான காலநிலை மற்றும் தண்ணீர் பற்றாக்குறையே இதற்கு முக்கிய காரணம் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

மிகக் குறைந்த நீர் உள்ள இடங்களில் குளித்தல், மீன் பிடித்தல் போன்ற செயற்பாடுகள் எலிக்காய்ச்சல் பரவுவதை அதிகரிக்க செய்யும் எனவும் குறைந்தளவு நீர்மட்டம் உள்ள இடங்களில் குளிப்பதால் தோல் நோய்கள் மற்றும் வயிற்றுப்போக்கு ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ளார். (ஐ)

# ராஜபக்ஷக்களின்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பௌத்த விகாரைகளை நிறுவும் முயற்சிகளின் விளைவான தகராறையும் ராஜபக்ஷக்கள் தங்களுக்கு அனுகூல மான முறையில் முழுவீச்சில் பயன்படுத்துவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

தவறான ஆட்சிமுறையையும் ஊழலையும் மூடிமறைக்க இனிமேலும் பேரினவாத அணி திரட்டலுக்கு அனுமதிக்கக்கூடாது என்பது ராஜபக்ஷக்களின் அரசியல் காரணமாக நாடும் மக்களும் அனுபவிக்க வேண்டிவந்த துன்பங்கள் கற்றுத்தந்த முக்கியமான படிப்பினையாகும்.

இந்த படிப்பினை எந்தளவுக்கு சிங்கள மக்களின் அரசியல் சிந்தனைகளில் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை ஒரு தேர்தலின் மூலமாக மாத்திரமே அறிந்து கொள்ளமுடியும்.

13 வது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவதற்கான முயற்சிகள் தொடர்பில் சிங்கள மக்கள் மத்தியில் பீதியைக் கிளப்பி முன்னெடுக்கப்படுகின்ற இன வாதப் பிரசாரங்கள் ராஜபக்ஷக்கள் தங்களது செல் வாக்கை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு வாய்ப்பான சூழ் நிலையை உருவாக்குமா என்று முக்கியமான சிவில் சமூக நிறுவன மொன்றின் தலைவரும் அரசியல் ஆய்வாளருமான பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த நண்பரிடம் கேட்ட போது அவர் "அந்த பீதி கிளப்பும் பிரசாரங்களின் பயன்கள் ராஜபக்ஷக்களை விடவும் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.)வை சென்றடையக்கூடிய வாய்ப்பே இருக்கிறது. ராஜபக்ஷக்கள் ஊழல்காரர்கள் என்ற அபகீர்த்தியில் இருந்து இப்போதைக்கு மீளமுடியாது " என்று பதிலளித்தார்.

அந்த பதிலும் கூட பல கேள்வி களையே எழுப்புகிறது.

# வானமும் எல்லை இல்லை....

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

விண்வெளித் திட்டங்களுக்கு அதிக அளவு நிதியை இந்தியா செலவு செய்து வருவதால், அந் நாட்டிற்கான அனைத்து உதவிகளையும் இங்கிலாந்து அரசு நிறுத்த வேண்டும் என்பதே அந்தக் கோரிக்கை. "நிலவின் இருண்ட பகுதியில் ஆய்வு மேற்கொள்ளும் திட்ட வெற்றிக்காக நான் இந்தியாவைப் பாராட்டுகிறேன். 2016 முதல் 2021வரை தான் பெற்ற 2.3 பில்லியன் பவுண்கள் வெளிநாட்டு நிதியுதவியைத் திருப்பித் தருமாறு அந்நாட்டைக் கோருகிறேன். அடுத்த ஆண்டும் நாம் 57 மில்லியன் பவுண்கள் உதவியளிக்கத் திட்டமிட் டுள்ள நிலையில், இங்கிலாந்தில் வரி செலுத்துவோர் அதை நிறுத்தி வைக்கவேண்டுமென்று நான் கருதுகிறேன், சரிதானே? விண்வெளித் திட்டங்கள் நிறைவேற்றும் ஒரு நாட்டுக்கு நாம் உதவத் தேவையில்லை. நிலவின் இருண்ட பகுதிக்கு ரொக்கெட் விடும் அளவுக்கு உங்களிடம் நிதி இருந்தால், எங்களிடம் கை நீட்டி நிற்கக் கூடாது", என்றார் அவர்.

மேலும் கிறிஸ்டிஸ், உலகிலேயே அதிக அளவிலான ஏழை மக்களைக் கொண்ட இந்தியா, 3.75 ட்ரில்லியன் டொலர் மொத்த உள்நாட்டு உற்பத்தி பெற்று, 5ஆவது பெரிய பொருளாதார நாடாக இருப்பதாகக் கூறும் ஐ. நா. வின் அறிக்கையை மேற்கோள் காட்டி, "வறுமையில் வாடும் இந்தியர்கள் பற்றிய அக்கறை அந்த அரசுக்கே இல்லாதபோது, நாம் ஏன் அவர்களுக்கு உதவ வேண்டும்?" என்ற கேள்வியை எழுப்பியிருந்தார். எரிச்சலடைந்த X (முன்னதாக ட்விட்டர்) பயனர்கள், தனது அரச மகுடத்தில் பதிக்க, இந்தியாவிலிருந்து இங்கி லாந்து எடுத்துச் சென்ற விலை மதிப்பில்லாத கோஹினூர் வைரத்தைத் திருப்பித் தருமாறு கோரிக் காட்டமாக எதிர்வினையாற்றியிருந்தார்கள். மேலும் சிலர், இங்கிலாந்து தனது ஆட்சியின்போது இந்தியாவிலிருந்து கொள்ளையடித்துச் சென்றது 45 ட்ரில்லியன் டொலர் அளவு மதிப்பிலானது என்று கொலம்பியா யூனிவர்சிட்டி பதிப்பகம் வெளியிட்டிருந்த புள்ளி விவரத்தையும் மேற்கோள் காட்டியிருந்தனர். பொருளாதார நிபுணரான உத்சா பட்நாயக்கின் அந்தக் கட்டுரைத் தொகுப்பில், கிழக்கிந்திய கம்பெனியும், இங்கிலாந்து அரசும் 1765 முதல் 1938 வரை இந்தியாவில் அடித்த கொள்ளை 9.2 ட்ரில்லியன் பவுண்கள் (44.6 ட்ரில்லியன் டொலர்) என்றும் குறிப்பிட்டிருந்தார். இதெல்லாம் உங்களுக்கும் பொருந்தும் காரணம், நாம் அனைவரும் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சிக்கு உட்பட்டுத்தானே இருந்தோம். அந்த அடிமை மனப்பான்மையிலிருந்து வெளியேறி, வெள்ளைக்கார மேற்குலகை நேருக்கு நேர் எதிர்கொள்ளும் துணிவு இந்தியாவுக்கு இருக்கிறது என்றால் அதற்குக் காரணம், தனது சுயத்தில் பெருமை மற்றும் தன்னம்பிக்கையை வளர்த்துக்கொண்டதுடன், புதிய உச்சத்தைத் தொடவேண்டும் என்ற உயர் நோக்கமும் அதற்கான கடின உழைப்பும்தான். உங்களாலும் இயலும். அதற்கு நீங்கள் சுயநல அரசியல்வாதிகளைச் சார்ந்திருக்காமல், வலுவான தொரு மக்கள் இயக்கத்தைக் கட்டமைத்து, நமது முக்கியமான பிரச்னைகளைக் கையிலெடுத்து, அவற்றுக்கான விரைவான- நிரந்தர தீர்வுகளை ஆராயவேண்டும். தயவு செய்து, அதைச் செய்வோம்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

## அயலவரின்...

அந்தப் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் ஓட்டைப் பிரித்து முகமூடி அணிந்த மூவர் கொண்ட கொள்ளையர் குழு இறங்கியது. உறக்கத்தில் இருந்தவர் தட்டி எழுப்பியவர்கள் அவரை கயிற் றால் கட்டிவிட்டு கழுத்தில் கத்தியை விட்டு நகைகளை கேட்டு மிரட்டியுள்ளனர்.

எனினும், வீட்டின் உரிமையாளர் அபயக் குரல் எழுப்பிய நிலையில் அயலவர்கள் எழுந்துள்ளனர். வீடுகளில் இருந்து வந்த வெளிச்சத்தை அவதானித்த கொள்ளையர்கள் கொள்ளை முயற்சியை கைவிட்டு தாங்கள் கொண்டுவந்த கத்தியையும் கைவிட்டு அங்கிருந்து தப்பியோடினர்.

இந்த சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது. அத்துடன், கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குற்றத்தடுப்பு பொலிஸ் அதிகாரி விசாரணைகளை நடத்தினார்.

இதேசமயம், நேற்று முன்தினம் கல்வியங்காட்டில் கிறிஸ்தவ மதகுரு ஒருவரின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி பணம் பறிக்கப்பட்ட சம்பவமும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## 10 பௌத்தர்...

அமைக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று, திரியாய் கிராம அலுவலர் பிரிவில் 29 பௌத்தர்கள் வசிக்கின்றனர். இங்கு, சப்தமகா பபதா வன சேனசுந்த விகாரை, பத்ம ரஜ பப்பத புராண ரஜமகா விகாரை, தபசு கல்லுகு பன்சல என மூன்று பௌத்த வணக்க ஸ்தலங்கள் நிறுவப்பட்டுள்ளன.

குச்சவெளி கிராம அலுவர் பிரிவில் பிச்சாமல் புராண ரஜமகா விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு பௌத்தர்கள் இருவரே வசிக்கின்றனர். ஜெய நகரில் 42 பௌத்தர்கள் வசிக்கின்றனர். இங்கு சமுத்திர கிரி புராண ரஜமகா விகாரை அமைக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் 55 பௌத்தர்கள் வாழும் கும்புறுப்பிட்டி கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் பம்பரகலை புராண ரஜமகா விகாரை, தெபரகலை புராண ரஜமகா விகாரை, பாஹிய பவ்வத வனசேனசுந்திர பன்சல, வித்தியலோகா ரஜமகா விகாரை, மகாபோதி விகாரை மற்றும் பௌத்த தியான மண்டபம் என 6 பௌத்த வணக்க ஸ்தலங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இதேபோன்று, கும்புறுப்பிட்டி வடக்கில் கொக்கரடி மலை புத்தரய வன சேனசுன பன்சல, கொட்டிகுளம் சங்கரய வன சேனசுன பன்சல, மடுக்குளம் தர்மய வன சேனசுன பன்சல என்று மூன்று பௌத்த வணக்க ஸ்தலங்களும் நிலாவெளியில் ஒரு பௌத்தரே வசிக்கும் நிலையில் அங்கு கண்டல் காடு புராண ரஜமகா விகாரை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த பௌத்த வழிபாட்டிடங்கள் பெருமளவானவை கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த சமயத்தில் அமைக்கப்படுவதற்கு நிதியும் அனுமதியும் வழங்கப்பட்டன என்று கூறப்படுகின்றது.

குச்சவெளி பிரதேச செயலர் பிரிவில் 13 ஆயிரத்து 660 இஸ்லாமியர்களும் 4 ஆயிரத்து 552 இந்துத் தமிழர்களும் வாழ்கின்றனர். இதில், 14 விகாரைகள் அல்லது பௌத்த வழிபாட்டிடங்கள் தமிழர்கள் வாழும் பகுதிகளிலும், 9 விகாரைகள் அல்லது வழிபாட்டிடங்கள் அமைக்கப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றது.

தமிழ் பேசும் மக்கள் அதிகளவில் வாழ்ந்த திருகோணமலை மாவட்டத்தில் 1947 ஆம் ஆண்டு கந்தளாய் குடியேற்றத் திட்டம் முதல் காலத்துக்கு காலம் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. திட்டமிட்ட வகையில் குடிப்பரம்பல் மாற்றியமைக்கப்பட்ட இந்த மாவட்டத்தில் தற்போது தமிழ் மக்கள் சிறுபான்மையினராக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கஜேந்திரகுமாரின்...

செயல்பாடுகளைக் கண்டித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படு கிறது", என்று போராட்டத்தில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

இதனிடையே, கஜேந்திரகுமார் எம். பியின் வீட்டுக்கு நேற்றைய தினமும் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர், கலகலமடக்கும் பொலிஸாரும் குவிக்கப்பட்டு பாதுகாப்பு வழங்கப்பட்டது.

பேரணியாக வந்தவர்களை பொலிஸார் தடுத்து நிறுத்தியிருந்தனர். கஜேந்திரகுமாரின் வீட்டுக்கு அருகில் செல்வதற்கு இடமளிக்கவில்லை. நீதிமன்ற தடை உத்தரவையும் பெற்றிருந்தனர். சுமார் ஒரு மணிநேரம் அங்கிருந்த பின்னர் கம்மன்பில அணியினர் கலைந்து சென்றனர். (ஐ)

## அரசியல்...

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன.

அவர் மேலும் கூறுகையில்,

"சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் குழப்பமா? கட்சியின் ஆண்டு விழா திட்டமிட்டவாறு நடைபெறுமா? என ஊடகவியலாளர்கள் பலர் என்னிடம் கேள்விகளைத் தொடுத்து வருகின்றார்கள்.

ஒவ்வொரு கட்சிக்குள்ளும் சிறிய, பெரிய பிரச்னைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்னைகளுக்கு கட்சிகளின் தலைமைகள் தீர்வுகளைக் காணும். நான் சிறீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர். எனவே, எமது கட்சிக்குள் பிரச்னைகள் இருந்தால் அதனை நான் தீர்த்து வைப்பேன். வெளியில் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு இல்லை.

இலங்கை அரசியல் களத்தில் பெரும் குழப்பங்களுக்குச் சதித்திட்டங்கள் வகுக்கப்படுகின்றன என்று எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. கட்சிகளின் உள்வீட்டு விவகாரங்களை ஆராயும் ஊடகவியலாளர்கள் பிரதான அரசியல் களத்தில் நடக்கும் - நடக்கப் போகின்ற விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

அரசியல் களத்தில் விரைவில் அதிரடி மாற்றங்கள் காத்திருக்கின்றன என்று அறியமுடிகின்றது. எனினும், நாம் மக்கள் நின்றே தீர்க்கமான முடிவுகளை எடுப்போம்." - என்றார்.

## இந்திய...

பேரில் போராட்டங்கள் நடந்தன. இந்த நிலையிலேயே மறவன்புலவு சச்சிதானந்தன் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்தி செய்திக் குறிப்பில்,

"இந்தியாவுக்கு எதிராக தமிழர்களின் வாக்கு வங்கியைப் பெருக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும் சிங்கள - பௌத்த இனவாதத்தை தூண்டி, அந்த வாக்கு வங்கியைத் தமதாக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும் இந்திய நலன்களுக்கு எதிராக இலங்கை மக்களைத் திருப்ப வேண்டும் என்ற நோக்கத்துடனும் நிகழ்ந்த பூகோள அரசியலின் முன்னெடுப்பே இன்று (நேற்று) உதய கம்மன்பில தலைமையில் நடந்த போராட்டத்தின் அடித்தளம்", என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக வடக்கு, கிழக்கு அரசியல்வாதிகள் கொழும்பில் சுதந்திரமாக வாழ்வது போன்று சிங்களவர்களும் வடக்கு கிழக்கில் சுதந்திரமாக வாழ வேண்டும். சிங்களவர்களின் உரிமை களை வென்றெடுக்க ஆரம்பமாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம். பியின் இல்லத்தின் முன்பாக ஈடுபடுவோம் என்று கடந்த திங்கட்கிழமை பிவித்ரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில எம். பி. போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# இரு பேருந்துகள் விபத்து 13 பேர் காயமடைந்தனர்!




கொழும்பு, ஓக. 27

கொழும்பு கண்டிவீதியில் இடம் பெற்ற பேருந்து விபத்தில் 13 பேர் காய மடைந்துள்ளனர்.

தனோவிட்ட கம்புரதெனியவீதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து வவுனியா நோக்கி சென்று கொண்டிருந்த தனியார் பேருந்து கண்டியிலிருந்து கொழும்புக்கு வந்துகொண்டிருந்த பேருந்துடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பத்து ஆண்கள் மூன்று பெண்கள் உட்பட 13 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

# ஈ. பி. எவ், ஈ. ரி. எவ். நிதியை பயன்படுத்த எதிர்ப்பு தெரிவித்து நாளை போராட்டம்!

யாழ்ப்பாணம், ஓக. 27

உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கு ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பவற்றை பயன்படுத்த முனைவதற்கு எதிராக யாழ். மாவட்ட செயலகம் முன்பாக தொழிற்சங்க போராட்டம் நடைபெறவுள்ளது.

நாளை மதிய உணவு இடைவேளையின்போது (12 - 01 மணி) இந்த போராட்டம் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில்

பல்கலைக்கழக ஊழியர் சங்கம், யாழ் பல்கலைக்கழகம், வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம், அகில இலங்கை அபிவிருத்தி, உத்தியோகத்தர் சங்கம், பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கம், வடக்கு மாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் சங்கம், வட மாகாண கால்நடை போதானாசிரியர் சங்கம், சிறீ லங்கா தபால் தொலைதொடர்பு சேவை உத்தியோகத்தர் சங்கம், வட மாகாண அரச சாரதிகள் சங்கம், வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழில் சங்கம் என்பன கூட்டாக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

அமைச்சரவையில் 2023 ஜூலை 01ஆம் திகதி நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட பரிந்துரையின் மூலமாக ஊழியர் சேமலாப நிதி - ஈ. பி. எவ். மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதி - ஈ. ரி. எவ். நிதிகளை உள்நாட்டு கடன் மறுசீரமைப்பிற்குப் பயன்படுத்த அரசாங்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தினை நடைமுறைப்படுத்த முனைவதன் மூலம் ஈ. பி. எவ், ஈ. ரி. எவ். நிதியங்களில் கணக்குகளைக் கொண்டுள்ள சுமார் 25 இலட்சம் உழைக்கும் வர்க்க அங்கத்தவர்களின் ஒரேயொரு ஓய்வூதியச் சேமிப்பினை அவர்களின் அனுமதியின்றி பயன்படுத்த அரசாங்கம் முயல்கின்றது.

பொருளாதார நிபுணர்களின் எச்சரிக்கையின்படி இந்த உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டம்இ. பி. எவ், இ. ரி. எவ். கணக்குகளின் மீது சுமத்தப்படும்போது அனைத்து ஊழியர்களினதும் (இ. பி. எவ், இ. ரி. எவ். அங்கத்தவர்களினதும்) சேமிப்புக்களில் இருந்தும் அரைவாசித்தொகை (50வீதம்) எதிர்வரும் 16 வருட காலப்பகுதியில் இல்லாமல் போகும் அபாயம் உள்ளது. இதன் தொடர்ச்சியாக அரச ஊழியரின் ஓய்வூதிய நிதியையும் இவ்வாறு கையாள அரசாங்கம் முற்படுகின்றது. இதன் மூலம் இ. பி. எவ், இ. ரி. எவ். அங்கத்தவர்களுக்கு நிதிரீதியான உடனடிப் பாதிப்பும் நீண்டகாலத்தில் முழுமையாக இவ்விரு நிதிகளும் கிடைக்கப்பெறாத அபாய நிலையும் உள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் (நாளை) திங்கட்கிழமை நாடளாவிய ரீதியில் அடையாள போராட்டங்கள் பல இடங்களில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. அந்தவகையில் யாழ்ப்பாணத்திலும் இங்குள்ள தொழிற்சங்கங்கள் இணைந்து யாழ். மாவட்டச் செயலகம் முன்பாக மதியம் உணவு இடைவேளையின்போது (12 - 01 மணி) ஒரு அடையாள போராட்டம் ஒன்றை மேற்கொள்ள தீர்மானித்திருக்கின்றோம்.

எனவே, இதற்கு அனைவரது ஆதரவினையும் வேண்டி நிற்பதோடு, மேற்படி இ. பி. எவ், இ. ரி. எவ். மற்றும் ஓய்வூதிய நிதிக்கையாளல் மூலம் பாதிக்கப்படவிருக்கும் அரச, அரச மருவிய மற்றும் தனியார் துறை சார்ந்த அனைத்துத் தொழிலாளர்களையும், தொழிற்சங்கங்களையும், மக்களையும் இந்த அடையாளப் போராட்டத்தில் பங்குகொள்ளுமாறு அழைத்து நிற்கின்றோம். (ஐ)

## கடல்நீரை...

ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடுத்த வருட முற்பகுதியில் பணிகளை நிறைவு செய்ய முடியும் எனவும் சபை தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தில் நீர் குழாய்களை பொருத்துவதற்கான வேலைத்திட்டத்துக்கு விலைமனுக்களை பெற்றுக்கொள்வதற்கான முன்மொழிவு அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையின் அனுமதி கிடைத்தவுடன் விலைமனு கோரப்படுமென தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை தெரிவித்துள்ளது. (ஐ)

## ஐ.நா...

அமர்வு எதிர்வரும் செப்ரெம்பர் 5ஆம் திகதி முதல் 23ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

"நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் உலகளாவிய ஒற்றுமையை மீண்டும் உருவாக்குதல்" என்ற கருத்திட்டத்தின் கீழ் இம்முறை பொது சபைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதேவேளை, கியூபாவில் எதிர்வரும் செப்ரெம்பரில் நடைபெறவுள்ள குழு 77 (G77) பிளஸ் சீனா உச்சி மாநாட்டில் பங்கேற்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. கியூப பயணத்தின் பின்னர் ஜனாதிபதி அமெரிக்கா செல்லவுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 4வாரங்களுக்கே...

21 வீதமாகவும், மௌசாகலை நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு 35 வீதமாகவும், விக்டோரியா நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு 25 வீதமாகவும் குறைந்துள்ளது.

இதன்படி, 300 ஜிகாவாட்ஸ் மணிநேர நீர் மின்சாரத்தையே உற்பத்தி செய்ய முடியும். இதனிடையே அனல் மின் நிலையங்களில் இருந்து மின் உற்பத்தி 65 வீத அளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், சூரிய மற்றும் காற்றாலை மின்சாரம் மூலம் சுமார் 11 வீத மின்சார உற்பத்தி திறன் தேசிய கட்டமைப்பில் சேர்க்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# வட்டி வீதங்களை குறைக்க வங்கிகளுக்கு சுற்றறிக்கை

## இலங்கை மத்திய வங்கி அனுப்பியது

கொழும்பு, ஒக. 27

**அடகு கடனுக்கான வட்டி விகிதம் ஆண்டுக்கு 18 சதவீதமாக குறைக்கப்பட வேண்டும். கடனட்டைகள் மூலம் ரொக்க முன்பணத்துக்கு வசூலிக்கப்படும் வருடாந்த வட்டி விகிதம் 28 சதவீதமாக குறைக்கப்பட வேண்டும் இலங்கை மத்திய வங்கி சுற்றறிக்கை வெளியிட்டுள்ளது.**

சந்தை வட்டி விகிதங்களில் நிதி நிலைமைகள் கணிசமான அளவில் தளர்த்தப்பட்டபோதிலும் சில நிதி நிறுவனங்களின் கடன் வழங்கும் பொருட்களின் மீதான வட்டி விகிதங்கள் தொடர்ந்து மிகையாகவே உள்ளன என்று மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அத்துடன், தற்போதைய பணவியல் கொள்கை நிலைப்பாட்டுக்கு குறித்த தரப்பினர் இணங்கவில்லை எனவும் இது தனிநபர்கள் மற்றும் வணிகங்களுக்கு சவால்களை ஏற்படுத்துகின்றன என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன்படி, உரிமம் பெற்ற சகல வணிக வங்கிகளும் கடன் வட்டி விகிதங்களை மத்திய வங்கியின் சுற்றறிக்கைக்கு அமைய மாற்றியமைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய அடகு கடனுக்கான வட்டி விகிதம் ஆண்டுக்கு 18 சதவீதமாக குறைக்கப்பட வேண்டும். கடனட்டைகள் மூலம் ரொக்க முன்பணத்துக்கு வசூலிக்கப்படும் வருடாந்த வட்டி விகிதம் 28 சதவீதமாக குறைக்கப்பட வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# தொழிலாளர் பங்கேற்பு வீதம் நாட்டில் அதிகரித்து வருகிறது

## விவசாயத்துறை மட்டும் வீழ்ச்சி

கொழும்பு, ஒக. 27

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் நாட்டில் தொழிலாளர் பங்கேற்பு வீதம் அதிகரித்து வருகிறது. அத்துடன், வேலையின்மை வீதம் குறைவடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தின் முதல் காலாண்டில், கைத்தொழில் மற்றும் சேவை துறையில் பணிபுரிபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்று மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதன்படி, தொழில்துறையில் ஈடுபடுபவர்கள் 26.7 சதவீதத்தாலும் சேவை துறையில் ஈடுபடுவோர் 47.8 சதவீதமாகவும் அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது விவசாயத் துறையில் தொழிலாளர் பங்கேற்பு வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. அது கடந்த வருடம் 28.2 சதவீதமாகவும், இந்தவருடத்தின் முதல் காலாண்டில் 26.7 சதவீதமாகவும் வீழ்சசியடைந்துள்ளது. (ஐ)

# மீனவர்கள் மீது தாக்குதல் 46 இலங்கையர்மீது வழக்கு

சென்னை, ஒக. 27

இந்திய கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த நான்கு இந்திய மீனவர்கள்மீது தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டில் இலங்கையர்கள் 46 பேர் மீது சென்னையில் வழக்கு பதிவு செய்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

வேதாரண்யம் கடலோர பாதுகாப்பு குழும பொலிஸார் 11 படகுகள் மற்றும் அடையாளம் தெரியாத 46 இலங்கையர்கள் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

அண்மையில், இலங்கை கடல் கொள்ளையர்கள் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தினர் என்று தமிழக ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# காடுகளுக்கு தீ வைப்பவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுங்கள்!

## வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பணிப்பு

கொழும்பு, ஒக. 27

விலங்குகளை வேட்டையாடுபவர்கள் மற்றும் காடுகளுக்கு தீ வைப்பவர்களுக்கு எதிராக சட்டத்தை கடுமையாக அமுல்படுத்துமாறு வனஜீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

காட்டுத் தீயை தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலான விசேட கலந்துரையாடலின் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன், காட்டுத்தீயை தடுப்பதற்கும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் அடங்கிய அமைச்சரவை பத்திரத்தை முன்வைக்குமாறும் முன்மொழியப்பட்டுள்ளது.

முப்படைகள், பொலிஸ், சிவில் பாதுகாப்பு படை, அனர்த்த முகாமைத்துவ நிலையம், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், வனப் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியன இணைந்து மாவட்ட மற்றும் தேசிய மட்டத்தில் பல வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வனப் பாதுகாப்பு மற்றும் காட்டுத் தீயை தடுப்பதற்கும் பாடசாலை மாணவர்களுக்கு கற்பிப்பது கல்வி அமைச்சின் நோக்கங்களில் ஒன்று என வனஜீவராசிகள் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

காடுகளை பாதுகாப்பதற்கும் அவற்றை சேதப்படுத்துபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் கிராம மட்டத்தில் நிறுவப்பட்டுள்ள சிவில் பாதுகாப்பு குழுக்களின் ஆதரவை பொலிஸ் திணைக்களம் பெறவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த நிலையில், காடுகளை அண்மித்த கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் திட்டமொன்றை கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் பிரதேச செயலகங்களுடன் இணைந்து அரச அதிகாரிகளின் அனுசரணையுடன் நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அவசர காலங்களில் தீயணைப்பு பிரிவுகளின் ஆதரவைப் பெறவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நாட்டின் இனப் பிரச்னைக்கு 13ஆவது திருத்தம் தீர்வல்ல!

## தேசிய மக்கள் சக்தி சொல்கிறது



கொழும்பு, ஒக. 27

ஜனநாயகம் வலுவடைய வேண்டுமெனில் அதிகா ரப் பகிர்வு என்பது அவசியம். அவ்வாறு ஜனநாயகம் வலுவடையும் போது தேசிய இனப்பிரச்னைக்கும் தீர்வு காண வழிபிறக்கும்." என்று ஆலோசனை வழங்கியுள்ளார் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான கலாநிதி ஹரினி அமரசூரிய.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் ஊடாக இனப்பிரச்னைக்கு தீர்வு காணப்படவில்லை. எனவே, புதியதோர் அரசமைப்பு ஊடாக அதற்கான விடை தேடப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

"மக்களுக்கு அதிகாரங்களை வழங்குவதே ஜனநாயகமாகும். அந்த அதிகாரம் என்பது வாக்குரிமையாக மட்டும் இருக்ககூடாது. அதேபோல அதிகாரப்பகிர்வின் மூலம் ஜனநாயகம் மேம்படும். அந்தவகையில் அதிகாரப்பகிர்வு கொள்கையை தேசிய மக்கள் சக்தி ஆதரிக்கும்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்னைக்கு தீர்வெனக் கூறப்பட்டாலும் அவ்வாறு தீர்வு எதுவும் எட்டப்படவில்லை. 13 முன்வைக்கப்பட்ட பின்னரே போர் உக்கிரமடைந்தது.

எனவே, அனைத்து இன மக்களுக்கும் சம உரிமை கிடைக்கும் வகையில், அனைவரும் சம அந்தஸ்த்துடைய பிரஜைகளாக வாழும் வகையில் தீர்வு பொறிமுறை அவசியம். அதற்கேற்ற வகையில் புதிய அரசமைப்பொன்று அவசியம். இதனை இதயசுத்தியுடன் செய்யக்கூடிய அரசொன்றும் அவசியம்." - எனவும் கலாநிதி ஹரினி அமரசூரிய குறிப்பிட்டார். (ஐ)

# வெளிநாடுகளில் கைதானவர்களை இலங்கைக்கு கொண்டுவர நடவடிக்கை!

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்

கொழும்பு, ஒக. 27

வெளிநாடுகளில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கை குற்றவாளிகளை உடனடியாக நாடு கடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

போதைப்பொருள் மற்றும் பாதாள உலக செயல்பாடுகளுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்களை உடனடியாக நாடு கடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இதற்கான ஆரம்பகட்ட பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. வெளிநாடுகளில் கைதுசெய்யப்பட்ட குற்றவாளிகள் ஏற்கனவே நாடு கடத்தப்பட்டுள்ளனர்.

மடகஸ்கரில் கைதுசெய்யப்பட்ட போதைப்பொருள் கடத்தல்காரர்களான 'ஹரக் கட்டா' மற்றும் 'குடு சலிந்து' ஆகியோர் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். தற்போது பாரிஸில் கைது செய்யபட்ட 'அஞ்சு'வை நாடு கடத்துவதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. வெளிநாடுகளில் கைது செய்யப்பட்டுள்ள இலங்கையின் அனைத்து குற்றவாளிகளையும் நாடு கடத்துவது தொடர்பில் அந்தந்த நாட்டு அதிகாரிகளுடன் கலந்து ரையாடி வருகின்றோம்.

இதேவேளை, நாட்டில் இடம்பெறும் குற்றச்செயல்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்களுக்கு வெளிநாடுகளில் வாழும் இலங்கை குற்றவாளிகளே தலைமை தாங்குகின்றனர். தற்போதைய சூழலில் நாட்டுக்குள் துப்பாக்கி கலாசாரம் முக்கியமாக தலைதூக்கியுள்ளது - என்றும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச பொலிஸாரின் தகவலுக்கு அமைய இது வரை இலங்கையை சேர்ந்த 148 குற்றவாளிகள் வெளிநாடுகளில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார். (ஐ)

# தேசிய மீலாதுன் நபி விழா மன்னாரில் நடத்த தீர்மானம்!

கொழும்பு, ஒக. 27

தேசிய மீலாதுன் நபி விழாவை இம்முறை மன்னார் - முசலியில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய மீலாதுன் நபி விழாவை மன்னார் முசலி பிரதேச செயலக பிரிவில் சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் மீளாய்வு செய்வதற்கான கூட்டம் நேற்று சனிக்கிழமை மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இராஜாங்க அமைச்சரும் அபிவிருத்திக் குழு தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் இந்த மீளாய்வுக் கூட்டம் நடைபெற்றது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.08.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.




# புற்றீசல் நிபுணர்களும் போலி அறிவுரைகளும்

டாக்டர் ஜி. ராமானுஜம்

இந்த உலகில் காற்றுக்கு அடுத்தபடியாக அங்கிங்கெனாதபடி எல்லா இடங்களிலும் கிடைப்பது அறிவுரைதான். உண்மையில், அறிவுரை கூறுவது மனித இனத்தின் மிக முக்கியமான சமூக உளவியல் செயல்பாடாகும். பிற உயிரினங்கள் எல்லாம் அடுத்த தலைமுறைக்குப் பெரும்பாலும் மரபணுக்கள் மூலமாகவே இந்த மாற்றங்களைக் கடத்துகின்றன.

மனித இனம் மட்டுமே மொழி மூலமாகப் பிற மனிதர்களுக்குத் தமது அனுபவங்களைக் கூறி அவர்களை மேம்படுத்துகிறது. எனவே, அறிவுரை கூறுவது காலம் காலமாகத் தொடர்ந்து கொண்டேதான் வந்திருக்கிறது. அறிவுரை தேவையான ஒன்றுதான். ஆனால், அறிவுரை சொல்பவர், அவர் சொல்வதன் மீதான நம்பிக்கை கேள்விக்குறி ஆவதுதான் இங்கு பிரச்சினையே.

### போலி நிபுணர்கள்

ஆரம்ப காலத்தில் அனுபவ அறிவின் மூலமே கொடுக்கப்பட்ட அறிவுரைகள் கொஞ்சம் கொஞ்சமாக அறிவியலாகிப் பல்வேறு துறைகளிலும் அறிவுரை கூறுவது தொழிலாக ஆனது. ஒருகட்டத்தில் வெறும் அனுபவஸ்தர் என்பதிலிருந்து அறிஞர், நிபுணர் என்ற நிலைக்குச் சென்று அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழங்கத் தொடங்குகிறார்கள் பலர். அவற்றின் நம்பகத்தன்மை பலமடங்கு அதிகரிக்கிறது. அவை அறிவியல்பூர்வமாகவும் அதன் நடைமுறை விதிகளுக்கு உள்பட்டதாகவும் ஆகின்றன. இங்கு இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. முதலாவதாக நிபுணத்துவம். இரண்டாவதாகத் தொழில்முறை அணுகுமுறை.

நிபுணத்துவமும் தொழில்முறை அணுகுமுறையும் சமநிலையில் இருக்க வேண்டும். அறிவுரையும் ஆலோசனைகளும் கூறுவது தொழிலாக மாறிய பிறகு நிபுணத்துவம் இல்லாத அல்லது போதாத துறைகளில் தங்களை நிபுணர்கள் எனக் காட்டிக்கொண்டு அத்தொழில் மூலம் வருமானம் ஈட்டுவது உண்டு. ஆம். போலி நிபுணர்கள் காலம்காலமாக எல்லாத் துறைகளிலும் இருந்துவருகின்றனர்.

இணையத்தின் வருகைக்குப் பின்னர் நிபுணர்களின் எண்ணிக்கை பலமடங்காகப் பெருகி உள்ளது - போலிகளின் எண்ணிக்கையும்தான். முன்பெல்லாம் ஒரு ‘நிபுண’ரை நேரில் போய்ச் சந்தித்து ஆலோசனை பெற வேண்டியிருந்தது. ஆகவே, அவரால் ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள் இருப்பவர்களை மட்டுமே ஏமாற்ற முடிந்தது. இப்போது இணையதளங்கள் மூலம் நாம் உலகின் எந்த மூலையில் இருக்கும் நிபுணராலும் ஏமாற்றப்படும் வசதியைப் பெற்றுள்ளோம். அதுவும் நம் வீட்டிலிருந்தபடியே சாவகாசமாக ஏமாறலாம்.

### ‘முன்னோர்கள் முட்டாள்கள் அல்லர்’

குறிப்பாக, கோவிட் பெருந்தொற்றுக்குப் பின்னர் எல்லா விஷயங்களும் இணையத்தில் கிடைப்பதுபோல், பல்வேறு வகுப்புகளும் இணையத்தில் தொடங்கப்பட்டன. எப்படி அறிவுரை கூறுவது அனுபவத்தைப் பகிர்வதாகத் தொடங்கி, ஒரு துறை சார்ந்த அறிவியலாக மாறி அறிவுரை கொடுப்பவர்கள் நிபுணர்களாக ஆனார்களோ அதே போன்றுதான் இணையத்தில் ஆரம்பத்தில் அனுபவங்களைப் பகிரும் பதிவுகள், காணொளிகளைப் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தனர். இவை பெரும்பாலும் ‘முன்னோர்கள் என்ன முட்டாள்களா?’ வகை அறிவுரைகள். பெரும்பாலும் உணவு - மருத்துவக் குறிப்புகள், வாழ்க்கைத் தத்துவங்கள், உளவியல் போன்றவை.

பின்னர், அவற்றுக்குக் கிடைத்த வரவேற்பைப் பார்த்ததும் கொஞ்சம் கொஞ்சமாகத் தொழில் முறையில் இவற்றைச் செய்ய ஆரம்பித்தனர். தங்களது தளங்களுக்குச் சந்தாதாரராகச் சொல்லிக் காணொளிகளைக் காண வைத்து வருவாய் ஈட்டிவந்தனர். இத்தொழிலில் பலரும் இறங்கியிருக்கிறார்கள்.

### பயனர்களுக்குப் பாதிப்பு

எல்லா நல்ல விஷயங்களையும் போன்றே இதிலும் பல இடங்களில் எல்லை மீறிப் போவதைப் பார்க்க முடிகிறது. மருத்துவத்தைப் பொறுத்தவரை எடை குறைப்பு, டயட் போன்ற விஷயங்களில் இவ்வாறு ஆலோசனை சொல்பவர்கள் நடமாட்டம் அதிகமாக இருக்கும். சரியான ஆலோசனைகள் சொல்பவர்கள் இருப்பதை மறுக்க முடியாது. எனினும், பல நேரங்களில் அறிவியல்பூர்வமற்ற தவறான ஆலோசனைகளைக் கேட்டு உடல்நலம் பாதிக்கப்படுபவர்களைப் பரவலாகக் காணலாம்.

அடுத்ததாக, உளவியல் ஆலோசகர்கள் என்ற பெயரில் பல நிபுணர்கள் இருக்கிறார்கள். ஆளுமையை முன்னேற்றும் பயிற்சி வகுப்புகள் தொடங்கிப் பல்வேறு பயிற்சி வகுப்புகள், ‘முப்பது நாளில் மார்ட்டின் லூதர் கிங் போல் பேசுவீர்கள்’ என விளம்பரம் செய்யும் பேச்சுப் பயிற்சி வகுப்புகள், ‘அடுத்த ஐன்ஸ்டைன் உங்கள் குழந்தைதான்’ என ஆசை காட்டும் அறிவியல் பயிற்சி வகுப்புகள், இன்னும் டேட்டிங் போக, காதலிக்க என ஏராளமான விஷயங்களுக்கு ஆலோசனைகளும் வகுப்புகளும் கொட்டிக் கிடக்கின்றன.

துணிகளை மடித்து வைப்பதற்குக் கூட வகுப்புகள் இருக்கின்றன. சில பயிற்சி வகுப்புகளின் முடிவில் வழங்கப்படும் வசீகரமான சான்றிதழ்கள் இவற்றுக்குக் கூடுதல் கவர்ச்சியைத் தருகின்றன. குழந்தை வளர்ப்பு குறித்துப் பெற்றோர்களுக்கு வகுப்பு நடத்திவரும் பெண் ஒருவர், தன் எட்டு வயது மகளுடன் ஆபாசப்படங்களைப் பார்த்ததாகச் சமீபத்தில் தெரிவித்திருந்தார். இது போன்ற அறிவுரைகள் சமூகத்தில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்திவிடுகின்றன.

### தாக்கம் செலுத்துபவர்கள்

இங்குதான் சாதாரண அறிவுரைக்கும் உண்மையாகவே தொழில்ரீதியான நிபுணர்கள் வழங்கும் அறிவுரைக்கும் வேறுபாடு இருக்கிறது. தேர்வு எழுதுவதற்கு முன் தயிரில் சர்க்கரை கலந்து சாப்பிட்டால் நன்றாகத் தேர்வு எழுதலாம் எனப் பக்கத்து வீட்டுப் பாட்டி சொன்னால் அதை ஓரளவுதான் நம்புவோம். அதுவே நிபுணர் ஒருவர் சொன்னால் அப்படியே கண்மூடித்தனமாக நம்பிவிடுவோம். தேர்வு நுழைவுச் சீட்டு வாங்குவதற்கு முன்பே தயிரையும் சீனியையும் வாங்குவோம். இந்த நிபுணர்கள் நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைத் தீர்மானிப்பவர்களாக ஆகிறார்கள், இவர்களை ஆங்கிலத்தில் இன்ஃப்ளூயன்ஸர்கள் (Influencers) என்கின்றனர்.

முன்பெல்லாம் எந்த விஷயமாக இருந்தாலும் அதைப் புத்தகத்திலோ நாளிதழிலோ அச்சில் பார்த்து விட்டால் அதை அப்படியே மக்கள் நம்பிவிடுவார்கள் என்பார்கள். இப்போது இணையத்திலோ காணொளி வடிவிலோ ஒரு விஷயத்தைச் சொன்னால் அதை அப்படியே நம்பிவிடுகிறார்கள்.

இந்த இடத்தில் முக்கியமான ஒரு விஷயத்தையும் சொல்லியாக வேண்டும். அறிவும் நிபுணத்துவமும் யாருடைய தனிப்பட்ட உரிமையோ சொத்தோ கிடையாது. நாங்கள் மட்டும்தான் நிபுணர்கள், எங்களுடைய அறிவுரைகளை மட்டுமே அப்படியே நம்ப வேண்டும் எனச் சொல்வதும் ஒருவகை அதிகாரம்தான்.


இணையதளங்களின் பெருக்கம் மனிதகுலத்துக்குச் செய்த பெரும் கொடை, அறிவு என்பதை எல்லோருக்கும் எட்டும் வண்ணம் எளிதாகக் கிடைக்கச் செய்தது. கூடவே, ஒரு நிபுணர் சொல்வதை நம்மால் உண்மைதானா என உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். இணையத்தின் தாராளத்தன்மை வரவேற்கத்தக்கது.

நிபுணத்துவம் இருந்தும் பெரிய நிறுவனங்களைத் தொடங்க வாய்ப்பே இல்லாதவர்களுக்குத் தங்கள் நிபுணத்துவத்தின் மூலம் பொருளீட்டவும் இணையம் ஒரு பெரும் திறப்பாக இருக்கிறது. அதே போல் சுலபமாகவும் மலிவாகவும் தரமான ஆலோசனைகள் மக்களுக்குக் கிடைக்கப் பெரும் வாய்ப்பினைத் தருகிறது.

ஆனால், இணையதளத்தின் வளர்ச்சியே இது போன்ற போலிகளையும் ஊக்குவிக்கிறது. போலி நிபுணர்களின் ஆலோசனைகளிடமிருந்து தப்பிக்க வேண்டுமானால், மக்களுக்கு விழிப்புணர்வு அவசியம் தேவை. ஆலோசனை தருபவர்களின் நிபுணத்துவம், அவர்களின் கல்வி, அனுபவம் குறித்த தகவல்களை உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

அவர்களை நம்பிப் பெரும் முதலீடு செய்வது, வேலையை விடுவது, வெறும் வயிற்றில் எட்டு லிட்டர் தண்ணீர் குடிப்பது எனத் தடலாடியாக எதுவும் செய்வதற்கு முன் அந்த ஆலோசனைகளின் உண்மைத்தன்மையையும் சாத்தியங்களையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

இணையத்திலேயே இது குறித்து தேடிப் படித்து உண்மையைப் புரிந்து கொள்ள முடியும். மருத்துவம், பொருளாதாரம் உள்ளிட்ட எந்தத் துறையிலும் எல்லோருக்கும் பொதுவான ஆலோசனைகளை யாராலும் வழங்க முடியாது. துறைசார்ந்த உண்மையான நிபுணர்கள் தனிப்பட்ட முறையில் உங்களிடம் பேசி, பகுத்தாய்ந்து வழங்கும் ஆலோசனை கள்தான் நம்பகமானவை. ஆகவே, அடுத்த முறை ‘ஆன்லைன் மூலம் பைலட் ஆகும்’ பயிற்சி வகுப்பில் சேர்வதற்குமுன் கொஞ்சமேனும் யோசியுங்கள்!




# சாதனை வசூல்

நெல்சன் திலீப்குமார் இயக்கத்தில் ரஜினி காந்த், மோகன்லால், சிவராஜ் குமார், தமன்னா, ரம்யா கிருஷ்ணன், வசந்த் ரவி, மிர்ணா மற்றும் பலர் நடித்து வெளிவந்த படம் 'ஜெயிலர்'. அநிருத் இசையமைத்தார்.

கடந்த 10ஆம் திகதி திரைக்கு வந்த இந்தப் படத்துக்கு உலகமெங்கும் மக்கள் மத்தியில் வரவேற்பை பெற்று இரண்டு வாரங்கள் கடந்து திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடி வருகிறது.

இப்போது ஜெயிலர் படம் உலகளவில் 525 (இந்திய) ரூபாய் கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளதாக தயாரிப்பு தரப்பில் அதிகார பூர்வமாக அறிவித்துள்ளனர். இது பொன்னி யின் செல் வன், விக்ரம் படங்களின் வசூலை கடந்துள்ளது.



# அடுத்த நாயகன்?

செப்ரெம்பர் 7 வெளியாகவுள்ள ஷாருக் கானின் 'ஜவான்' படம், தனக்கு மிகப்பெரிய மரி யாதையை பெற்றுத்தரும் என உறுதியாக நம்பு கிறார் இயக்குநர் அட்லி. படத்தின் வெளியீட் டுக்கு முன்னரே வியாபார ரீதியான விஷயங்கள் ஷாருக் கானையே வியக்க வைத்திருக்கும் நிலை யில், படத்தின் வெற்றி தன் மீதான பார்வையைப் பெரிதாக்கும் என்கிறாராம் அட்லி. அடுத்த படத்தையும் ஹிந்தியில் எடுக்கவே ஆசைப்படும் அட்லி, அங்கிருக்கும் நாயகர்களையும் அணுகிப் பேசியிருக்கிறார். 'ஜவான்' வெளியீட்டுக்கு பிறகு, யார் அந்த ஹிந்தி நாயகன் என்பதை அறிவிப் பாராம் அட்லி.

# இறுதிகட்டத்தில் 800

இலங்கையின் புகழ்பெற்ற கிரிக்கெட் வீரரான முத்தையா முரளிதரன், சர்வதேச கிரிக்கெட்டில் 800 விக்கெட்டுகளுக்கு மேல் வீழ்த்தி சாதனை படைத்தவர் அவரின் இந்த சாதனை இன்னமும் முறியடிக்கவில்லை. தற்போது இவரின் வாழ்க் கையை மையமாக வைத்து '800' என்ற படம் தயாராகி வருகிறது.

இதில் முத்தையா முரளிதரனாக 'ஸ்லம்டாக் மில்லியனர்' புகழ் மதுர் மிட்டல் நடிக்கிறார். முத்தையா முரளிதரன் மனைவியாக மஹிமா நம்பியார் நடிக்கிறார். நரேன், நாசர், வேல ராம் மூர்த்தி, ரித்விகா, அருள் தாஸ், ஹரி கிருஷ்ணன், ஷரத் லோஹித்யா. உள்ளிட்ட பலரும் நடித்திருக் கிறார்கள்.

தற்போது படத்தின் இறுதிகட்ட பணி நடந்து வருகிறது. இந்த படம் தமிழில் படமாக்கப்பட் டது. தெலுங்கு, ஹிந்தி மற்றும் ஆங்கிலம் மொழி களிலும் வெளியிடப்படுகிறது.




# நட்சத்திரக் கூட்டம்

நடிகர் விஜய் அடுத்து வெங்கட் பிரபு இயக்கத் தில் தனது 68ஆவது படத்தில் நடிக்கிறார். இந்த படத்தை ஏ. ஜி. எஸ். நிறுவனம் தயாரிக்கின்றனர். யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார்.

இப்போது முன் தயாரிப்பு பணிகள் மற்றும் நடிகர், நடிகைகள் தெரிவு நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் இந்தப் படத்தில் முக்கிய கதா பாத்திரத்தில் நடிக்க பிரபுதேவா, மாதவன் ஆகி யோரிடம் பேச்சு நடைபெற்று வருவதாக தற் போது தகவல் வெளியாகியுள்ளது.

ஏற்கனவே ஜோதிகா, பிரியங்கா மோகன் என இரு கதாநாயகிகள் நடிப்பதாக கூறப்பட்டது. இது குறித்து அதிகாரபூர்வ அறிவிப்பு எதும் வெளி யாகவில்லை. மேலும் இந்த படம் அரசியல் தொடர்பான கதையாகவும் இருக்கலாம் என்கி றார்கள். ஆகவே, பல நட்சத்திரங்களின் படமாக இதை எடுக்க மேற்சொன்ன நடிகர்களை நடிக்க வைக்க பேச்சு நடக்கிறதாம்.






**திரைப்படம் - அடியே**
**இயக்கம் - விக்னேஷ் கார்த்திக்**
**இசை - ஜஸ்டின் பிரபாகரன்**
**நடிப்பு - ஜிவி பிரகாஷ்குமார், கௌரி கிஷன்**

அறிவியல் பூர்வக் கதை கள் தமிழ் சினிமாவில் அபூர்வமாகத்தான் வருகிறது. இந்த 'அடியே' காலபயணத்த அடிப்படையாகக் கொண்ட ஒரு அறிவியல் பூர்வக் கதை.


மாற்று உண்மை (Alternate Reality ), இணை பிரபஞ்சம் (Parallel World ) என சில நம்ப முடியாத விசயங்களை படத்தில் வைத்திருக்கிறார் இயக்குநர் விக்னேஷ் கார்த் திக். சுவாரசியமான கதை, திரைக்கதை, காட்சிகள் என படம் நகர்கிறது. ஓர் உலகத் தில் உதவாக்கரையாக இருக் கும் ஒருவன், இணையான உலகத்தில் திறமைசாலியாக இருப்பதுதான் படத்தின் கதை.

பெற்றோரை இழந்த ஜி. வி. பிரகாஷ்குமார் நண்பர் கள் தயவில் வாழ்ந்து கொண் டிருக்கிறார். அவருக்கு தன் னுடன் பள்ளியில் படித்த கௌரி கிஷன் மீது காதல். ஆனால், அதை சொல்லா மலேயே இருக்கிறார். அவரி டம் காதலைச் சொல்லலாம் என செல்லும் போது விபத் தில் சிக்கி, இணை பிரபஞ்சத்துக்குப் போய்விடுகிறார். அங்கு அவர் ஓர் இசையமைப் பாளர், அவரது மனைவியாக கௌரி கிஷன் இருக்க குழம் பிப் போகிறார் ஜி. வி. சில அனுபவங்களுக்குப் பிறகு மீண்டும் இந்த பிரபஞ்சத் துக்கு வருகிறார். வந்தால் கௌரி கிஷனை அவரின் நண்பரே ஏமாற்றி திருமணம் செய்ய இருக்கிறார். இந்த சிக்கலில் இருந்து அவர் எப்படி விலகினார், கௌரி கிஷனை கை பிடித்தாரா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

இயக்குநர் விக்னேஷ் கார்த்திக் 'கால பயணம்' என்பதை சுவாரசியமாகக் கொடுக்க முயற்சித்திருக்கி றார். இந்த உலகத்தில் இருப்பவர்கள் இணை உலகத்தில் வேறு விதமாக இருப்பார்கள் என்பதெல் லாம் புதிதாக உள்ளவை. அறிவியல் கதையாக இருந்தா லும் காதலை பற்றிய கதை யாகக் கையாண்டிருக்கிறார். சில நீளமான காட்சிகள் மட்டும் பொறுமையை சோதிக்கின்றன. உச்சக் காட்சிக்கு முன்பாக நம்மை நிறையவே குழப்பியிருக்கி றார். இணை உலகத்தில் ஜிவி பிரகாஷின் தோற்றத்தில் கொஞ்சம் மாற்றத்தைக் கொடுத்திருந்தால் இந்தக் குழப்பம் வந்திருக்காது.

நிஜமாக இல்லாத ஒரு கதாபாத்திரத்தை ஏற்று நடிப்பது ஒரு சவாலான விஷ யம். இந்த உலகத்தில் ஒரு கதாபாத்திரம், இணை உல கத்தில் வேறொரு கதாபாத்தி ரம் என சமாளித்தாக வேண் டும். இரண்டையுமே சவாலு டன் சமாளித்திருக்கிறார் ஜிவி. காதல் நடிப்பிலும், ஏக்கமான நடிப்பிலும் உருக வைக்கிறார்.

ஜிவியின் காதலியாக கௌரி கிஷன். அமைதியாக, பாந்தமாக இருந்தாலும் அவரிடம் ஏதோ ஒன்று இருக்கிறது, அதை நம்மை அவரின் கதாபாத்திரத்துக் குள் ஈர்க்கிறது. ஜிவி, கௌரி இவர்கள் இருவரை சுற்றியே மொத்த படமும் நகர்கிறது.




இந்த உலகத்தில் ஆராய்ச்சியாளராக, இணை உலகத்தில் சினிமா இயக்குநராக நடித்திருக்கிறார் வெங்கட் பிரபு. ஜிவி, கௌரிக்குப் பிறகு படத்தில் இவருக்குத் தான் கொஞ்சம் முக்கியத்துவம். ஜிவியின் நண்பனாக ஆர். ஜே. விஜய், அவ்வப்போது வந்தாலும் கொஞ்சம் சிரிக்க வைக்கி றார். மற்றொரு நண்ப ராக வந்து கொஞ்சம் அதிர்ச்சி யைத் தருகிறார் மதுமகேஷ்.

ஜஸ்டின் பிரபாகரன் பின்னணி இசை படத்திற்கு பலம் சேர்க்கிறது. பாடல் களில் அவர் இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம். கோகுல் பினாய் ஒளிப்பதிவு தரம். குழப்பம் ஏற்படாத வகையில் படத்தைத் தொகுத் திருக்கிறார் எடிட்டர் முத்தை யன். ஆனாலும், உச்சக்காட்சி யில் குழம்பிப் போவது தனிக் கதை.

புதிதாக முயற்சித்திருக்கி றார்கள். இன்னும் கொஞ்சம் முயன்றிருந்தால் முத்திரை பதிக்கும் படமாக அமைந் திருக்கும்.



# மீனவ பெண்ணாகும் கீர்த்தி

நாகசைதன்யா நடிப்பில் சில மாதங்களுக்கு முன் "கஸ்டடி" என்ற படம் வெளியானது. வெங்கட்பிரபு இயக்கிய இந்த படம் தோல்வி அடைந்தது. அடுத்த படத்தை மிகப்பெரிய வெற்றி பெற்ற கார்த்திகேயா, கார்த்திகேயா 2 படங்களை இயக்கிய சந்து மொன்டேட்டி இயக்குகிறார்.

மீனவர்களின் வாழ்க்கை பின்னணியில் உருவாகி றது இந்தப் படம். இந்த படத்தில் நாயகிக்கும், நாயகனுக்கும் சமமான பங்களிப்பு இருப்பதால் நாயகி தேர்வில் அதிக தீவிரமாக ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில் கீர்த்தி சுரேஷ் இப்போது ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

# போராட்டம்...!



தன்னை டெஸ்ட் அணியிலிருந்து நீக்கியது தன் மீதே தனக்கு சந்தேகத்தை எழுப்புகிறது என்றும், அது வெறுப்பையும், சலிப்பையும் தந்தாலும் இந்திய டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு பங்களிப்பு செய்ய தன்னிடம் இன்னும் நிறைய கிரிக்கெட் எஞ்சி இருக்கிறது என்றும் உணர்கிறார் புஜாரா. இதனை அண்மையில் அவர் பங்கேற்ற நேர்காணல் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

103 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி உள்ள புஜாரா, கடைசியாக ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக ஜூன் மாதம் நடைபெற்ற ஐசிசி உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் ஆடினார். அதில் சோபிக்கவில்லை. ஆனால், இவர் மட்டுமா சோபிக்கவில்லை? தோற்றால் யாரையாவது நீக்கி கண் துடைப்பு செய்ய வேண்டும். அதற்கான பலிகடாவாக இவரை உட்கார வைத்து விட்டனர். கேட்டால் புஜாராவைக் கடந்து செல்கிறோம் என்பார்கள்.

ஆனால் கோலியை கடந்து செல்கிறோம், ரோகித் சர்மாவை கடந்து செல்கிறோம் என்று ஒரு போதும் கூற மாட்டார்கள். ஏனெனில், புஜாராவுக்கு அவர்கள் அளவுக்கு ஐபிஎல் மற்றும் வணிக ஆதரவுக் குரல்கள் அறவே இல்லை என்பதுதான் உண்மை.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் 2021-23 சுழற்சியில் புஜாரா 928 ரன்களுடன் 2ஆவது இடத்தில் இருக்கிறார். முதலிடத்தில் விராட் கோலி 932 ஓட்டங்களுடன் இருக்கிறார். ஆனால், இருவரது சராசரியும் 32 தான். இந்தியாவின் முதல் 2 வீரர்களின் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் சுழற்சி சராசரி 32 தான் எனும் போது ஒருவரை அணியிலிருந்து தூக்கி விட்டு இன்னொருவரை வைத்திருப்பதன் இரகசியம் கோலியின் வர்த்தக உடன்படிக்கைகளே என்பது பலரும் அறிந்ததே.

இன்னொரு புள்ளி விவரம் கோலி 70க்கும் அதிகமாக ஓட்டங்கள் எடுத்த டெஸ்ட் போட்டிகளில் இந்தியா 18இல் வென்று 10இல் தோற்றுள்ளது. இதை புஜாராவுடன் ஒப்பிடுகையில் 34 டெஸ்ட் போட்டிகளில் புஜாரா 70, ஓட்டங்களை எடுத்த போது 23இல் வென்று 6 டெஸ்ட் போட்டிகளில் இந்தியா தோற்றுள்ளது என்கிறது தரவு.

தற்போது சசெக்ஸ் அணிக்காக இங்கிலாந்து கவுன்ட்டி கிரிக்கெட்டில் ஆடி வரும் புஜாரா, அங்கு அளித்த நேர்காணல் ஒன்றில் கூறியிருப்பதாவது: "கடந்த சில ஆண்டுகளில் ஏற்றமும், இறக்கமும் இருந்தன. ஆனால், 90 டெஸ்ட்களில் ஆடிய பிறகும் உங்களை நீக்க முடியும் என்றால் நீங்கள் இன்னும் உங்களை நிரூபிக்க முடியும் என்ற அர்த்தமும் அதில் தொனிக்கிறது என்றுதானே பொருள். நான் அந்த டெஸ்ட் அணியைச் சேர்ந்தவன் என்று நான் நிரூபிக்க வேண்டும். இன்னமும் கூட நான் நிரூபிக்கக் கடமை உள்ளவனாக ஆக்கப்பட்டுள்ளேன். இது ஒரு வித்தியாசமான சவால்.

ஆனால், இதுவே வெறுப்பையும், சலிப்பையும் உண்டாக்குகிறது. 90 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 5,000 - 6,000 ஓட்டங்கள் எடுத்த பிறகும் நாம் நம்மை நிரூபிக்க கடமைப்பட்டுள்ளோம் என்பது எளிதானதல்ல. சில வேளைகளில் இது நம் ஈகோவில் புகுந்து விளையாடுகிறது. சர்வதேச மட்டத்தில் வெற்றி பெற்ற போதிலும் இன்னும் நம் மீது சந்தேகம் இருக்கிறது என்றால் அதனால் என்ன பயன் என்று தோன்றுகிறது. மீண்டும் மீண்டும் நாம் நிரூபித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்று நிர்பந்திக்கப்பட்டால், அப்படி நிரூபிப்பது எந்த விதத்திலாவது பயன் தருமா, அதற்கு தகுதியுடையதுதானா இந்த நிரூபிப்பு என்ற கேள்வி எழுகிறது.

எனக்கு நானே சொல்லிக் கொள்கிறேன், நான் டெஸ்ட் கிரிக்கெட் ஆட்டத்தைச் சேர்ந்தவன் என்று. நான் நிறைய பங்களிப்பு செய்துள்ளேன், இன்னும் செய்யவும் நிறைய உள்ளது. என்னைப் பற்றி ஒரு சுவாரஸ்யமான புள்ளி விவரம் ஒன்று என்னிடம் தெரிவிக்கப்பட்டது. அதாவது நான் 70 - 80 ஓட்டங்கள் எடுக்கும் போட்டிகளில் 80 சதவீதம் போட்டிகளில் இந்தியா வெற்றி பெற்றுள்ளது என்பதே அது. அல்லது நாம் அந்த டெஸ்டை தோற்கவில்லை என்றும் கூறலாம். ஆகவே நான் ரன்கள் எடுக்கும் போது இந்திய அணி வெற்றியின் பக்கம் நிற்கிறது.

என்னுடைய கிரிக்கெட் வாழ்க்கையில் என்னை கடும் அழுத்தத்தில் தள்ளிய தருணங்கள் உண்டு. ஆனாலும் நாம் அணிக்காகவே ஆட வேண்டும். சுயநலத்துக்காக ஆடக்கூடாது. நம் அணியில் நம் இடத்துக்காக ஆடினால் நாம் சுயநலமிகள். நான் அணிக்கு பங்களிப்புச் செய்யவில்லை என்றால் நான் வீட்டில் இருப்பதை மகிழ்ச்சியுடன் விரும்புவேன். அதற்காக 20-30 ரன்கள் எடுத்து அவுட் ஆவது நோக்கமாக இருக்குமா என்ன? இன்னும் கூடுதலாக 20-30 ஓட்டங்களைச் சேர்த்து அணி வெற்றி பெறவில்லை எனில் அது இன்னிங்ஸ் ஆகுமா? இது எனக்கு தனிப்பட்ட முறையில் அணியில் என்னைத் தக்க வைக்க உதவும் ஆனால் அணிக்கு உதவாது. ஆகவே அணியில் இருப்பதென்றால் வெறுமனே இருப்பதல்ல. நாம் வித்தியாசத்தை ஏற்படுத்த வேண்டும்" என அவர் கூறினார்.





# 'சதுரங்க' ஆட்டம்

சதுரங்க உலகக் கிண்ணப் போட்டியின் இறுதிச்சுற்றின் சமநிலை தவிர்ப்பு சுற்றில் முதல் ஆட்டத்தில் கிராண்ட் மாஸ்டர் பிரக்ஞானந்தா தோல்வியடைந்தார். வெள்ளை காய்களைக் கொண்டு ஆடிய அவர், முதல் மூவாக தனது சிப்பாயை e4இல் நகர்த்தி தொடங்கினார்.

இந்த ஆட்டத்தை மார்டன் பிஷப் ஓப்பனிங்கில் இருவரும் கொண்டு சென்றனர். இதில் பிரக்ஞானந்தா தனது 17 ஆவது நகர்வுக்கு கிட்டத்தட்ட 6 நிமிடங்கள் யோசித்து தனது இராஜாவை h1இல் நகர்த்தினார். இதுவும் இறுதியில் இவருக்கு நேரம் குறைய ஒரு காரணமாக இருந்தது.

சமமாக சென்ற இந்த ஆட்டத்தில் பிரக்ஞானந்தா நிறைய நேரம் யோசித்து தனது நேர அளவைக் குறைத்துக் கொண்டார். இதனால் ஆட்டத்தின் இறுதியில் 42ஆவது மூவின் போது தனது சிப்பாயை a6இல் நகர்த்தித் தவறு செய்தார்.

அதை மேக்னஸ் கார்ல்சன் தவறவிடாமல் சரியாக பயன்படுத்தினார். மீண்டும் ஒரு முறைதான் ஆட்டத்தை முடிப்பதில் சிறப்பானவர் என்று கார்ல்சன் நிரூபித்தார். பிரக்ஞானந்தாவிற்கு நேரம் குறைவாக இருப்பதை பயன்படுத்திக் கொண்டு இறுதியில் தந்திரமாக விளையாடி வென்றார் மேக்னஸ் கார்ல்சன். இந்த வெற்றியோடு கார்ல்சன் 2 புள்ளிகளுடன் முன்னிலையில் வகிக்கிறார்.

இப்போது பிரக்ஞானந்தா அடுத்து நடக்கவிருக்கும் சமநிலை தவிர்ப்பில் கறுப்பு காய்களைக் கொண்டு கார்ல்சனை வீழ்த்த வேண்டும்.

இரண்டாவது சமநிலை தவிர்ப்பு ஆட்டத்தை சமன் செய்து கிராண்ட் மாஸ்டர் மேக்னஸ் கார்ல்சன் சதுரங்க உலகக் கிண்ணம் பட்டத்தைப் பெற்றார். இரண்டாவது ஆட்டத்தில் வெள்ளை காய்களைக் கொண்டு மேக்னஸ் கார்ல்சனும் கறுப்பு காய்களைக் கொண்டு பிரக்ஞானந்தாவும் விளையாடினார்கள். அதில் கார்ல்சன் முதல் நகர்வாக தனது சிப்பாயை e4-ல் நகர்த்தி தொடங்கினார். அதற்கு பிரக்ஞானந்தா தனது சிப்பாயை c5இல் நகர்த்தி விளையாடினார்.

இந்த ஆட்டத்தை கார்ல்சன் 'அலப்பின் சிசிலியன்' ஓப்பனிங்கில் கொண்டு சென்றார். கார்ல்சன் மிகத் தெளிவாக இந்த ஆட்டத்தில் இந்த ஓப்பனிங் ஆடினால் சரியாக இருக்கும் என்று கணித்து ஆடினார். இந்த ஓப்பனிங் வெள்ளை காய்களைக் கொண்டு விளையாடுபவர்களுக்கு சாதகமாக அமையும். இதில் கறுப்பு காய்களைக் கொண்டு விளையாடுவர்களுக்கு விளையாடி வெல்வது சிறிது கடினம். இந்த ஆட்டத்தை 22 நகர்வில் இருவரும் சமன் செய்தனர்.

இதன் மூலம் மேக்னஸ் கார்ல்சன் 2.5 புள்ளிகளுடனும் பிரக்ஞானந்தா 1.5 புள்ளிகளுடனும் இருந்தனர். ஒரு புள்ளி அதிகம் உள்ள காரணத்தால் கார்ல்சன் போட்டியின் வெற்றியாளராக மாறினார்.

# இந்தியா படகு, சீனா கேபிள் கார் திட்டம் திருமலையில் முதலிடுவதற்கு ஆர்வம்!

கொழும்பு, ஓக. 27

திருகோணமலையில் பல்வேறு திட்டங்களில் முதலீடுகளை மேற்கொள்ள இந்தியா தீவிர ஆர்வம் காட்டி வருவதுடன் அதற்கான பல கட்ட பேச்சுகளை இலங்கையுடன் நடத்தியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தில் திருகோணமலையில் இந்தியா மேற்கொள்ளவுள்ள முதலீடுகள் மற்றும் இலங்கையில் இந்தியா முன்னெடுக்க விரும்பும் திட்டங்கள் குறித்து ஆழமான பேச்சுகள் நடத்தப்பட்டன.

குறிப்பாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான எரிவாயு குழாய் இணைப்புத் திட்டம், நிலத் தொடர்பை ஏற்படுத்தும் திட்டம், இருநாடுகளும் இடையிலான கப்பல் போக்குவரத்தையும் விமானப் போக்குவரத்தையும் விரிவுபடுத்தும் திட்டங்கள், திருகோணமலை உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் இந்தியா முன்னெடுக்க விரும்பும் திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் இந்திய விஜயத்தில் இணக்கப்பாடுகள் எட்டப்பட்டிருந்தன.

ஜனாதிபதியின் இந்திய பயணத்தைத் தொடர்ந்து தொடர்ச்சியாக முதலீட்டாளர்களும் இலங்கையில் முகாமிட்டுள்ளனர்.

இந்நிலையில், கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை மையப்படுத்தி இந்தியா படகு சேவைகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளதுடன், அதற்கான பேச்சுகளும் முக்கிய கட்டத்தை எட்டியுள்ளதாக அறிய முடிகிறது.

கேரளாவில் முன்னெடுக்கப்படும் படகு சேவையால் பெரும் வருமானத்தை சுற்றுலாத்துறை மூலம் கேரள அரசாங்கம் பெற்றுக்கொள்கிறது. இலங்கையில் கிழக்கு கடல்பரப்பும் இயற்கை நிறைந்த பகுதியாக இருப்பதால் இந்திய அரசாங்கம் கேரள பாணியிலான இத்திட்டத்தை முன்னெடுப்பதில் ஆர்வம் காட்டி வருகிறது.

ஏற்கனவே, திருகோணமலையில் உள்ள எண்ணெய் குதங்களை மீள சுத்திகரித்து இயக்குவதிலும் இந்திய அரசாங்கம் ஆர்வங்காட்டி வருவதுடன், திருகோணமலை துறைமுகத்தையும் அபிவிருத்தி செய்யும் யோசனைகளை முன்வைத்துள்ளது.

மறுபுறும் திருகோணமலை துறைமுகத்தின் மீது அமெரிக்காவும் தமது ஆதிக்கத்தை செலுத்த பல்வேறு முயற்சிகளை கடந்தகாலத்தில் மேற் கொண்டிருந்தது.

இதேவேளை, சீனாவும் ஜப்பானும் கிழக்கு மாகாணத்தில் பல்வேறு முதலீடுகளை மேற்கொள்வதில் அவதானம் செலுத்தியுள்ளன.

திருகோணமலை Sober Island பகுதியில் கேபிள் கார் திட்டத்தை முன்னெடுக்கும் யோசனையை சீனாவின் முக்கிய நிறுவனமொன்று இலங்கை அரசாங்கத்திடம் முன்வைத்துள்ளதாக அறிய முடிகிறது. என்றாலும், இந்தத் திட்டத்துக்கான அனுமதிகள் இன்னமும் வழங்கப்படவில்லை.

அம்பாறை அறுகம் குடா கடலில் நீர் சறுக்கல் விளையாட்டுகளை ஜப்பான் அரசாங்கத்துடன் இணைந்து இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கவுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அண்மையில் ஜப்பானுக்கு மேற்கொண்ட விஜயத்தில் இந்த விடயம் தொடர்பில் ஆழமாக ஆராயப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது. (ஐ)

# சாகரவை பகிரங்க விவாதத்துக்கு அழைக்கிறார் நிமல் லான்சா!



கொழும்பு, ஓக. 27

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம், இலங்கையின் வரலாறு குறித்து தவறான கருத்துகளை கூறிவருவதற்கு கண்டனம் வெளியிட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா, உண்மையான வரலாறுகள் குறித்து கலந்துரையாட நேரடி தொலைகாட்சி விவாதமொன்றுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளார்.

எந்தவோர் அலைவரிசையிலும் தாம் சாகர காரியவசமுடன் விவாதிக்க தயாராக இருக்கிறார் என்றும் அவர் சவால் விடுத்துள்ளார்.

சாகர காரியவசம், புதிய கூட்டணிக்கு எதிராகவும் தனிப்பட்ட ரீதியில் தனக்கு எதிராகவும் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்.

இதுபோன்ற குற்றச்சாட்டுகளுக்குப் பகிரங்க பதில் அளிக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

பொதுஜன பெரமுன ஸ்தாபிக்கப்பட்ட போது இல்லாதவர்கள் தற்போது அதற்கு சொந்தக்காரர்களாக இருக்கின்றனர். இவர்கள்தான் கட்சியின் வரலாற்றை திரித்து பல்வேறு கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர். தேசிய பட்டியலில் வந்தவர்கள் வரலாற்றை திரித்து பேசுவதற்கு அவர் கண்டனத்தையும் வெளியிட்டுள்ளார்.



நிமல் லான்சா தலைமையிலான குழு, பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி சுயாதீனமாக இயங்குபவர்களை ஒருங்கிணைத்து பெரும் கூட்டணியொன்றை அமைக்கும் தீவிர முயற்சியில் ஈடுபட்டு வருகின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

